FIRST FORM READER

TAMIL

NEW SERIES

1033

ஐந்தாம் வாசகப் புத்தகம்

16 AUG 1932

REVISED AND IMPROVED
BY

PANDIT S. D. SARGUNAR, B.A.,
Lecturer in Tamil, Madras Christian College.

RISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA
S ALLAHABAD COLOMBO
1932

J3
O31,6 N32
149544

149544

PRINTED AT THE
DIOCESAN PRESS, VEPERY, MADRAS
1932—B5513.

1217
494.81186

16 AUG 1932

பொருளடக்கம்—CONTENTS

*செய்யுட்பாடம்—POETRY

பாடம் Lesson		பக்கம் Page
*1.	தெய்வ வணக்கம்—Invocation	1
2.	தானே தனக்கு சாட்சி—Self-witness	2
3.	உழைப்பு—On Labour	5
4	மூவகை மாணுக்கர்—Three Kinds of Pupils ...	8
5.	ஒரு நல்ல மருந்து!—A Good Medicine!	10
*6.	பிறப்பால் சிறப்பில்லை—Caste is No Merit ...	14
7.	‘தம்பொருள் என்ப தம்மக்கள்’—The Best Jewels ...	15
8.	முதலை—The Crocodile	16
9.	‘எனக்காக உழைப்பவன் எவன்!’—‘None Work for Me!’	18
10.	பரிகாசப் பட்சி—The Mocking Bird	20
*11.	செல்வத்தின் சிறப்பு—Uses of Wealth	23
12.	பெண் கல்வி—Female Education	24
13.	தன்னுயிர் அளித்த தாசன்—Self-sacrifice	27
14.	சிங்கம்—The Lion	29
15.	புத்திமான் பலவான்—Knowledge is Power ...	33
*16.	நாரை விடு தூது—The Crane-Messenger... ...	35
17.	ஆமை—The Tortoise	36
18.	தன் நலம் பாராட்டல்—Selfishness	38
19.	சரிபாதி!—A Good Half Share!...	39
20.	வழக்கிட்டு வறுமையடைதல்—Evils of Contention.	42
*21.	கல்வி—Study	43
22.	சூரியன்—The Sun...	44
23.	முக்குற்றங்கள்—Three Kinds of Sin	46

1217
494·81186

பாடம் Lesson		பக்கம் Page
24.	நோய்—Disease	48
25.	அகந்தையால் வரும் அழிவு—Pride and Fall.	49
*26.	உழவு—Tillage	51
27.	'செறுவொடு நிற்கும் சிறுமை'—Bullying	53
28.	கெடுவான் கேடு நினைப்பான்—The Biter Bit	55
29.	மக்கள் கடமை—Filial Duty	57
30.	பூமியின் தின கதி—The Earth's Daily Motion	59
*31.	முயல் சிங்கத்தை வென்ற கதை—The Hare Outwits the Lion	61
32.	வாழ்நாள் மூட்டை—The Bag of Days	63
33.	சீனர் பாடசாலை—A Chinese School	65
34.	விடாமுயற்சி—Preseverance	67
35.	தவளையும் சுண்டெலியும் — The Frog and the Mouse	69
*36.	'முயற்சி திருவினை ஆக்கும்'—Industry brings Happiness	72
37.	சிலந்திப்பூச்சி—The Spider	73
38.	பதவிக்கேற்ற கவலை — Every Condition has its Own Cares	75
39.	ஓநாயும் ஆட்டுக்குட்டியும் — The Wolf and the Lamb	76
*40.	உண்மையின் உயர்வு — The Nobility of Truthfulness	79
41.	சிங்கமும் வெள்ளாடும்—The Lion and the Goat	81
*42.	இனிய நாற்பது—Inya Narpathu (Selections.)	83
	செய்யுள் நூல்களின் வரலாறு — Some Account of the Poetical Selections	86
	செய்யுள் அரும்பத அகராதி—A Glossary or hard words occurring in the poetic selections	96

ஐந்தாம் வாசகப் புத்தகம்

தெய்வ வணக்கம்

(1)

'யானே பொய், என் நெஞ்சும்
பொய், என் அன்பும் பொய்
யானல், வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமோ?
தேனே! அமுதே! கரும்பின்
தெளிவே! தித்திக்கும்
மானே! அருளாய் அடியேன்
உனை வந்(து)உறும் ஆறே!'

(2)

'துய்யன், தண் அருள் வடிவினன்,
பொறுமையால் துலங்கும்
மெய்யன், என்(று)உனை, ஐயனே!
அடைந்தனன்; மெத்த
நொய்யன், நுண்ணிய அறிவிலன்,
ஒன்றைநூ றாக்கும்
பொய்யன் என்றெனைப் புறம்விடின்,
என்செய்வேன் புகலாய்!'

2. தானே தனக்கு சாட்சி

'திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி' என்று திருஞானசம்பந்த சுவாமிகள் சிறப்பித்துப் பாடியருளிய நாட்டிலே, கடற்கரையிலிருந்து நான்கு கல் தூரத்தில், கொற்கை என்னும் ஓர் சிற்றூர் இருக்கின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே, அது அங்குள்ள தாமிரபர்ணி ஆறு கடலொடு கலக்கும் இடத்தில், பெயர்பெற்ற துறைமுகப்பட்டினமாயும், பாண்டிய மன்னர் ஐவரில் ஒருவருக்குத் தலைநகராயும் விளங்கிற்று.

அக்கொற்கை மாநகரை ஆண்டுவந்த அரசரில் ஒருவர் குலசேகர பாண்டியர். அவர் அறிவும் கல்வியும் ஆண்மையும் ஊக்கமும் நிரம்ப உடையவர். உயிர்களுக்கு நெல்லும் உயிரல்ல, நீரும் உயிரல்ல, அரசனே உயிர் என்னும் உண்மையை அவர் அறிந்தவர். தம் குறைகளைக்கூற விரும்பித் தம்மிடம் வருவாரை அவர் உடனே கண்டு மலர்ந்த முகமும் இனிய சொல்லும் உடையராய் அக்குறைகளைக் கேட்டு, அவற்றை விரைந்து தீர்ப்பவர். தன் அருங்குழந்தை இரவில் அயர்ந்து கண் வளரும் காலத்தில், தன் கண்மணி இனிது துயில்கின்றதா என்று பலமுறையும் எழுந்து பார்க்கும் அன்புடைய அன்னையைப்போல, அவர் இரவுதோறும் மாறுவேடம் பூண்டு, தம் குடிகளின் நிலைமையை உணர்வதற்கு நகர்சோதனை செய்துவருபவர்.

இவ்வாறு பாண்டியர் நகர் சோதித்து வருகின்ற ஒருநாள் இரவில், ஒருவர் தம் மனைவியை நோக்கி, 'ஐந்தாறு மாதத்தில் நான் வந்துவிடுவேன். தனி வீடு என்றும், அடைப்பில்லாத வீடு என்றும் அஞ்சாதே. நமது குலசேகரப்பெருமான் அரசாட்சியில் அச்சம் என்பதும் உண்டோ?' என்று சொல்லி அவள் மனத்தைத் தேற்றிப்

புறப்பட்டுச் சென்றதை அவர் அறிந்தார். அந்நாள் முதற்கொண்டு அரசர் நாள்தோறும் இரவில் நகரிசோதனையை விரைவில் முடித்துவிட்டு, அவர் வீட்டின் புறத்தே விடியுமளவும் தங்கிக் காத்திருந்து, பின் தம் அரண்மனைக்கு மீள்வர். இது நிற்க.

மாதம் ஐந்தும் ஆயிற்று, ஆறும் ஆயிற்று, வெளியூருக்குச் சென்றவர் வரவில்லை. அவர் மனைவிக்கு நாளுக்கு நாள் கவலையும் பெருமூச்சும் அதிகரித்தது. ஒருநாள் நள்ளிரவில் அவள் தனது குழல்போன்ற மெல்லிய குரல் எடுத்துப் புலம்பவும் தொடங்கினள். புறத்தே பாதுகாத்திருந்த மன்னர் பெரிதும் மனமுருகி, தாம் மாறுவேடம் பூண்டிருத்தலை மறந்து, அவள் துக்கத்தைத் தணித்தல்வேண்டும் என்னும் நோக்கம் ஒன்றையே மேற்கொண்டவராய் எழுந்து, அம்மனையின் ஒட்டைக் கதவை மெல்லத் தட்டினார். உடனே அழுகை நின்றது. "யாரோ கதவைத் தட்டினார்கள்! நம் பெயர் சொல்லிக் கூப்பிடவில்லையே! நம் காதலர் 'பார்வதீ!' என்று அழைத்தல்லவோ தட்டுவர்! ஏழு மாதத்தில் நம்பெயரும் அவர் மனத்தைவிட்டும் வாயைவிட்டும் அகன்றுவிட்டதோ!" என்று பலவாறாக அவள் எண்ணங்கொண்டு சிறிதுநேரம் மயங்கினாள். என்றாலும், தன் நாயகர்மீதுள்ள அன்பு தன்னை முன்னே தள்ள, மெல்லச் சென்று, கதவிடையின் வழியே புறத்தே உற்று நோக்கினள். நோக்கலும், உள்ளமும் உடலும் ஒடுங்கி நடுங்கினள், வெயர்த்தாள், விழுந்தாள், எழுந்தாள். "ஐயவோ! 'நம்பெருமான் ஆட்சியில் அச்சம் என்பதும் உண்டோ?' என்று சொல்லி இந்தப் பாழ்மனையில் என்னை இருத்திச் சென்றீர்! இன்று அவ்வரசர் ஆணை என்னைக் காவாதுபோயிற்றே! என் செய்வேன்!" என்று வாய் திறந்து அலறி உள்ளே ஓடினள், கையால் முகத்தில் அறைந்து மறுபடியும் சோர்ந்து கீழே விழுந்தாள்.

அரசரும் மதிமயங்கி, 'தாங்குதற்கு அரிய கவலையால் கலங்கியழுத பெண்மகள் ஒருத்திக்கு அளவில்லாத அச்சமும் விளைத்துப் பெரும்பழி கொண்டோமே!' என்று துன்புற்று விரைய அரண்மனை புகுந்து வருந்திக்கிடந்தார். வரவர அவர் மனவேதனை கொஞ்சமும் குறைதலின்றி வளர்ந்துகொண்டேயிருந்தது. பொழுது புலர்ந்ததும், அவர் ஓர் ஒற்றனை அழைத்து அவ்வீட்டிற்குச் சென்று உளவு அறிந்துவரச் சொன்னார். சிறிது நேரத்தில் அவன் திரும்பிவந்து, வணங்கி, 'அரசே, அது கீரந்தையார் என்னும் ஒரு வறியவர் வீடு. அவர் தம் மனைவியைத் தனியே வைத்துவிட்டு வெளியூருக்குச் சென்றார். ஐந்தாறு மாதத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிப் போன அவர் ஏழுமாதமாகியும் வரவில்லை. நேற்று இரவில் கள்ளன் ஒருவன் வந்து கதவைத் தட்ட, அவனைக் கண்டு அந்தப் பெண்பிள்ளை அலறி விழுந்து அடிபட்டுப் படுக்கையாய்க் கிடக்கின்றாள். அவ்வளவு அடிபடவில்லை. அதிகமாக பயந்துபோனதாகத் தெரிகிறது. அவள் தகப்பனார் ஒரு பெரியவர் பாடு பார்த்துவருகிறார். இதுதான் நான் அறிந்துவந்த உண்மை' என்றான்.

ஒற்றன் உரைத்த சொற்கள் அரசருக்கு வெந்த ஒரு புண்ணில் வேல் நுழைந்ததுபோல இருந்தது. உடனே அவர், 'ஐயோ! இக் கையல்லவோ கதவைத் தட்டி இப் பழிகொண்டது!' என்று சொல்லித் தம் கூரியவாளை உருவி ஒரே வீச்சாகத் தம் இடது கையை வெட்டி எறிந்தார்.

ஒற்றன் ஓடி அமைச்சர் முதலியோரைக் கூவியழைக்க, அவரெல்லாம் பதைபதைத்து விரைந்துவந்து அரசர்க்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்து கவலையுற்றுப் போயினர். அந்நிலைமையில் அரசரைவிட்டுப் பிரிய மனம்வராமல் உடன் இருந்த முதல் அமைச்சர் நெடுநேரம் கழித்து, அரசர் தம் கையை வெட்டிக்

கொண்டதன் காரணத்தை அவரை வினவி அறிந்தார். அறிந்து, 'அரசே, நீர்தாம் கதவைத் தட்டியது என்று கண்டவர் ஒருவரும் இல்லையே! பின்னை இவ்வாறு செய்து கொள்ளலாமோ?' என்றார். உடனே அரசர் கண்சிவந்து அமைச்சரை நோக்கி, 'பிறர் காணவேண்டுமோ? நான் செய்த தவற்றை நானே கண்டேனே! வேறு சாட்சி வேண்டுமோ?' என்று சீறினார்.

> " 'எனக்குத் தக(வு)அன்(று)ஆல்' என்பதே நோக்கி,
> தனக்குக் கரிஆவான் தான்ஆய், தவற்றை
> நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும்; காணார்
> எனச்செய்யார் மாணா வினை."

3. உழைப்பு

உலகம் முதலியன ஓயாது சுழல்கின்றன. கடல்நீர் எப்போதும் அலைகின்றது. அந்நீர் இடைவிடாமல் ஆவியாக ஆகாயத்தில் எழுந்து மேகமாகி, மழையாகவும் ஆறுகளாகவும் ஊற்றுக்களாகவும் திரும்பித் தன்னிடத்தை நாடிப் பாய்ந்து நிற்கின்றது. இரத்தம் உயிர்களின் உடம்பில் ஓயாமல் ஓடுகிறது. காற்று எப்போதும் இயங்கிக்கொண்டும், எல்லாப் பொருள்களையும் பலவிதமாக மாற்றிக்கொண்டு மிருக்கின்றது. ஆகாயத்திலும் நிலத்திலும் உள்ள பொருள்கள் உயிர்களின் உடம்பிலும், அவ்வுடம்பிலுள்ள பொருள்கள் நிலத்திலும் ஆகாயத்திலுமாக இடைவிடாமல் மாறிமாறிச் செல்கின்றன. இவற்றையெல்லாம் நாம் சிறிது ஊன்றிப் பார்ப்போமானால், தாம் படைத்த ஒவ்வொன்றும் உழைத்தல்வேண்டும் என்பது கடவுளுடைய திருச்சித்தம் என்று நமக்குத் தெளிவாய்த் தோன்றும்.

உழைப்பின்றி உலகமில்லை. உழைப்பின்றி உயிருமில்லை. உலகத்திற் காற்றுச் செய்யவேண்டிய வேலையு

முண்டு; நீர் செய்யவேண்டிய வேலையு முண்டு. புழுவும் உழைத்தல் வேண்டும்; எறும்பும் உழைத்தல் வேண்டும்; மனிதனும் உழைத்தல் வேண்டும். எல்லாரும் எல்லா மும் உழைத்தாலல்லாமல் உலகமும் உயிரும் நன்ருக நடைபெரு.

கடவுள் உயிர்களுக்கு அருளியிருக்கின்ற அறிவிற்கும் உடல் அமைப்பிற்கும் ஏற்றவாறு, அவைகள் உலகிற் செய்யவேண்டிய வேலைகள் வேறுபடும். அற்ப அறிவும் குறைந்த உறுப்புக்களும் உடைய உயிர்களைவிட, சிறந்த அறிவும் நிறைந்த உறுப்புக்களும் உடைய உயிர்கள் அதிக வேலைசெய்யக் கடமைப்பட்டுள்ளன. எல்லா உயிர் களிலும் அறிவாலும் உடல் அமைப்பாலும் மானிடன் தலைமை பெற்றிருப்பதால், அவன் மற்ற எல்லாவற் றையும் விட நன்ருய் உழைத்தல்வேண்டும். ஆகை யால், உலகம் நன்ருய் நடப்பதற்கு ஏற்ற வேலைகளைத் தன்னுல் இயன்ற அளவு செய்யாமல் சோம்பியிருக்கின்ற எவனும் தெய்வத்திற்கு ஆகான் என்பது உண்மை. உல கத்தில் உழைத்துவரும் உயிர்களுக்கே உரிமையுடைய உணவு முதலியவற்றிற்குச் சோம்பேறி சிறிதும் அருகன் அல்லன். கள்வனுகவும் கொள்ளைக்காரனுகவுமே அவன் அவற்றை அநுபவித்து வருகின்ருன். அவனுல் அவன் குடிக்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் உண்டாகும் நஷ் டம் கொஞ்சமல்ல.

மனத்தைக் குரங்குக்கு ஒப்பிடுவது நமது நாட்டுப் பெரியோர் வழக்கம். அம்மனம் ஒருபோதும் சும்மா இராததே அதற்குக் காரணம். ஒருவன் நல்ல வழிக ளில் தன் மனத்தைச் செலுத்தி, நற்ருெழில்களைச் செய்துகொண்டிராவிட்டால், அது தீய வழிகளில் அவ னைச் செலுத்தி, தீத்தொழில்களைச் செய்துகொண்டிருக் கச் செய்யும். சோம்பேறியின் மனம் பேயின் பள்ளி யறை. சோம்பல் அப்பேயின் காதல் மனைவி. கொலை,

களவு, பொய், புறங்கூறுதல், பயனில்லாத சொற்சொல்லுதல் முதலிய பாவங்களெல்லாம் கடவுளுக்கும் நல்லோருக்கும் இடையூறு செய்யும்படி அத்தம்பதிகள் பெற்று வளர்த்துவிடும் பிள்ளைகள்.

சோம்பேறி தனக்காகும் காரியங்களையேனும் செய்து வருகின்றானா என்றால், அதுவுமில்லை. சோம்பலால் அவன் தன்னை அற்ப உயிர்களிலும் கடையனாக்கிக் கொள்ளுகின்றான். மண்ணில் மறைந்து கிடக்கும் நாங்கூழ்ப் புழுவும் அவனைக்காட்டிலும் சிறந்தது. அறிவிலும் அவயவங்களிலும் அது அவனைவிட எவ்வளவோ குறைந்ததாயிருந்தாலும், அது சிறிதும் சோம்பலாயிருப்பதில்லை. அது தன்னுடைய மிகவும் மெல்லிய உடம்பை வருத்தி நிலத்தில் நுழைத்து நின்று, தரையின் அடியிலுள்ள மண்ணின் வளப்பமுடைய அணுக்களைத் தன் உடல்வழியாகச் செலுத்தி, தரைமேற் கொண்டுவந்தும், தான் செய்த அளவற்ற துவாரங்களின் வழியாகக் காற்றுத் தரைக்குள் புகும்படி செய்தும், நிலத்தைப் பண்படுத்திப் பிறவுயிர்களுக்கெல்லாம் பெரிதும் நன்மை புரிந்துவருகின்றது.

மனிதருக்கு மிகவும் சிறந்ததாகிய சுவாதீனம் சோம்பேறிக்கு இருப்பதற்கு வழியில்லை. மனிதனுக்கு இவ்வுலகத்திற் கொடுக்கப்பட்டுள்ள காலம் மிகவும் கொஞ்சம் என்பதை அவன் உணர்வதுமில்லை. காலம் தன்னை விரைவிற் கொன்றுகொண்டிருக்கிறதை அறியாமல் அக்காலத்தைக் கொலைசெய்ய வகைதேடுகிறான். வேலை செய்யாமலிருப்பதே எல்லாவற்றிலும் பெரியவேலை என்னும் உண்மை அவனுக்குத் தெரியாது. தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடிப்பதால் உண்டாகும் மகிழ்ச்சியும், உழைத்து உண்பதாலும் உறங்குவதாலும் உண்டாகும் இன்பமும் அவனுக்குக் கிடையா. இரும்பு தேய்ந்து அழிவதைப் பார்க்கிலும், துருப்பிடித்து

விரைவில் அழிவதுபோல, அவன் உடம்பு விரைவிற் கெட்டு இறந்தொழிகிருன். இவ்வாறு, இம்மை மறுமை இரண்டையுமே அவன் ஒன்ருய் இழந்துபோகின்ருன்.

ஆகையால், ஒவ்வொருவரும் வேலையை—உலகத்தின் நன்மைக்கென்று தாம் செய்யவேண்டிய வேலையை—செய்துவரல் வேண்டும். வேலையே இன்பம். வேலையே உயிர். வேலையே கவலை தீர்க்கும் மருந்து. வேலையே காலத்தைப் பொன்னுக்கும் வேதி. வேலையே மனத்தில் தீமை புகாமற் காக்கும் வேலி. வேலையே மேலான நிலைமையில் ஏற்றிவிடும் ஏணி. வேலையே இவ்வுலகிலிருந்து பெயர் சொல்லும் பிள்ளை. வேலையே மேலுலகத்தின் வாயிலைத் திறந்துவிடும் திறவுகோல்.

4. மூவகை மாணுக்கர்

தலைமாணுக்கர், இடைமாணுக்கர், கடைமாணுக்கர் என மாணுக்கர் மூன்று வகைப்படுவர். தலைமாணுக்கர் அன்னப் பறவையையும் பசுவையும் போன்றவர். இடைமாணுக்கர் நிலத்தையும் கிளியையும் ஒத்தவர். கடைமாணுக்கர் இல்லிக் குடம், ஆடு, எருமை, பன்னுடை என்னும் இவற்றின் தன்மை உடையவர்.

பாலில்நீர்கலந்து அன்னத்தின் முன்வைத்தால், அது பாலை மாத்திரம்உறிஞ்சி உட்கொண்டு நீரை விட்டுவிடும் என்பர். அவ்வாறே, தலைமாணுக்கர் தாம் கற்கும் நூல்களும் ஆசிரியரும் சொல்லும் விஷயங்களில் பயன் தரத்தக்கவைகளை மாத்திரம் தம் மனத்திற்கொண்டு, முற்றும் பயனற்றவைகளை மறந்துவிடுவர். பசு மிகுந்த புல்லுள்ள இடத்தில் ஆவலாய் வயிரு மேய்ந்து, பின் ஓரிடத்திற் படுத்து, தான் உண்டதைச் சிறிதுசிறிதாக வாயில் வருவித்து நன்ருய் மென்று விழுங்கிப் பயனடையும். தலை

மாணுக்கரும் பல விஷயங்களும் நிரம்பிய நூல்களிடத்தும் ஆசிரியரிடத்தும் ஆவலுடன் நிரம்பக்கற்று, பின் தனியாக இருந்து, தாம் கற்றவைகளை ஒவ்வொன்ருய் எடுத்து ஆராய்ந்தறிந்துகைக்கொண்டுநன்மையடைவர்.

உழவர் எவ்வளவு பண்படுத்தி கவனித்து வருகின்ருர்களோ, அவ்வளவு விளைவைத் தருவதும், அவ்வாறு செய்ய அவர் சிறிது தவறிஞலும் பெரிதும் கெட்டுப் போவதும் நிலத்தின் இயல்பு. அப்படியே, ஆசிரியர் எவ்வளவு கற்பித்து, படித்துவருகின்ருர்களா என்று பார்த்துவருகின்ருர்களோ, அவ்வளவு கல்வியின்மேல் அக்கரை கொள்வதும், மற்றப்படி தம் பாடங்களை முற்றும் அசட்டை செய்வதும் இடைமாணுக்கர் தன்மை. கிளி தனக்குக் கற்பித்த சொல்லின் பொருளையும் உணராது, அச்சொல்லையன்றி வேருெரு சொல்லையும் அறியாது. இடைமாணுக்கரும் தாம் கற்கும் அல்லது கேட்கும் விஷயங்களை உணராமல் மனப்பாடம் செய்வர்; அன்றியும், தாம் கற்றதையும் கேட்டதையும் தவிர அவை சம்பந்தமான விஷயங்களைக் கேட்டாலுங்கூட சொல்லத் தெரியாது விழிப்பர்.

இனி, கடைமாணுக்கர் தாம் கற்றவைகளையும் கேட்டவைகளையும் அசட்டையாய் அப்போதைக்கப்போதே மறந்து என்றும் அறிவு நிரம்பாமையால், நீர் வார்க்க வார்க்க உடனே அதை ஒழுகவிட்டு, ஒருபோதும் நிறையாத இல்லிக்குடத்திற்கு சமமாவர். மேலும் 'இந்த ஆசிரியரைப்பார்க்கிலும் அந்த ஆசிரியர் நன்ருய்க் கற்பிப்பவர், இந்த நூலைப்பார்க்கிலும் அந்த நூல் நல்லது, இந்த இடத்தைப்பார்க்கிலும் அந்த இடம் படிப்பதற்கு ஏற்றது, கல்விகற்கும் இந்த முறையைப்பார்க்கிலும் அந்த முறை சிறந்தது' என்று எண்ணி, ஆசிரியரையும் நூலையும் இடத்தையும் முறையையும் மாற்றி மாற்றி, கடைசியிற் கல்வியொன்றும் அடையாமற் போவதால்,

'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்று நினைத்து, ஓடியோடி அங்கங்கே வாய்வைத்து, கடைசியில் வயிறு நிறையாமற் செல்கின்ற ஆட்டிற்கும் அவர் ஒப்பாவர். மற்றும், தமது ஆசிரியரிடம் ஏற்றபடி நடந்து, அவரது ஆசீர்வாதத்தையும் கல்வியோடு பெற்றுப் பெருமை அடையாமல், அவரிடம் அடக்கமின்றி நடந்து, அவரது வெறுப்பையும் கல்வியோடு பெற்றுச் சிறுமை அடைவதால், குட்டையில் மெல்ல இறங்கி, தெளிவுடன் நீரைக் குடித்து இன்புறுமல், அக்குட்டையில் ஓடி விழுந்து, கலங்கலுடன் நீருண்ணும் எருமைக்கும் அவர் ஒப்பாவர். கடைசியாக, அக்கடைமாணுக்கரைப் பன்னுடைகள் என்பது எதனுல் என்ருல், தேன் முதலியவற்றை வடிகட்டும்போது, அப்பன்னுடைகள் இனியவைகளை முற்றும் ஒழுகவிட்டுவிட்டு, செடிசெத்தைகளை மாத்திரம் பிடித்து வைத்துக்கொள்வதுபோல, அவர் தாம் கண்டவைகள் கேட்டவைகள் எல்லாவற்றிலும் நல்லவைகளை எல்லாம் மறந்துவிட்டு, தப்புத் தவறுகளைமாத்திரம் மறவாமற் கைக்கொள்வதாலேதான்.

இப்பாடத்தைக் கற்ற சிறுவனே! நீ எவ்வகை மாணுக்கன் ஆவாய்?

5. ஒரு நல்ல மருந்து

ஆஸ்திரியா தேசத்து இரண்டாம் சக்கரவர்த்தியாகிய 'யோஸேவ்' என்பவர் தமது இராச்சியத்தை யடுத்த விஷயங்களையும், பிரஜைகளின் நிலையையும் உள்ளவாறு நிதானித்தறியும்பொருட்டு அடிக்கடி மாறுவேடம்பூண்டு நகர் வலஞ்செய்வது வழக்கம். ஒருமுறை அவ்வரசர் சாதாரண வுடை தரித்தவராய் நகரசோதனை செய்துகொண்டு இராசவீதியில் வரும்போது, அழுககுடை தரித்த பன்னி

ரண்டு பிராயமுள்ள வோர் சிறுவன் தம்மை விடாது நெடுந்தூரந் தொடர்ந்துவருவதைக் கண்ணுற்று, 'என் சிறிய நண்பனே! உனக்கு வேண்டுவதியாது? என வினவினர். சக்கரவர்த்தியின் கண்களும் முகமும் அன்புமயமாய் விளங்கக்கண்ட அவ்விளைஞன், அவர் சக்கரவர்த்தியென்றுணராது, 'ஐயா! தாங்கள் என்னிடத்தில் மிகவும் அன்பாய்ப் பேசினதற்காக மிகவும் சந்தோஷிக்கின்றேன். எனக்குச் சிறிது உதவிபுரியத் தாங்கள் மறுக்கமாட்டீர்களென்று நம்புகின்றேன்' என்றனன். 'நீ கேட்டவாறு உதவிபுரிவது எனக்கு சந்தோஷமே; ஆயினும், இவ்வீதியில் நின்று நீ யாசிப்பதற்குக் காரணமென்ன? உன்னைப் பார்த்தால் யாசகன்போற் காணப்படவில்லையே!' என்று மன்னர் உரைத்தனர்.

உடனே சிறுவன் தன் கண்களில் நீர் ததும்ப, 'ஐயனே, யான் ஒருபோதும் யாசித்ததில்லை; என் தந்தை எம்மையாளும் சக்கரவர்த்தியின் பட்டாளத்தைச் சேர்ந்தவர்; அவர் சிறிது காலத்துக்கு முன்னர் நோய்வாய்ப்பட் டிறக்கவே நானும், என் தாயாரும், இரு சகோதரரும் இக்கதியடைந்தோம். இப்பொழுதும் என் தாயார் நோய்கொண்டு படுக்கையாய் இருக்கின்றனர். மருந்துக்காவது உணவிற்காவது ஒன்றுமில்லை. என்னிரு சகோதரரையும் அவருக்குத் துணையாக வீட்டில் விடுத்து, யான் யாசித்தேனும் ஆகாரம் சம்பாதிக்கக் கருதி இவ்விடம் வந்தேன். தங்களுக்குச் சித்தமிருந்தால் எனக்கு உதவிபுரியலாம்' என்றனன். இவையனைத்துங் கூறவே சிறுவன் கண்களினின்றுங் கண்ணீர் முத்துபோற் சொரிந்தது.

'நல்லது, நீ விசனப்படவேண்டாம். உனக்கு யான் சிறிது உதவிபுரிகின்றேன். முதலாவது உன் தாயாரை சொஸ்தப்படுத்தப் பார்' என்று சொல்லி அவன் கையில் ஒரு பவுன் கொடுத்து, 'நீ விரைவாய்ச்சென்று ஒரு வைத்

தியனை அழைத்துக்கொண்டுபோய் உன் தாயாருக்கு வேண்டியவற்றைச் செய்' என்று சக்கரவர்த்தி சொல்லி யனுப்பிவிட்டார். பணத்தைப்பெற்ற அச்சிறுவன் சக்கரவர்த்திக்கு அநேக வந்தனங்கூறி, வைத்தியரை அழைக்கச் சென்றனன்.

பையனுடைய இருப்பிடத்தை முன்னரே அவனிடத்தில் விசாரித்தறிந்த சக்கரவர்த்தி நேரே சிறுவன் வீட்டிற்குச் சென்றனர்.

சிறுவனுடைய தாய் படுத்திருந்த அறை மிகவும் சுத்தமாயும் ஒழுங்காயுமிருந்தது. அவள் ஒரு பழைய கட்டிலின்மேற் பரப்பியிருந்த வைக்கோற் படுக்கையின் மீது சயனித்திருந்தனள். பார்வைக்குச் சற்று இளமைப்பருவமுள்ளவளாய்க் காணப்பட்டாலும், அவள் முகம் நோயால் வாடியிருந்தது. வீட்டு சாமான்களனைத்தையும் சாப்பாட்டுக்காக விற்றுவிட்டமையால், அங்கு ஒன்றுங் காணப்படவில்லை. சக்கரவர்த்தியைக் கண்டவுடன் அவ்விதவையும் பிள்ளைகளும் ஆச்சரியப்பட்டனர். அவர் யாரென்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லையாயினும், அவருடைய உடுப்பிலிருந்து அவர் யாரோ பெரிய பிரபுவென்று நிதானித்துக்கொண்டனர்.

சக்கரவர்த்தி அவ்விதவை படுத்திருக்கும் படுக்கையண்டைபோய், 'அம்மா! யான் வைத்தியன்; நீங்கள் நோயுற்றிருப்பதைக் கேள்வியுற்று என்னாலியன்ற உதவி புரிய இவ்விடம் வந்தேன்' என்றார்.

'ஐயா! தாங்கள் செய்யப்போகும் வைத்தியத்திற்காகக் கொடுப்பதற்கு என்னிடத்தில் பணமில்லையே! நான் மிகவும் ஏழையாயிற்றே!' என்றனள் விதவை.

'நீங்கள் அதைக்குறித்துச் சற்றுங் கவலைப்படவேண்டியதில்லை. உங்களுக்கு சுகமும் பலமும் வரச் செய்வே

ளுயின் அதனுலுண்டாகும் சந்தோஷமே எனக்குப் போதியது' என்று கூறி, அவளுடைய நோயைக்குறித்தும், புருஷனுடைய மரணத்தைக்குறித்தும், அதனுலுண்டானவறுமையைக்குறித்தும் முற்றவிசாரித்தபின்னர், ஒரு காகிதத்துண்டில் சில வசனங்களை யெழுதி அவள் பக்கத்தில் வைத்துவிட்டு, 'இதோ! உங்களுக்கு வேண்டிய மருந்தை இக்காகிதத்தில் எழுதியிருக்கின்றேன்; உங்கள் குமாரன் வந்தவுடன் இதைக் காண்பியுங்கள்; நான் மறுமுறை இவ்விடம் வரும்போது உங்களை சுகத்தோடு காண்பேனென் றெதிர்பார்க்கின்றேன்' என மொழிந்து தமது அரண்மனைக்குச் சென்றனர்.

சிறிது நேரத்திற்குள் அவ்விதவையின் மூத்தகுமாரனுகிய மேற்கூறிய சிறுவன் ஒரு வைத்தியரையு மழைத்துக் கொண்டுவந்து, 'அம்மா! ஒரு அன்புள்ள பிரபு என் கையில் ஒரு பவுன் கொடுத்து உங்களுக்காக ஒரு வைத்தியரை அழைத்துத் தக்கவாறு வைத்தியம் செய்விக்கச் சொன்னுர். இதோ வைத்தியரை அழைத்து வந்திருக்கின்றேன். ஆகாரத்துக்கு வேண்டியவற்றையும் சித்தமாய் வாங்கி வந்திருக்கின்றேன்' என்ருன்.

'இப்பொழுதுதான் ஒரு வைத்தியர் இவ்விடம் வந்து என்னைப் பார்வையிட்டதன்பின் மருந்தும் எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றனர். இதோ இருக்கிறது அக்காகிதம்' என்று சொல்லிக் காகிதத்தை மகனிடத்திற் கொடுத்தனள் அவ்விதவை.

சிறுவன் காகிதத்தைப் படித்துப் பார்த்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனுய், 'அம்மா! இதுபோன்ற மருந்து வேறெருவைத்தியரும் எழுதமாட்டார்! இதில் நமக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி எழுதி நம் மன்னரே கையெழுத்து வைத்திருக்கின்றனர்! இங்கு

வந்தவர் நமது சக்கரவர்த்தியே!' என்றான். 'மகனே! உன்னை வீதியிற் கண்டு ஒரு பவுன் கொடுத்தவரும் அவராய்த்தான் இருக்கவேண்டும்' என்று அவ்விதவை கூறினள்.

மன்னவ னளித்த பவுனைக்கொண்டு வைத்தியஞ் செய்தமையால், அவ்விதவையும் சீக்கிரம் தேறி சுகமும் பலமுமடைந்தனள். அப்பணமும் செலவாக உபகாரச் சம்பளமும் கிடைத்தமையால், அவர்கள் இடுக்க ணொழிந்து இன்புற்றிருந்தனர். வறுமையினால் உடுக்கத் துணியும் உண்ண உணவுமற்றிருந்த அக்குடும்பத்துக்கு அரசன் அளித்த உபகாரச் சம்பளம் மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது.

6. பிறப்பால் சிறப்பில்லை

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறில்லை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே;
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே;
வழிபடு தெய்வமும் ஒன்றே. ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டு,
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து,
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து,

ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழையெனப் படாது.
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலம்தருமோ? பேதை யீரே!

(கபிலர் அகவல்.)

7. ‘தம்பொருள் என்ப தம்மக்கள்’

விலை உயர்ந்து மிகவும் சிறந்த விதம்விதமான வஸ்திரங்களும் நவரத்தினமிழைத்த விசித்திர ஆபரணங்களும் திரளாய் உள்ள சீமாட்டி ஒருத்தி, தன்னைப் போலும் பெருஞ் செல்வர் கூடும் சபையில் அனைவரும் மெச்ச மேற்படி வஸ்திராபரணங்களைத் தரித்துக் கொண்டு வருவது வழக்கம். அப்படிப்பட்ட சமயங்களில், பலரும் தன் விசேஷ அலங்காரத்தைக் கண்டு வியந்துகொள்வது அந்தப் பெருமாட்டிக்கு அளவிறந்த ஆனந்தமாயிருந்தது.

ஒருநாள் அந்தத் தலைவி ரோம் நகரத்தில் இருந்த ஒரு பிரபுவின் பத்தினியைக் கண்டு பேசிக் கொண்டாடப்போயிருந்த சமயத்தில், தான் பூண்டிருந்த விலையேறப்பெற்ற விசித்திரமான நகைகளை ஒவ்வொன்றாய்க் காண்பித்து, அவற்றின் விலை இவ்வளவென்று எடுத்துரைத்தனள். கண்ணைப் பகட்டும் அதிசய அலங்காரமுள்ள அணிகள் அனைத்தையும் தான் பாராட்டிச் சொல்லியும், தான் நினைத்தபடி அந்த ரோம் நகரத்துப் பெருமாட்டி · தன் ஆபரணங்களை வியந்துகொள்ளவில்லையென்று அவள் முகக்குறியால் அறிந்தனள்.

ஆனதுபற்றி, மேற்படி சீமாட்டிவசம் உள்ள நகைவகை தனது ஆபரணங்களிலும் சிறந்தவைகளாயிருத்தல் வேண்டுமென்று அனுமானித்து, “உங்களிடத்தில்

உள்ள அணிகலங்களை எனக்குக் காட்டவேண்டும்'' என்று கேட்டாள்.

அதற்கு அந்தப் பெருமாட்டி, 'அவை இப்பொழுது இவ்விடத்தில் இல்லை; இரண்டொரு நாழிகையில் அவைகள் இங்கு வந்து சேரும்; சேர்ந்தபின் காட்டுவேன்' என மொழிந்தனள்.

அவள் சொற்படி இரண்டு நாழிகைக்குள் குணத்தில் மிக்க சிறுவராகிய அவள் மைந்தர் இருவர் பாடசாலையினின்று திரும்பி வீடுவந்து சேர்ந்தனர். சேர்ந்தவுடன், மாதா அவர்களை அந்தச் செல்வி முன்னிலையில் விட்டு, 'இவர்கள்தாம் எனது ஆபாரணங்கள்!' என மொழிந்தனள்.

இதை வாசிக்கும் சிறுவரே! நீங்களும், வீட்டில் இருக்கும்பொழுதும், பாடசாலைக்குப் போய்க் கல்வி கற்கும்பொழுதும் செய்யவேண்டியவற்றைச் செய்து, தவிர்க்கவேண்டியவற்றைத் தவிர்த்து, சிறந்த ஒழுக்கமுள்ளவர்களா யிருப்பீர்களானால், உங்கள் தாய் தந்தையரும் உங்களை விலைமதித்தற்கரிய விசேஷ பூஷணங்களென்று மனம் மகிழ்ந்து கொண்டாடுவார்கள்.

8. முதலை

முதலை ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் கண்டங்களில் உஷ்ணமதிகரித்த இடங்களிலுள்ள பெருநதிகளில் சஞ்சரிக்கும். அது நிலத்திலும் நீரிலும் வாழும் இயற்கை உள்ளது. பிரமாண்டமான பல்லியின் சாயலுள்ள முதலை சிறுபான்மை இருபத்தைந்து அடிவரையிலும் நீண்டு பருத்திருக்கும். அதன் நிறம் புகர் நிறம். தடித்து கல்லைப்போலக் கடினமாகி அதன் முதுகெங்கும் நிறைந்துள்ள செதிள் துப்பாக்கிக் குண்டுக்கும் எளிதில் அசை

யாது. அதிற் படும் குண்டு தெறித்துப் போவதொழிய, அதில் ஏறுவது அரிது. இந்தக் காரணத்தால் முதலைக்கு வன்மீன் எனவும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது. முதலைக்கு மேல்வாயிலும் கீழ்வாயிலும் கூர்மையான பெரும் பற்கள் நிறையாக முளைத்திருக்கும். நீரில் வாழும் மச்ச ஜாதியைப்போல் எளிதாக நீந்தும்படி முதலையின் வால் இருபக்கமும் தட்டையாயிருக்கின்றது.

பெண்முதலை ஆற்றங்கரை மணலிலும் மடுக்கரை மணலிலும் இடுகிற முட்டை வாத்துமுட்டையிலும் சற்றுப் பெரிது. அது அம்மணலிலிருந்து ஆதித்த உஷ்ணத்தாற் குஞ்சு பொரிக்கும். ஓடு வெடித்து முட்டைக்குள்ளிருந்து வெளிப்படும் அந்தக்ஷணமே இளமுதலைகள் வழிகாட்டுவார் எவருமின்றி ஜாதி இயற்கையால் தண்ணீர்க்கரையை நாடிப்போகும். மழை பெய்யாமல் ஆறு குளம் ஏரிகள் அனைத்தும் வற்றும் வறட்சிக்காலத்திற் பெரும்பாலும் முதலைகள் எத்தனை நாட்சென்றாலும், மழை வருஷிக்கிறவரையில், கல்லுக்குள் தேரைபோல, சேற்றுக்குள்ளே புதைந்து மறைந்திருக்கும்.

புல் பூண்டு செடி மிகுந்துள்ள சேறும் சதுப்புமான தரையையும், ஏரி குளங்களையும் தேடிப்போய்ச் சஞ்சரிப்பது முதலையின் சுபாவம். அது ஆடு, மாடு, மான், மரை முதலிய பிராணிகள் தண்ணீர் குடிக்க வரும் துறைக்குக் கிட்ட இரைதேடிக் காத்திருக்கும்பொழுது நீர்முகத்திற் சிறிதும் அசையாமற் கட்டைபோலக் கிடக்கும். இப்படிக் கிடந்து சமயம் கண்டு அசதியில் ஒரு தாண்டிற் சென்று ஆடோ, மாடோ, மானோ, மரையோ அகப்பட்டதைக் கவ்விப் பிடித்துத் தண்ணீருக்குள்ளே வெகு விசையாய் இழுத்துக்கொண்டுபோகும். அது சிறுபான்மை நீர்க்கரைக்குச் செல்லும் சிறுவர் சிறுமியரைப் பிடித்துப் பட்சிப்பதும் உண்டு. ஆனதுபற்றி

முதலைக்கு சிசுமாரம் எனவும் பெயர். பெரு நதிகளில் மிதக்கும் பிணங்கள் அழுகி உருக்குலைந்து தண்ணீர் கெட்டுப்போவதற்குமுன் அப்பிணங்களை முதலை பட்சித்து அந்தப் பீடையைத் தவிர்ப்பதனால், அது மனுஷருக்கு ஒருவிதத்தில் உபகாரியாகின்றதெனச் சொல்லலாம். முதலை சாதாரணமாய்த் தின்று பிழைக்கும் ஆகாரம் மச்சம்.

முற்காலத்தில் எண்ணிறந்த முதலைகள் எகிப்து தேசத்தில் விர்த்தியாயின. சில இடங்களில் மனுஷர் முதலையைத் தெய்வமென்று பக்தி பூர்வமாய்ப் பூசித்தார்கள். அவர்கள் அம் முதலைகளுக்கு அறுசுவை அமைந்த உண்டிகளைக் கொடுத்து, ஆபரணங்கள் தரிப்பித்து, மாலைகள் சூட்டி அலங்கரித்து எழுந்தருளப்பண்ணி உற்சவம் நடத்திவந்தார்கள். வேறு சில இடங்களில் மனுஷர் முதலைகளைக் கொன்று தின்றார்கள்.

இத்தேசத்திற் சில சமயங்களில் ஆறு குளங்களில் இறங்கி நீராடும் ஸ்திரீ புருஷ பால்யரைத் தண்ணீருக்குள்ளே மறைந்திருக்கும் முதலைகள் அசதியிற் கிட்டிக் கவ்வி இழுத்துக்கொண்டுபோய்ப் பட்சிப்பதும் உண்டு.

முதலையும் இடங்கரும் கராமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவகைகள் என்று தமிழ் நூலோர் கூறுவர்.

9. 'எனக்காக உழைப்பவன் எவன்!'

எளிய கிழவி ஒருத்தி பகலெல்லாம் பாடுபட்டு உழைத்து, ஒருநாள் சாயங்காலம் தன் குடிசை வாயிலில் உட்கார்ந்திருக்கும்பொழுது, 'நான் இப்படி வெயர்க்க வெயர்க்க ஊருக்கு வருந்தி உழைக்க, எனக்கு உழைப்பவர் எவரும் இல்லாதிருப்பது என்ன அநியாயம்!' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னாள்.

அவ்வேளையில் அண்டையிற் சென்ற புத்திமானாகிய அயலவன் ஒருவன் அவள் சொற்கேட்டு:—

'பாட்டி, பாட்டி, உனக்கு உழைப்பவர் ஒருவரும் இல்லையென்று சொன்னாய்! அது முழுவதும் தப்பு.

'நீ இப்பொழுது சமைக்கப் போகிறாய் அல்லவா? கழனியில் நெல் விதைத்து, விளைந்தபின் அறுத்து, அரிசையைச் சுமைசுமையாய்க் கட்டி எடுத்துக்கொண்டுபோய், போர் போட்டு அடித்துத் தூற்றி, கடைக்கு விற்கக் கொண்டுபோனவர்கள் யார்? மிளகாய், மிளகு, சீரகம், கடுகு, கொத்துமல்லி முதலிய கறிச் சரக்குகளை விளைவித்தவர்கள் யார்? விரிகடல் நீரை இறைத்து உப்பு விளைவித்தவர்கள் யார்? விளைந்த உப்பை ஊர் ஊராய்க் கொண்டுவந்து சேர்த்தவர் எவர்? நீ காய்கறி அரியும் கத்தி ஒருவரும் செய்யாமல் தானே உருவாகி வந்ததா? பூமிக்குள் விளைந்த இரும்பை வெட்டியெடுத்தவர்கள் யார்? பின்பு அதை உலையிலிட்டுக் காய்ச்சி அடித்துக் கத்தி செய்தவர்கள் யாவர்? கறிக்கு வேண்டிய வெஞ்சனம் முதலியவைகள் அரைக்கும்பொருட்டுக் கல்லில் அம்மி வெட்டிப் பொளித்தவர்கள் யார்? சமைக்கும் மண் பாண்டங்களை வனைந்தவள் நீதானோ?

'வெகுதூரம் போகவேண்டாம், நீ உடுத்திருக்கும் ஆடையை நினைத்துப்பார். அது பருத்திநூலில் நெய்தது. உழவர் கரிசல் நிலத்தை உழுது பருத்தி விதைத்தார்கள். அது முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் காய் முதிர்ந்து வெடித்தபின், அவர்கள் மனைவி மக்கள் பஞ்செடுத்துக் கொட்டிப் பன்னி நூற்ற நூலால் வஸ்திரம் நெய்யப்பட்டது. நல்லது, இத்தனைபேரும் உனக்காக மேற்குறித்த வேலைகளெல்லாம் செய்யாதிருந்தால் உடுக்க உனக்கு ஆடைவேண்டுமே, அதற்கு என்ன செய்வாய்?

'நல்ல புத்தகம் ஒன்று நீ வைத்திருப்பது எனக்கு மிகவும் சந்தோஷம். மனுஷருக்கு அமையும் செல்வம் அனைத்திலும் சிறந்து உயர்ந்த மகத்தான செல்வம் அதுவே. காகிதத்தையும் அச்சுயந்திரத்தையும் மையையும் யூகித்து உண்டாக்கினவர்கள் யார்? அந்தப் புத்தகத்தை அச்சிட்டவர்கள் யார்? தாள் தாளாக மடித்துத் தைத்துப் புத்தகம் கட்டினவர்கள் யாவர்? அதை உன் கையிற் கொண்டுவந்து சேர்த்தவர்கள் யார்?

'இந்தச் சிறிய குடிசைக்குள் நீ வைத்திருக்கின்ற போஜன பதார்த்தம், துணி, மணி, சாமான், தட்டு முட்டு இவைகள் எல்லாம் உன் வசத்தில் வந்துசேரு முன், இவைகளை உனக்காக அலுப்புற்று மனப்பூர்வமாய் வருந்தி உழைத்து உற்பத்திசெய்த தொழிலாளர் எல்லாரையும் பெயர்பெயராக எடுத்துரைக்க ஏறக்குறைய அரைநாள் செல்லும. உனக்கு உழைப்பவர் எவரும் இல்லை என்று யோசியாமல் இனி ஒருபொழுதும் சொல்லாதே' என்று அறிவு புகட்டினான்.

10. பரிகாசப் பட்சி

பரிகாசப் பட்சி என்னும் இவ்விநோத பறவை அமெரிக்காவிற் சாதாரணமாய்க் காணப்படும். அது தான் கேட்கிற ஒவ்வொரு சத்தத்தைப்போலவும் கத்தும் சமர்த்துடையதாதலால் அதற்கு அப்பெயருண்டாயிற்று. அது சற்றேறக்குறைய ஒரு புருவளவு பருமனுடையது. அதன் நீளம் ஏறக்குறைய ஒன்பது அங்குலம். அதன் மேற்புறம் கபிலநிறம்; வாலும் சிறகுகளும் ஏறக்குறைய கறுப்பு வர்ணமாயிருக்கும். கீழ்ப்புறம் மங்கலான வெண்மை நிறம் பொருந்தி யிருக்கும். அமெரிக்க இந்தியர் அதை 'நானூறு நாவுள்ள பட்சி' யென்று சொல்லுவார்கள்.

அது தான் பிறந்து வளர்ந்த தோப்பிலுள்ள உயர்ந்த செடியின் உச்சியிலாவது மரக்கிளையிலாவது ஏறிக் கொண்டு காலையிற் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் கீதம் பாடும். மற்ற அநேக பட்சிகளின் சத்தத்தால் காடு தொனித்துக்கொண்டிருக்க, இதனுடைய இராகம் அவை களெல்லாவற்றிற்கும் மேலாக எழும். அதன் உற்சாக மும் உல்லாசமுமான ஆட்டம் கண்ணைக் கவர்ந்துகொள் ளுகின்றது. அது உற்சாக சந்தோஷத்துடன் சுற்றிச் சுற்றிப் பாடி, தன் பாட்டின் சத்தம் உயரும்போது தானும் மரத்தில் உயர ஏறி, அந்தச் சத்தம் குறையக் குறையத் தானும் கீழே இறங்கிவிடும். இப்படி அது முயற்சியாயிருக்கையில் சமீபத்தில் நிற்கும் குருடன் எவனும் பறவைகள் தங்களில் எது சமர்த்துள்ளதென்று பரிசோதிக்க எல்லாம் ஒன்றாய்க் கூடிக்கொண்டதாக வும், ஒவ்வொன்றும் தன் திறமையைக் காட்டப் பிரயா சப்படுகிறதாகவும் உத்தேசிப்பான். ஏனெனில், அது

மற்றப் பட்சிகள் பாடுவதுபோற் பாடுவதில் எவ்வளவும் குறைவுபடாது. அது அநேக தடவைகளில் வேட்டைக் காரனை வஞ்சித்து, அவனுக்குச் சில மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் பட்சி எவ்விதமாய்ப் பாடுமோ அவ் விதமாய்ப் பாடி, அது எங்கே இருக்கின்றதென்று அவன் தேடித்திரியும்படி செய்யும். இந்த ஆச்சரியப்படத் தக்க பரிகாசப் பட்சியினால் பறவைகளும் அடிக்கடி ஏமாந்து, அது இடும் சத்தம் தங்கள் துணைப் பட்சியின் சத்தமோவென்று எண்ணி மயங்கிவிடும். சிலவேளை களில் அது இடும் சத்தத்தைக் கேட்டு, அச்சத்தம் இரா சாளியின் சத்தமென்றெண்ணி, பட்சிகள் அடர்ந்த அர ணியத்திற்குள் தீவிரமாய்ப் பறந்துபோய் ஒளித்துக் கொள்ளும்.

பரிகாசப் பட்சி தன்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டும் நேரமுழுவதும் தன் சிறகையும் வாலையும் விரித்து, உற்சாக சந்தோஷத்துடன் அங்குமிங்கும் பாய்ந்து பாடுகிறது மாத்திரமல்ல, தன் பாட்டுக்கேற்கத் தாளம் போட்டு நடனமாடுகிறதுமுண்டு. வனத்தில் வாழும்போதும், பழக்கப்பட்டு வீட்டில் வாழும்போதும் அது இரவில் அமைதலான நேரத்தில், சந்திரோதய மானவுடனே தன் இன்பமான இராகத்தைத் தொடங்கி, அதியுசிதமான கீதத்தால் அயலகம் முழுவதும் ஆனந்த சாகரத்தில் மூழ்கச்செய்யும்.

பரிகாசப் பட்சி அடைகாக்கும்போது மனுஷனாவது, நாய் முதலிய மிருகமாவது கூட்டிற்குச் சமீபத்திற் சென்றால், அது சிறிதும் வித்தியாசமின்றி மிகுந்த தைரி யத்துடன் தாக்கிவிடும். அது முக்கியமாய்ப் பகைக் கும் பிராணி கருநாகம்பு. அந்தப் பாம்பு தன் குஞ்சு களையாவது முட்டைகளையாவது கவர முயன்றால் பரிகா சப் பட்சி அதைக் கொரோமாய்த் தாக்குகிறது. அந்தப் பட்சி பாம்பு தன்னைக் கடிக்கத் தக்கதாகச் சமீபத்திற்

செல்லாமல், அதைத் தலையில் பலமாய்க் கொத்தும். அப்பாம்பு ஓடப் பிரயாசப்படும்போது அந்த நிர்ப்பய மான பட்சி அதைப் பின்தொடர்ந்துபோய்க் கொத்திக் கொன்றுவிடும். பின்பு அது மரத்திற்குத் திரும்பவும் பறந்துபோய், எல்லாவற்றிலும் உயரமான கிளையி லிருந்துகொண்டு ஜயகீதம் பாடும். என்ன விநோத மான பட்சி இது?

11. செல்வத்தின் சிறப்பு

1. பொருளிலார்க் கின்ப மில்லை,
   புண்ணிய மில்லை; என்றும்
மருவுறு கீர்த்தி யில்லை,
   மாந்தருட் பெருமை யில்லை;
கருதிய கருமமில்லை,
   கதிபெறு வழியு மில்லை;
பெருநிலத் திடைந டக்கும்
   பிணமெனப் படுவ ரன்றே.

2. நற்பொருள் அறத்தை, இன்ப
   நலத்தை, ஞா னத்தை, மிக்க
சொற்பெறு புகழை, என்றும்
   துகள்அறு பெருமை தன்னை,
பற்பலர் உறவை, நட்பை,
   பகைதவிர்த் திடும்தி றத்தை,
பொற்புறு கதியை, எல்லாம்
   பொருளலால் தருவ தின்றே.

3. ஆதலால், தரும ஆற்றால்
   அரும்பொருள் ஈட்டி, மேலும்
ஊதியம் கொண்ட றம்செய் (து)
   உரியஅப் பொருளைக் காத்தல்

நீதி; இவ் வாறு செய்யார்
நிதியமும் தேய்ந்து, மற்றும்
ஓதுமெந் நலமு மின்றி
உறுதுயர் அடைகு வாரே.

(பஞ்சதந்திரப் பாடல்)

12. பெண் கல்வி

உங்களை உயிருக்குயிராக நேசித்து உங்களுடன் கூடி உல்லாசமாய் விளையாட விரும்பும் சகோதரிகள் உங்களுக்குண்டா? உண்டானால் நீங்களும் அவர்களை நேசிக்கவில்லையா? அவர்களை சந்தோஷப்படுத்த உங்களுக்கு இஷ்டமில்லையா? அப்படிச் செய்வது உங்களுக்கு இஷ்டமென்று சந்தேகமின்றி நம்புகின்றேன். ஆனதுபற்றி, உங்களைப்போல அவர்களும் சந்தோஷமாய் வாழும்படி செய்யத்தகும் வழி இன்னதென்று சொல்வேன் கேளுங்கள். உங்கள் சகோதரிகள் கல்வி கற்கப் பாடசாலைக்குப் போகாதிருந்தால், உங்களால் ஆமளவிற்கு முயன்று அவர்களைப் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி செய்யுங்கள். அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பும்படி உங்கள்

மாதா பிதாக்களைப் பரிந்து கேளுங்கள். பெண்கள் கல்வி கற்பதனால் விளையும் பயன் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியுமா? மனிதர் எவ்வித சுகங்களையும்தேடி அடைதற்குக் காரணமாயுள்ளது அறிவொன்றேயாம். அவ்வறிவு கல்வியினாற் பெறப்படுவது. அது ஆடவர் பெண்கள் என்னும் இரு பாலார்க்கும் இருக்கவேண்டியது அவசியமாதலின், கல்வியை ஆண்கள் எவ்வளவாய் விரும்பிக் கற்றல்வேண்டுமோ, அவ்வளவாய்ப் பெண்களும் விரும்பிக் கற்றல்வேண்டும். பெண்கள் தமக்குரிய கற்பொழுக்கம் தவறாது நடப்பதற்கு இன்றியமையாதது கல்வி. தங்கள் குழந்தைகளைத் தீநெறியிற் செல்லவிடாது நல்ல பழக்கம் பழக்குவதற்கும் அவர்களுக்கு உதவியாயிருப்பது கல்வி. தமது நாயகர்க்கு மந்திரிமார்போலிருந்து, அவர்களுக்கு இடர் நேர்ந்த காலத்தில் ஏற்ற உபாயம் சொல்லச் செய்வதும், அவர்கள் தீநெறிப்பட்டு ஒழுகுவாராயின், அவர்களை நன்னெறியிற் செலுத்துவதற்குத் துணையாயிருப்பதும் கல்வி. வீட்டுக்குரிய வரவு செலவுக் கணக்குகளைச் சரியாய் வைப்பதற்கும், தங்கள் கணவருடைய வரவுக்குத் தக்க செலவு செய்தற்கும், கற்ற தம் கணவரோடு ஒற்றுமையாய் வாழ்தற்கும் துணைசெய்வது கல்வி. தூர தேசத்திலிருக்கும் தன் நாயகனுடைய க்ஷேமத்தை மனைவியானவள் கடிதமூலமாகத்தானே தெரிந்துகொள்ளவேண்டும்; கல்வியறிவில்லாதவள் எவ்வாறு தெரிந்துகொள்வாள்?

இனி, சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தாய்க்கு சமீபத்திலேயே இருக்கவேண்டியவர்கள். தந்தையைப் பார்க்கிலும் தாயிடத்திலே அவர்கள் அதிகப் பிரீதி வைப்பது இயல்பு. அவர்கள் மனம் போனவாறு நடந்து கெட்டுப்போக விடாது அவர்களை சன்மார்க்க நெறியில் வளர்ப்பதும், சிறு பருவத்திற் கற்பிக்கவேண்டிய கல்வியை அவர்களுக்குக் கற்பிப்பதும், தேகாரோக்கியத்

திற்குத் தகுந்த உணவைக் கொடுப்பதும் தாயினுடைய கடமையாகும். கல்வியறிவில்லாத மூடஸ்திரீ என்ன செய்வாள்? ஆதலால் நீங்கள் பெண் கல்வியை விருத்தி செய்ய உங்களாலாகும் பிரயத்தனங்கள் யாவும் செய்தல் வேண்டும்.

ஆங்கிலேயர்க்கு இத்தனை மகத்துவம் உண்டானதற்குக் காரணம் என்ன? விசேஷ காரணம் என்னவெனில், இங்கிலாந்திற் சிறுவரைப்போலச் சிறுமியரும் கல்விகற்றுத் தேறுவதே. இளமையிற் கற்ற கல்வி பின்னுளில் அவர்களுக்குப் பலவிதங்களிற் பிரயோஜனப்படுகின்றது. அவர்கள் தங்கள் பிள்ளைகளை நன்ருய் வளர்த்து, நற்பழக்கம் பழக்கி, நல்வழிகாட்டி நடத்துகின்ருர்கள்.

ஆகையால், உங்கள் சகோதரிகளைக் கல்வி கற்கும்படி பாடசாலைக்கனுப்பத் தாய் தந்தையருக்குச் சம்மதம் இல்லாவிட்டால், வீட்டிலே அவகாசம் கண்டு அவர்களுக்கு நீங்களே மறந்துவிடாமல் எப்பொழுதும் கல்வி கற்பித்துக்கொண்டு வாருங்கள். புத்தகம் வாங்கிக் கொடுத்து அவர்கள் தடையற எழுத வாசிக்கப் பழகும் வரைக்கும் தினம் ஒரு பாடம் சொல்லிக்கொடுங்கள். ஒரு தேசத்தின் உயர்வுக்குப் பெண்களே முக்கிய காரணம். நமது நாடு உயர்வடையவேண்டுமானல் நமது பெண்களெல்லாம் அறிவும் ஒழுக்கமும் அடைதல்வேண்டும். அவ்வறிவும் ஒழுக்கமும் கல்வியாலன்றி உண்டாக மாட்டா.

13. தன்னுயிர் அளித்த தாசன்

சில வருடங்களுக்குமுன் ருஷியாதேசத்துப் பிரபு ஒருவர் தம் பத்தினியோடும் ஏக புத்திரனோடும் நாலு குதிரை பூட்டிய இரதத்திற் சற்றுதூரம் பிரயாணம் போனார். உயிருக்குயிராக அவரிடம் அன்பு பூண்டொழுகிய ஊழியன் ஒருவன் அந்த இரதத்தின் பின்பக்கத்தில் ஏறிப்போனான்.

பொழுதுபட்டு இருளவும், அண்டை அயலிற் கோநாய்கள் திரளாய்க் கூடி ஊளையிட்ட சத்தம் கேட்டது. ஆனதுபற்றி, அம்மகாப்பிரபு இரதத்தை விரைந்து செலுத்திக்கொண்டுபோக சாரதிக்குக் கற்பித்தார். இரதம் வாயுவேகமாய்ப் பறந்தும் கோநாய்கள் விரைந்து ஓடி இரதத்தை நெருங்கிவந்ததை அவர் கண்டு, துப்பாக்கியாற் சுட, குண்டுபட்டுக் கோநாய்கள் இரண்டு விழுந்தன. கூடப்போன கோநாய்கள் அவைகளை அந்த க்ஷணமே ஆவலுடன் பட்சித்துக்கொண்டு நிற்க, சாரதி

குதிரைகளை விரைவாய்ச் செலுத்தினன். ஆனல், உதிரம் குடித்து ருசிகண்ட அந்தக் கோநாய்களுக்குப் பின்னும் அதிக உக்கிரம் உண்டாகி, வாயுவேகத்துடன் கண்ணுக்கெட்டாதூரத்தில் ஓடிமறைந்த இரதத்தைத் தொடர்ந்துபோய் மீளவும்கிட்டின. துணிவு குன்ருமற் பின்னும் அவர் ஒருமுறை சுட, இரண்டு கோநாய்கள் உடல் ஊறுபட்டுத் தரையிற் சரிந்தன. சரிந்த பிணத்தை மற்றக் கோநாய்கள் விரைந்து கடித்துக் கிழித்துப் பட்சித்து, உதிரத்தை ஆவலுடன் பருகியபின், அதிதீவிரமாய்ப் பாய்ந்து பறந்து இரதத்தை வழிமறித்துக் கொண்டன. அவ்வேளையில் அந்தப் பிரபுவுக்குச் சமயோசித புத்தி பிறந்து, குதிரைகளிலொன்றை அவிழ்த்து விட சாரதிக்குக் கட்டளையிட்டார். அவன் அவிழ்த்து விட்டவுடன் அது மருண்டு அடுத்த காட்டிற் பாய்ந்து போக, கோநாய்கள் அக்குதிரையை வெகு விரைவாய்த் தொடர்ந்து பிடித்துக் கடித்துச் சின்னபின்னப்படுத்திப் பட்சித்துக்கொண்டு நின்றன. அவைகள் அந்தப் பாக்கில் நிற்கும்பொழுது, சாரதிக்கு உற்ற சமயத்திற்குத் தக்க ஊக்கமும் வீரமும் பிறந்து பின்னும் அதிக வேகமாய் மற்றக் குதிரைகளைத் தூண்டிச் செலுத்தினன். சிறிது தூரம் செல்லுமுன் அந்தக் குரூரமுள்ள கோநாய்கள் திரும்பி நெருங்கிச்செல்ல, வேறு ஒரு குதிரையையும் அவிழ்த்துவிட்டார்கள். அதையும் அத்துஷ்ட விலங்குகள் மறித்து வதைத்துத்தின்று நொடிப்பொழுதில் மீண்டும் சமீபித்தது கண்டு, தாசன் எஜமானனை நோக்கி, 'சுவாமீ! பால்யகாலம்தொடங்கி அடியேன் தங்களுக்கு அதிவிநய பயபக்தியுடன் தொண்டுசெய்து வருகிறேன். எனக்கு என் உயிரென்றும் தங்கள் உயிரென்றும் பேதம் இல்லை. தங்களுக்கு யாதாயினும் பிராண ஆபத்து நேர்ந்தால் அது எனக்கு நேர்ந்ததென்று எண்ணித் தங்களைப் பிராணபதமாக நேசிக்கிறேன். இந்த

சமயத்தில் தங்கள் ஜீவன் தப்பிப் பிழைக்கத் தகும் உபாயம் ஒன்றேழிய வேறில்லை. அடியேன் எனது பிராணனை உதிர வெறிகொண்டுள்ள இந்தக் கோநாய்களுக்கு தத்தஞ்செய்து தங்கள் ஜீவனைத் தப்புவிக்கச் சித்தம் இரங்கி அடியேனுக்கு விடை தரும்படி பணிந்து பிரார்த்திக்கிறேன்', என்றான்.

அபூர்வ அன்புள்ள இவ்வார்த்தைகளைக்கேட்டு, எஜமானன் என்ன சொல்வது எனத் தோன்றாமல், கண்ணீர் உகுத்துக்கொண்டிருக்கையில், அந்த பக்தி மிகுந்த தாசன் பாய்ந்தோடி, ஓநாய்க் கூட்டத்தின் நடுவிற் புகுந்து, அக்கொடிய விலங்குகளுக்கு இரையானான். இதற்குள் வண்டியும் ஊர்ப்புறம் போய்ச் சேர்ந்தது; ஓநாய்களும் காட்டினுட் சென்று மறைந்தன.

தன்னுயிரையே கொடுத்துத் தம்மைக் காப்பாற்றிய தாசனது பேரன்பை நினைத்து நினைத்து, அப்பெருமானும் அவர் பெருமாட்டியும் தம் ஆயுட் காலமெல்லாம் மனமுருகினர். அன்றியும், அவர்கள் அந்த தாசனது மனைவி மக்களுக்கு அளவற்ற அன்புகாட்டி அவர்களைப் பெரிதும் காப்பாற்றிவந்தனர்.

14. சிங்கம்

சிங்கம் மிருகங்கள் யாவற்றுள்ளும் மிக்க பலமும் தைரியமும் முயற்சியுமுடையதாயிருப்பதால், அதற்கு மிருகேந்திரன் அல்லது மிருகங்களுக்கு அரசன் என்னும் நாமம் வழங்கிவருகின்றது. அதன் தலை பெரிதாயும், கண்கள் பகற்காலத்தில் ஒடுங்கி ஒரு பிளவுபோலவும் இராக்காலத்தில் நெருப்புப் பொறிபோற் பளபளப்பாயும் காணப்படும். அதன் காதுகள் வட்டமானவை; வாயோ மிகவும் அகன்றதாயும், உதடுகள் நீண்ட மீசையுடையன

வாயு மிருக்கும். அதன் நா அரம்போல் அமைக்கப்பட்டிருப்பதால் எலும்பிலிருந்து மாமிசத்தைச் சுறண்டித் தின்பதற்கு அனுகூலப்படுகிறது. சிங்கத்தின் பற்கள் நீண்டவையும் கூர்மை பொருந்தியவையுமாயிருப்பதால், எவ்வித மாமிசத்தையும் இலேசாய்க் கிழிக்க உதவுகின்றன. சிங்கம் தலைமுதல் வால்முனை வரையில் சற்றேறக்குறைய எட்டடி நீளமுடையது. ஆண் சிங்கத்தினது தலையின் மேற்புறத்திலும் தாடையிலும் கழுத்திலும் நீண்டு சடைத்த மயிர் வளர்ந்திருக்கும். அது குதிரையின் பிடர் மயிர்போற் றோன்றும். பெண் சிங்கத்துக்கோ அப்படி மயிர் வளர்ந்திருக்கிறதில்லை. சிங்கத்தின் பிடர் மயிரே அதன் கம்பீரமான தோற்றத்திற்கும் பயங்கரமான உருவத்திற்கும் காரணம். அது மகா பலமுள்ள தாகையால், ஒரு பெரிய எருதையும் தன்னுடைய பலத்த முன் காலால் ஒரே அறையா யறைந்து கொன்று, பின்னர் தன் குகைக்கு இழுத்துக்கொண்டுபோகும் சக்தியுடையது. அது தன் வாலினல் மிக்க பலசாலியான ஒரு மனுஷனையும் தரையில் தள்ளக்கூடும்.

சிங்கத்தின் கர்ச்சனை மிகவும் உரத்ததும் பயங்கரமுள்ளதுமா யிருக்கும். அது உக்கிரமடைந்திருக்கும்போது

இடைவிடாது கர்ச்சித்து, பூமியைத் தன் கால்களால் மோதி வாலால் இருபக்கத்தையும் புடைத்து, பிடர் மயிரைச் சிலிர்த்து நெருப்புப்போன்ற தன் கண்களை உருட்டிவிழித்து, பற்களைக் காட்டிச் சீறி, பார்ப்பவர்கள் திகிலடையுமாறு செய்யும். சிங்கத்தின் கர்ச்சனை இடி முழக்கத்தை யொக்கும் என்று சிலர் கூறுவார்கள். சிங்கம் ஆபிரிக்காவிலும் இந்தியா, பாரசீகம் முதலிய ஆசியாவின் சில உஷ்ண பாகங்களிலும் சஞ்சரிக்கின்றது. அது பசியாயிருக்கும்போது தனக்கு முன்வரும் எந்த மிருகத்தின்மேலும் விழுந்தடிக்க முயலும். இதன்பொருட்டு அது சாதாரணமாய் நதிமருங்கிலும் நீர்நிலைகட்கு அணித்தாயும் பதுங்கி நிற்கும். தான் பாய்ந்து பிடிக்க எத்தனித்த மிருகம் தப்பிவிட்டால், இரண்டாம் முறை அம் மிருகத்தின்மீது பாய்வது அதன் வழக்கமன்று. இது சிங்கத்தின்கண்ணுள்ள ஓர் விசேஷித்த குணமேயாம். சிங்கம் எவ்வளவு மேன்மையுள்ள மிருகமென்பது இதனால் விளங்குகின்றது.

சிங்கம் மாமிச பட்சணி. அதாவது இதர மிருகங்களே அதன் ஆகாரம். பெண்சிங்கமானது ஆண்சிங்கத்தைவிட சற்றுச் சிறிய உருவமும் மிருதுத்தன்மையும் சாந்தகுணமும் பொருந்தியது. அது தன் குட்டிகளிடத்தில் மிக்க பிரீதியுடையது. ஆயினும், அதன் சாந்தகுணம் குட்டி போடும் வரையிலுந்தான் இருக்கும். அதன்பின் பெண் சிங்கம் மிக்க உக்கிரமடைகிறது. அது தன் குட்டிகளைத் தன் பக்கத்தில் விளையாடும்படி விட்டுவிட்டு அவைகளைத் தன் நாவினால் நக்கிச் சுத்தப்படுத்தி அன்புகாட்டும். அச் சமயத்தில் யாராவது அணுகினால் அவரை உடனே அது துண்டுதுண்டாகக் கிழித்துவிடும் இயல்பினையுடையது. சிங்கம் குதிரையைக் கண்டால் அதை அடித்துக்கொல்லும் நோக்கத்துடன் வெகுதூரம் தொடர்ந்து செல்லும். தக்க சமயம் நேர்ந்தவுடன் அதன்மேற் பாய்ந்து ஒரு

நொடிப்பொழுதில் அதைக் கீழே தள்ளிச் சின்னபின்ன மாகக் கிழித்துத் தனக்கு இரையாக்கிக்கொள்ளும். சிங்கம் முன்னும் பின்னும் பார்க்கும் தன்மையுடையது; அதனால், அந்நோக்கை சிங்க நோக்கு அல்லது அரிமா நோக்கு என்று தமிழ்நூல்களிற் சொல்வர்.

சிங்கம் துஷ்டமிருகமாதலின், பிரபுக்கள், துரைமக்கள், இராசாதிகாரிகளாதியோர் அதைவேட்டையாடிவருகிறார்கள். ஆனால் சிங்கவேட்டை மிகவும் கஷ்டமானது. வேட்டைக்காரர்களையும் நாய்களையும் காணும்போது அதன் உக்கிரம் முன்னிலும் பன்மடங் கதிகமாகிறது. தான் மடியும்போதும் ஒருவனைக் கொன்றபின்தான் அது தன்னுயிரை விடும். சிங்கவேட்டை எவ்வளவு மோசகரமானதென்பது பின்வருங்கதையினால் தெளிவாகும்.

ஒருமுறை ஒரு துரை ஆயுததாரியாய், துப்பாக்கி கையிலேந்தி, சில வேட்டைக்காரரோடும் பல வேட்டை நாய்களோடும் சிங்கவேட்டைக்குச் சென்றார். சென்றவர் காட்டினுள் நுழைந்து சிங்கம் இருக்கும் குகைகளை அச்சமின்றி ஆராய்வாராயினர். அச்சமயத்தில் முற்றவளர்ந்து பார்ப்பவரைத் திகிலுறச்செய்யும் ஓர் கேசரி தன் குகையினின்றும் சடுதியாய்ப் புறப்பட்டு துரை முன்னர் எதிர்ப்பட்டது. கண்களிற் றீப்பொறி சிந்த உக்கிராவேசத்தோடு சிங்கம் எதிர்ப்படவே, துரை தமது துப்பாக்கியை சித்தப்படுத்தும் வண்ணம் சற்றுப் பின்வாங்கினர். துரை பின்னடையவே வேட்டைக்காரர் திகிலடைந்து துரையிடத்துக்கு ஓடிவரத் தலைப்பட்டனர். சிங்கமோ இமைப்பொழுதில் அவர்கள்மீது பாய்ந்து ஒருவனைக் கீழே தள்ளியது. அப்பொழுது நடந்த காட்சி மிக்க பயங்கரமானது. சிங்கம் கீழே விழுந்தவன்மீது தன் காலை யூன்றிக்கொண்டு நெருப்புப் பொறிபோன்ற கண்களை யுருட்டி அண்டமெல்லாஞ் செவிடுபடுமாறு கர்ச்சிக்க,

எஞ்சிய வேட்டைக்காரர் பயந்து துரையிடத்துக்கு ஓடி வர, துரை வேட்டைக்காரர் சிங்கத்துக்கும் தமக்கும் மத்தியில் வந்துகொண்டிருந்ததால் சரியாய்க் குறி பார்த்து அதைச் சுட சக்தியற்றவராய் சும்மா இருந்து விட்டனர்.

சிறிது நேரத்தில் சிங்கம் உக்கிரந்தணிந்து ஒருவருக்கும் யாதொரு தீங்கும் புரியாது புதருட் சென்றது. அச்சமயத்தில் துரை சரியாய்க் குறிபார்த்துச் சுடவே சிங்கம் அலறிக்கொண்டு பூமிமீது வீழ்ந்திறந்தது.

சிங்கம் இறுதியிற் கொல்லப்பட்டிறந்தாலும் துரையும் வேட்டைக்காரரும் சிறிதுநேரம் எவ்வளவு அபாயகரமான நிலையிலிருந்தார்கள் பாருங்கள்.

15. புத்திமான் பலவான்

கிழக்கு தேசத்து தேசாதிபதி ஒருவனுடைய குற்றமற்ற பிரதம மந்திரி ஜீவனுள்ளளவும் சிறையிருக்கத் தீர்ப்புப் பெற்று, ஓர் உன்னத கோபுரத்தின் உயர்ந்த மேன்மாடத்திற் கைதியாயிருந்தான். அப்பொழுது ஒரு நாளிரவு அவன் பத்தினி அம்மாடத்தின் பலகணிப்புறத்தில் கீழேபோய் நின்று தனது அவகதியை நினைத்து,தேம்பித் தேம்பி அழுதாள். அழுகுரற் கேட்டு, அமைச்சன், 'பெண்ணே, நீ இப்படிப் பிரதிதினமும் உள்ளங் கரைந்து புலம்புவதனாற் பயன் ஒன்றுமில்லை. ஒரு யுத்தி சொல்லக் கேள்: வியர்த்தமாய் இங்கு நில்லாமல் நேரே வீட்டுக்குப் போய், உயிரோடே கருவண்டு ஒன்று, நெய் ஒரு துளி, மெல்லிய பட்டுநூற் பந்து ஒன்று, முறுக்குநூற் சுருள் ஒன்று, கயிற்றுச் சுருள் ஒன்று, வடச்சுருள் ஒன்று இத்தனையும் சேகரித்துக்கொண்டுவா' என்றுசொல்லி அனுப்பினான். அம்மங்கை அந்த நிமிஷமே விரைந்து, வீட்டுக்

குத் திரும்பிப்போய், மேற்குறித்த வஸ்துக்களைச் சேகரித்துக் கணவன் சொற்படி மறுதினம் இராத்திரி, கோபுர மாடத்தின் புறத்திற் கொண்டுபோய் வைத்திருந்தாள்.

அதுகண்டு, சிறையிருந்த அமைச்சன், 'எனது பிராணநாயகி! நீ கொண்டுவந்திருக்கின்ற வண்டின் சிரசில் நெய்யைத் தடவி, பட்டு நூலின் ஒரு முனையை அதன் இடுப்பிற் கட்டி, வண்டை மாடத்தின் சுவரில் மேல்நோக்கிவிடு' என்று சொல்ல, அவள் அதேபிரகாரம் செய்தாள். விட்டவுடன் அவ்வண்டு தலையிற் பூசிய நெய் மணம் பிடித்துக் கோபுரம் ஏறி, மந்திரி சிறையிருந்த காவற்கூடத்தின் பலகணியிற் சேர்ந்தது. சேரவே, வண்டின் இடையிற் கட்டிய பட்டுநூற் பந்தின் ஒரு முனையை மந்திரி கைக்கொண்டு, அதன் மறுமுனையில் முறுக்குநூலின் ஒரு முனையையும், இதன் மறுமுனையில் கயிற்றின் ஒரு தலைப்பையும், அந்தக் கயிற்றின் எதிர்முனையில் பெருவடச் சுருளின் ஒரு முனையையும் உறுதியாய் முடிந்துவிடக் கற்பித்தான். அவள் அவ்வாறே செய்தாள். அதன்பின் மந்திரி அவைகளை ஒவ்வொன்றாய் இழுத்து, பலமான வடத்தைப் பிடித்து, பலகணிக்கு இட்டிருந்த இருப்புக் கம்பியில் இறுகக்கட்டி, அதன் உதவியாற் பலகணியினின்றும் பதைப்பற்று இறங்கி ஓடித்தப்பினான்.

இது கற்பனைக்கதையாயிருந்தாலும் இருக்கும். ஆனால், 'புத்திமான் பலவான்' என்பதுபோல, புத்தி உள்ளவன் தன் விவேக நுணுக்கத்தால், எந்தக் கருமத்தையும் ஏற்கும் உபாயம் சூழ்ந்து நினைத்தபடி அணுவுந் தவறாமற் சாதித்துவிடுவானென்று இதனால் தெரிகின்றது.

16. நாரை விடு தூது

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருச்சத்திமுத்தம் என்னும் ஊரில் அநேக ஆண்டுகளுக்கு முன்னிருந்த வறிய புலவர் ஒருவர், பாண்டியனிடம் பரிசில்பெற விரும்பி மதுரைக்குச் சென்றவிடத்து, அவ்வரசனை உடனே காணமுடியாமல் அந்நகரின் நடுவே வெளியூரார் வந்துதங்கும் இடமாகிய அம்பலத்தில் குளிரால் வருந்திக் கிடக்கையில், உயரப் பறந்துசென்ற இருநாரைகளை நோக்கிக் கூறியது இது:—

'நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின் பெடையும்
தென்திசைக் குமரி ஆடி, வடதிசைக்
காவிரி ஆட ஏகுவீ ராயின்,
சத்தி முத்த வாவியில் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்(டு,) 'எம்
கோமான் வழுதி கூடல் மன்றத்(து)
ஆடை யின்றி வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்தி,
காலது கொண்டு மேலது தழீஇ,
பேழையு ளிருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்' எனுமே!



17. ஆமை

குறுகி அண்டவடிவாயிருக்கும் ஆமையின் உடலுக்கு மேலும் கீழும் அமைந்திருக்கின்ற ஓடு இரண்டும் அரணாயிருக்கின்றன. அவ்வோடுகள் பொருந்தும் சந்தில் ஆமை தன் தலை, கால், வால் முதலிய உறுப்புக்களை எளிதாக நீட்டவும் அடக்கிக்கொள்ளவும் தக்கதாக துவாரங்கள் உண்டு. இதனால் ஆமைக்கு ஐந்துறுப்படக்கி எனப் பெயர் வழங்கும். ஆமையெல்லாம் ஓரினமல்ல. அவற்றுட் பல இனமுண்டு. பிரதானமானவை நிலஆமை, நீர்ஆமை, கடல்ஆமை என்பவைகளே. நிலஆமைக்கு ஆகாரம் புல் பூண்டு கீரைகளும் பூச்சி புழுக்களுமாம். கிழங்கையும் வேரையும் தோண்டத்தக்க பலமான கூரிய நகங்கள் அதன் குறுங்காலில் அமைந்திருக்கின்றன. யாதாயினும் ஒரு மிருகம் எதிர்த்து நெருங்கிவரும்பொழுது ஆமை

தன் உறுப்புக்களை அடக்கிக்கொண்டு அச்சமின்றிக் கற் போலக் கிடக்கும்.

சேற்றிற் கால் புதையாமல் தண்ணீரில் எளிதாக நீந்தும்படி நீராமைக்குக் கால்விரல்களினிடையில் தோல் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு இரை விசேஷமாய்ச் சிறு மச்சமும் பூச்சி புழுக்களுமே. பெரு மச்சங்கள் ஆமையைப் பிடிக்கத் தொடரும்போது அது சேற்றுக்குள்ளே புதைந்திருந்து தண்ணீரைக் கலக்கிவிட, அதற்கு விரோதியாகத் தொடர்ந்துபோன மச்சம் வழிதிசை தெரியாமல் திரும்பிப் போய்விடும்.

ஆமைகளிற் பெரிது கடல்ஆமை. கடல் ஆமையின் காலில் விரல் இல்லை. அக்கால் மீன் சிறகை ஒத்திருக்கும். ஒரு ஜாதிக் கடலாமையின் ஓடு மிகவும் சிறந்தது. அதனாற் சீப்பு முதலிய உபயோகமான கருவிகள் செய்து விற்பார்கள். அவ்வோட்டினால் தென்னிலங்கையில் விசித்திரமான நகைப்பெட்டி முதலிய அணிகலச் செப்புகள் விஸ்தாரமாய்ச் செய்து விற்பதுண்டு. பசிய நிறமுள்ள மற்றொரு ஜாதிக் கடலாமையின் மாமிசம் நாவிற்கு மதுரமென்று பாராட்டுவார்கள். கடல்ஆமை மணலில் முட்டையிடக் கரையேறும்பொழுது செம்படவர் அதை மல்லாக்கப் புரட்டிப் பிடித்துக்கொண்டு போவார்கள். ஆமை மணலிலிடும் முட்டை ஆதித்த கிரணத்தின் உஷ்ணம் ஏறிப் பொரிக்கும்.

ஆமைஜாதி அனைத்தும் முட்டையிலிருந்து பிறப்பதனால் அவை அண்டஜம் என்னும் வகுப்பைச் சேர்ந்திருக்கின்றன. சில ஆமைகள் இருநூறு வருஷம் உயிரோடிருப்பதாகத் தெரிகின்றது.

வெகுகாலத்திற்குமுன் அபூர்வ பரிமாணமுள்ள ஆமைகள் இந்தியாவில் விர்த்தியாயின. இமயமலை அடிவாரத்

தில் சில வேளைகளில் அகப்படும் ஆமை ஓடுகளின் நீளம் பன்னிரண்டு அடி.

18. தன் நலம் பாராட்டல்

ஒரு நாயும் பூனையும் ஒருநாள் மடைப்பள்ளி வாசலுக்கு எதிரில் உட்கார்ந்திருக்கும்போது சுயம்பாகி சிற்றுண்டித் துண்டு நாலைந்தைக் கொண்டுவந்து முற்றத்திற் போட்டான். போடவும், அந்த நாயும் பூனையும் திடுக்கென்றெழுந்து ஆத்திரத்தோடு ஒன்றுக்கொன்று முந்திப்போய் அதை எடுக்கப் பார்க்க, பூனையிலும் வலிமையுள்ள நாயானது பூனையை வெருட்டித் துரத்திவிட்டு, அத்துண்டுகள் அனைத்தையும் நாலைந்து கவ்வில் எடுத்து விழுங்கியது. அவ்வேளையில் அந்த நாய் தன்னலத்திற் கருத்தும் காதலுமாயிருந்த தொழிய, பூனைக்கு வரும் நலத்தைச் சிறிதும் எண்ணவில்லை. நாயைப்போலப் பூனைக்கும் அந்தச் சிற்றுண்டியின்மேல் ஆசை மிகுதியே. ஆயினும் வலிமைக்கு வழக்கில்லை. வலிய நாய் எளிய பூனையைத் துரத்திவிட்டு இஷ்டப்படி எளிதாக அவற்றை எல்லாம் தானே தின்றுவிட்டது.

நாய்க்கு உள்ள அறிவு இம்மாத்திரந்தான். யாவற்றையும் யாவரையும் சிருஷ்டித்துப் பாதுகாத்து அவரவர் நல்வினை தீவினைக்குத் தக்க பலனளிக்கும் தெய்வம் இருக்கின்றதென நாய்க்குத் தெரியாது. 'மனுஷர் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகள் எவைகளோ, அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' எனப் பிறந்திருக்கின்ற பொன்போலும் சிறந்த விதியை அந்தச் சுணங்கன் அறியுமா, அறியாது.

ஆனால், மனுஷரென்று உடம்பெடுத்த நமக்குரிய தன்மையும் வேறு. நாம் கைக்கொண்டு ஒழுகக் குறித்திருக்கும் விதியும் வேறு. மேற்சொல்லிய நாயைப்போல,

பிறர் என்ன கேடுகெட்டாலும் நாம்மாத்திரம் குறை வற்ற செல்வராக வாழ்திருக்கவேண்டுமென்று இச்சிப் பதைவிட்டு, நீதிநெறி விலகாமற் பிறரில் அன்புகூர்வது நமது கடனென்று நமக்குக் கட்டளை பிறந்திருக்கின் றது. பிறருக்குச் செல்லவேண்டிய சுதந்தரத்தையேனும் சொத்தையேனும் நாம் தடையின்றி முறைமைப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்துவிடுவதுந் தவிர, அவர்கள் மேல் தயை தாட்சண்ணியமுள்ளவர்களாயிருப்பதும் நமது கடனே. பிறர் நலத்தை மறப்பது பெரும் பாதகம். தற்சிந்தையுள்ளவன் ஒருபொழுதும் கடைத்தேருன். அவன் மனத்திற்கு ஒருநாளும் சுகம் இல்லை; ஒருவரும் அவனை விரும்புவதும் இல்லை.

ஆ! இவ்வுலகம் இந்த நிலைமையிலாவது இருப்பது, தமக்கென்று பாடுபடாமல், பெரிய முயற்சியோடு மற்றவர்களுக்காகப் பாடுபடும் பெரியோர் சிலர் இருப்பதாலேதான்.

> 'உண்டால், அம்ம! இவ்வுலகம் . . .
> தமக்கென முயலா நோன்தாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!'

19. சரிபாதி!

இத்தாலியா தேசத்தில் வாழ்ந்த மகாப்பிரபு ஒருவர் மணவிருந்து சம்பிரமமாகச்செய்ய எத்தனித்து, அதற்கு வேண்டும் விதம்விதமான மதுரமுள்ள போஜனபதார்த்தங்கள் அனைத்தும் அங்கங்கிருந்து அழைப்பித்தார். மச்சம் ஒன்றுமாத்திரங் கிடைக்கவில்லை. கடல் கொந்தளித்துக் கோஷித்ததனுற் செம்படவர் மீன் பிடிக்கப் போவது அசாத்தியமாயிருந்தது. ஆனுல் விருந்து தினத்தின் காலையில் ஏழைச் செம்படவன் ஒருவன் பெரிய உல்லமீன் ஒன்று பிடித்து, பிறந்த நாள்முதல் அதுவரை

யில் தனக்கு என்றும் இல்லாத அதிர்ஷ்டம் வலிய வந்தடைந்ததை எண்ணி மனம் பூரித்து, அம்மீனுக்கு மேற்படி குலமகனன்றி அருமை அறிந்து கிரயம் கொடுக்கத் தக்கவர்கள் இல்லையென்று தீர்மானித்து, அக்குலமகனுடைய வாசஸ்தானத்திற்கு அதைச் சுமந்துகொண்டு சென்றான். அவன் பிடித்த மச்சத்தின் அருமை பெருமை 'உள்ளதை விற்று உல்லத்தைக் கோள்' என்னும் பழமொழியால் விளங்கும். சமயோசிதமாக வந்து சேர்ந்த மாதுரியமான அந்த மச்சத்தைக் கண்டவுடன் மாளிகையிலுள்ள விருந்தினர்க்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. காவலாளர் மேற்படி வலையனைப் பிரபுவின் சமுகத்திற் கொண்டுபோய் விட்டார்கள். அவன் அம்மீன் சுமையை இறக்கித் தரையில் வைத்து, அன்றே தன்னைப் பிடித்த கலிதீருமென்று பிரபு முகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தான். பிரபு, 'இம்மீன் விலை என்ன? கேட்டவிலை தடையின்றிக் கொடுப்போம்' என்று சொல்ல, செம்படவன், 'என் முதுகில் ஒரு அடியும் குறையாமல் எண்ணி நூறு அடி அடிப்பது இந்த மீன் விலை' என்று உத்தரம் சொன்னான்.

அவன் சொன்ன விலை அந்தச் சீமானுக்கு வெகு விநோதமும் விந்தையுமாயிருந்தது. அவர் அவனை அதட்டி, 'மதிகுன்றிய உன்மத்தர் பேசுவதுபோல உளறுதே; உள்ளது சொல்லு; நீ என்ன விலை சொன்னாலும் ஒரு காசுங் குறையாமற் கிடைக்கும்' என்று திரும்பத் திரும்ப அவனைத் தூண்டியும், அவன் முன் சொன்ன சொல்லையே ஒருபிடியாய்ச் சாதித்தான். பிரபு இனி அந்தப் பித்தனுடன் பேசிப் பயனில்லையென்று கண்டு, வேலைக்காரனை வரவழைத்து, 'அற்புதமாய்ச் சமயத்தில் வந்து சேர்ந்த இவ்வரும்பொருளை எவ்விதத்திலும் வாங்கத்தான்வேண்டும். அது இல்லாமல் தீராது. இவன் கேட்ட விலையைத் தாராள

மாய்க் கொடுத்துவிடு; ஆனால் பலமாயடியாதே. எனது முன்னிலையில் இவனை அசையாது நிற்கச்சொல்லி அடி' என்று திட்டஞ்செய்ய, வேலைக்காரன் அடிக்க ஆரம்பித்து ஐம்பது அடி அடிக்கிறவரையிற் செம்படவன் வாய் திறவாது நின்று, ஐம்பத்தோராவது அடி அடிக்கப் பிரம்பு சுழற்றவும், சடுதியாய், 'பொறு பொறு! பங்காளி ஒருவன் இருக்கிறான், என் பங்கு வந்துவிட்டது, அவன் பங்கை அவனுக்குக் கொடுத்துவிடு' என்று மொழிந்தான். அதுகேட்டுக் குலத்திற் பிறந்த அந்த லட்சப்பிரபு, 'மீன் பிடித்து விற்றுப் பிழைக்கும் இவன் வாய்ப்பிறப்பெல்லாம்கேட்பவர்களுக்கு வெகுவிநோதமாயிருக்கின்றதே!' என்று தமக்குள்ளே நினைத்து, 'உன் பங்காளி பெயர் என்ன என்று சொல்லு, நொடிக்குள்ளே ஆள் அனுப்பி அவனை வரவழைப்போம்' என்று சொல்ல, செம்படவன், "எஜமானே, எனது பங்காளி வெகு தொலையில் இருப்பவன் அல்ல, உங்கள் துவாரபாலகன்தான். அவன் இந்த மீனைக் கண்டபொழுது என்னைத் தடுத்து, 'இலாபத்திற் பாதி எனக்குக் கொடு, கொடுப்பதாக வாக்குறுதி சொன்னால் உட்செல்ல விடுவேன்' என்று என்னை நெருக்கிக் கேட்க, அவன் கேட்டபடி, 'மீன் விற்றுத் தேறும் இலாபத்திற் பாதி தவறாமல் கொடுக்கிறேன்' என்று வாக்குத்தத்தஞ் செய்துவந்தேன்" என மறுமொழி பகர்ந்தான்.

அதுகேட்டு, பிரபு, 'ஓகோ! மெத்த நன்றாயிருக்கிறது!' என்று முகங்கடுத்து மொழிந்து, துவாரபாலகனைப் பிடித்து வரச்சொல்லி ஐம்பது அடி அந்தக்ஷணமே அடிப்பித்துச் சேவகத்தினின்று நீக்கி அனுப்பிவிட்டார். அதன்பின், செம்படவனுக்கு அவ்வுயர்ந்த மச்சத்திற்காகத் தகுந்த விலை கொடுத்து உபசார வார்த்தை சொல்லி அனுப்பினர்.

20. வழக்கிட்டு வறுமை யடைதல்

ஒரு சிங்கமும் கரடியும் காட்டில் உலாவித் திரியும் போது, வழியில் மான்குட்டி ஒன்று இறந்துகிடக்கக் கண்டு, தம்மில் எதற்கு அது உரியதென்று வழக்கிடத் தலைப்பட்டன. இவ்வழக்கை இரண்டும் இணங்கித் தாமே தீர்த்துக்கொள்ள முடியவில்லை. 'துரும்பு பெருத் துத் தூணாற் போல' அற்ப விவாதம் வரவர வளர்ந்து அவை இரண்டும் ஒருகை பார்க்கவேண்டுமென்று சண்டை தொடங்கின.

நடந்த சண்டை சாமானியமானதல்ல; அவை உக்கிராவேசத்துடன் பொருது ஒன்றையொன்று கடித்துக் கிழித்தும், அடித்து மிதித்தும் வெகு தீங்கு விளைத்தன. அவை தமது கண்ணெதிரில் தெய்வச்செயலாக அகப் பட்ட அரும்பொருளை உண்ண ஆற்றாமல் உதிரம்பெருகக் களைத்து விழுந்து பெருமூச்செறிந்து கிடந்தன. அத்தருணத்திற் குள்ளநரி ஒன்று தற்செயலாய் அவ்விடம் சேர்ந்து, மிருகேந்திரனும் கரடியும் செயலற்றுக் குற்றுயிராய்க் கிடக்கக்கண்டு, அச்சமின்றிக் கிட்டப் போய் மான்குட்டியைக் கௌவிக் கடுகென இழுத்துக் கொண்டு தப்பிவிட்டது.

அதைத் தடுக்க வசமற்று பலம் குன்றியிருந்த எதிரிகள் இரண்டும் பரிதபித்து, 'ஆ! நம்மைப்போல மதி கெட்டு மானமிழந்தவர்கள் எங்கும் இல்லை! நாம் பிணங்கி ஒருவரை ஒருவர் வருத்திச் செயலழிந்துபோக, அந்தக் கர்மசண்டாளன் ஏனென்று கேட்பார் எவருமின்றி, இஷ்டப்படி மான்குட்டியின் மாமிசத்தைத் தின்று கொழுத் துச் சுகித்திருக்கும்படி நேர்ந்ததே! இது கால இயற்கை!' எனச் சொல்லி துக்கித்தன.

நியாயசபை ஏறி வழக்கிடலாகாது. சில சமயங்களில் உபயகட்சியாரும் ஒருவர்மீதொருவர் உக்கிரங்கொண்டு

மெய்ம்மறந்து, தம்முயிரைத் துரும்பெனவும் பொருள் செய்யாமல் எதிரியை வாட்டி வருத்திக் குடிகெடுப்பதே கருமமென்று ஆக்கிரமிப்பார்கள். வழக்கு நடந்தேற நடந்தேற நியாயவாதிகளுக்கு நாளொருவண்ணம் செல்வம் பெருகும். விவாதப்பட்டு நியாயாதிபதி முன்னிலையிற் போய் வியாச்சியஞ்செய்து கைப்பொருள் இழந்து, காலத்தை வீணிற் கழித்துத் தீராத தொல்லைக்கு ஆளாவதிலும், நல்லவர்களென்று நால்வரும் நன்குமதிக்கும் உத்தம புருஷர் இரண்டு மூன்று பெயருக்குத் தமது வழக்கைச் சொல்லித் தீர்த்துக்கொள்வது உசிதம்.

21. கல்வி

1

கற்பக் கழிமடம் அஃகும்; மடம் அஃகக்
குற்றம் தீர்ந்(து) இவ்வுலகின் கோள்உணரும்; கோள் [உணர்ந்தால்
தத்துவம் ஆன நெறிபடரும்; அந்நெறி
இப்பால் உலகத்(து) இசைநிறீஇ, உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.

(நான்மணிக்கடிகை)

2

கல்வி கரைஇல; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமை(வு) உடைய கற்பவே, நீர்ஒழியப்
பால்உண் குருகின் தெரிந்து.

(நாலடி நானூறு)

3

கண்உடையர் என்பவர் கற்ருேர்; முகத்(து)இரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

கற்க கச(டு) அறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்றதனுல் ஆயபயன் என்கொல், வால்அறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்?

(திருவள்ளுவர்)

22. சூரியன்

சூரியன் வெவ்வேறு தூரத்தில் தன்னைச் சுற்றிவருகின்ற பல அண்டங்களுக்கு வெப்பமும் ஒளியும் கொடுக்கின்றது. அவ்வண்டங்களுக்குக் கிரகங்கள் என்று பெயர். அவைகளில் ஒன்று நாம் வாழ்ந்திருக்கின்ற பூமி.

சூரியனை தூரதிருஷ்டிக் கண்ணுடியாற் பார்க்கும்பொழுது சிலவேளை அதன் மேற்புறத்தில் அங்கங்கே களங்கம் தோன்றும். அந்தக் களங்கங்கள் சூரிய விம்பத்தில் கிழக்கிலிருந்து மேற்கு முகமாய்ப் படர்ந்திருப்பதாகக் ககோள சாஸ்திரிகள் கண்டறிந்தார்கள். அன்

றியும் அவை தோன்றி மறைந்து மீளவும் தோன்றச் செல்லும் காலத்தைக் கணக்கிட்டு, ஆதித்தன் இருபத்தைந்து தினத்தில் ஒரு வட்டம் சுழலுகிறதென்று நிச்சயித்திருக்கிறார்கள்.



ஆதித்தன் பெரும்பாலும் எரிகின்ற ஆவி திரண்டு உருவாகியது. ஒரு பானைநீரை அடுப்பில் வைத்துக் காய்ச்ச, அது சுண்டி ஆவியாகப் பரிணமித்துப் போய் விடும். சூரியவெப்பம் அபரிமிதமாயிருப்பதனால் இரும்பும் அதில் வெந்து உருமாறி ஆவியாய்ப் போகின்றது. சில சமயங்களில் எரிகிற சுவாலை இரண்டிலட்சம் மைல் உயரும். சூரிய விம்பத்தில் தோன்றும் மறுக்கள் பெரும் பிளப்புகள், அல்லது பள்ளங்களென்று உத்தேசிக்கப்படுகின்றன. மேலும் நமக்குத் தோன்றும் வட்டமான ஆதித்தனுக்கு அப்பாலும் இலட்சாதி லட்சம் மைல்தூரம் தேஜோமயமான ஆவி எட்டியிருக்கின்றது. ஒப்பிட்டுப் பார்த்தால், சூரியனிலும் பூமி இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் மடங்கு கனமுள்ளது.

சூரியனைச் சந்திரன் மறைக்கும்பொழுது சூரிய கிரகணம் என்று சொல்லுகிறோம். சந்திரன் பூமியை நாலு வாரத்திற்குள் ஒரு வட்டம் சுற்றிவருகின்றது. அது பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வந்து மூன்றும் நேராக நிற்கும் பொழுது சூரிய கிரகணம் உண்டாகும். அது பூரண கிரகணம். சூரிய விம்பம் முழுதும் மறையாதிருந்தால் அதற்குப் பாரிச கிரகணம் என்று பெயர். அமாவாசையிலன்றிச் சூரிய கிரகணம் உண்டாகாது.

சந்திரன் சாதாரணமாய் சூரியனுக்கும் பூமிக்கும் நேரே மத்தியில் வராமல் ஒருபக்கம் சற்று விலகி நிற்பதனால், சூரிய கிரகணம் மாசந்தோறும் உண்டாகிறதில்லை.

கிரகணம் உண்டாகும் காலத்தையும் அதன் பரிமாணத்தையும் ககோள வித்தியா பண்டிதர்கள் முந்தியே கணித்துச் சொல்வார்கள். இராகு கேது என்னும் சர்ப்பங்கள் சூரிய சந்திரரை விழுங்குவதனால் கிரகணம் உண்டாகிறதென்று நிர்நிமித்தமாக நினைத்து, விவரம் தெரியாத பல பாமரர்கள் கிரகணத்திற்கு மிகவும் அஞ்சுகிறார்கள். சீனரும் காப்பிரிகளும் கிரகணகாலத்தில் அந்த சர்ப்பங்களை வெருட்டித் துரத்தும்பொருட்டுப் பேரொலி உண்டாகப் பறை முழக்குவார்கள். கிரகணத்தால் நமக்கு ஒரு விக்கினமும் இல்லை.

23. முக்குற்றங்கள்

இளைஞர் எல்லோரும் மிக வருந்தித் தவிர்க்கவேண்டிய குற்றங்கள் மூன்று. அவை துர்ச்சிந்தனை, துர்வசனம், துர்க்கிரியை.

துர்ச்சிந்தனை மனத்திற்குக் கடுவிஷத்திற்குச் சமானமாம். அது உள்ளத்திற் குடிகொண்டிருக்க இருக்க அதனால் விளையும் கெடுதி விர்த்தியாகும். பாம்புக்கடியாவது, பித்தம்பிடித்த நாய்க்கடியாவது துர்ச்சிந்தனையிலும் பிராணனுக்கு அதிக நாசத்தை உண்டாக்காது. ஆனதுபற்றி, உங்கள் உள்ளத்தினின்று துர்ச்சிந்தனைகள் அனைத்தையும் பற்றறத் தொலைக்க வருந்தி முயலுங்கள். அவைகளுக்கு அஞ்சி, அவைகளைத் தவிர்த்து, அவைகளுடன் எதிர்நின்று பொருது, அவைகளுக்கு உங்களைத் தப்புவித்துக் காக்கும்படி தெய்வத்தைக் கெஞ்சி வேண்டிக்கொள்ளுங்கள்.

துர்ச்சிந்தனை சாதாரணமாய் துர்வசனம் வரும்வழியாகும்; துர்வசனம் உடையவனுக்கு அது தீராப் பெருந்தொல்லையைத் தருவதற்கு ஐயமில்லை. நாம் கேட்கும் துர்வசனங்கள் நமது செவிகளின் வழியே நுழைந்து இருதயத்திற் புகுந்து கடவுள் கட்டளைகளை மீறும்படி நம்மைத் தூண்டிவிடும். ஆகவே, துர்வார்த்தை உட்செல்லாவண்ணம் உங்கள் செவியை நன்றாய் அடைத்துக் கொண்டு, அது பேசுகிறவர்களைக் கண்டாற் பெருவாரி நோய்க்கு பயப்படுவதுபோல திகில்கொண்டு நடுநடுங்கி ஓடித் தப்பிவிடுங்கள்.

துர்ச்சிந்தனையை அடுத்துவருவது துர்வசனம். இவை இரண்டையும் தொடர்ந்து வருவது துர்க்கிரியை. உங்கள் நெஞ்சில் துர்ச்சிந்தனைகளை உட்செல்லவிடாது தடுத்துக்கொள்வீர்களானால், ஒருபொழுதும் உங்கள் வாக்கில் துர்வசனம் வராது. இது திண்ணம். துர்வசனம் ஒன்றும் மொழியாதிருப்பீர்களானால் துர்க்கிரியை செய்யாமல் தப்பிக்கொள்வீர்கள்.

முதலாவது உண்டாகும் நெருப்புப்பொறியை முழுவதும் அவித்துப்போடுங்கள். அவித்தால் உங்கள் வீட்டை அக்கினிக்கு இரையாக்காமல் தப்புவிப்பீர்கள். ஆதியில் உங்கள் நெஞ்சில் உற்பத்தியாகும் துர்ச்சிந்தனையை முளையிலே நசுக்கிக் களைந்துவிடுங்கள். இப்படிச் செய்தால் துர்க்கிரியை ஒன்றும் நீங்கள் செய்யாதிருப்பீர்கள்.

நற்சிந்தனைகள் நன்மையான மற்ற அனைத்திற்கும் ஊற்றாயிருக்கின்றன. ஆதலால் உங்கள் நெஞ்சில் நற்சிந்தனைகளை அழியாத பெருஞ்செல்வப் பொருளாக அமைத்து வைத்துக்கொள்ளுங்கள். இந்த நற்புத்தியைத் தள்ளிவிடாது தழுவி நடப்பீர்களானால், துர்ச்சிந்தை, துர்வசனம், துர்க்கிரியை என்னும் கொடிய குற்றங்கள் மூன்றும் உங்களைப் பீடிப்பதில்லை.

24. நோய்

'நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்.' செல்வத்து ளெல்லாம் பெருஞ்செல்வம் தேகஆரோக்கியம். நாம் ஆரோக்கியமாய் இருக்கும்பொழுது நமது சொந்தக் கருமத்தை முடிக்கவும் பிறருக்கு நன்மை செய்யவும் வல்லவர்களாவோம். வியாதி கண்டு நமது பலம் ஒடுங் கும்பொழுது நம்மைச் சூழ்ந்துள்ள பெற்ருர் உறவினர் அயலார் அனைவருக்கும் எடுப்பதற்கரிய சுமையாகிப் பூமிக்குப் பாரமாவோம். ஆனதுகொண்டு நமது தேக சுகத்தைப் புத்திகெட்டுப் போக்கடியாமல் காத்துக் கொள்வது நமது கடன்.

பிணி நிர்நிமித்தமாகத் தானே உற்பத்தியாகிறதென் றும் நம்மேல் வெறுப்புற்ற துஷ்டதேவதைகளால் வரு கிறதென்றும் பேதைகள் வெகுபெயர் நினைத்திருக்கின் ருர்கள். காரணமின்றி நமக்கு ஒருபொழுதும் வியாதி உண்டாகிறதில்லை. வியாதியைத் தோற்றுவித்த கார ணம் இன்னதென்று நமக்குத் தெரியாதிருப்பினும், வைத்தியம் பயின்று வியாதியின் உற்பத்தியை அநுபவ சித்தமாய்க் கண்டறிந்த நிபுணர்கள் பெரும்பாலும் தெரிந்து சொல்லுவார்கள். கொதிக்கிற நீரிற் கை விட் டால் கை வெந்துபோம். நாம் நஞ்சைத் தின்ருல் நஞ்சு நம்மைக் கொல்லும். பெரும்பாலும் நமது அஜாக்கிர தையினுலேயே வியாதி உண்டாகின்றது. கனியாத செங்காயையாவது, எளிதில் ஜீரணியாத வேறு யாதா யினு முணவையாவது தின்ருல், நமது வயிற்றிற் கோளா றுண்டாகும். ஈரவஸ்திரத்தை உடுத்திருந்தால் ஜலதோ ஷம் உண்டாகும். சதுப்பு நிலத்திற் சுரக்கும் நீரில் ஸ்நானபானஞ் செய்தால் ஜுரம் கண்டு வருந்துவோம். பிணியைத் தோற்றுவிக்கும் காரணங்கள் இன்னு மநே கம் உண்டு.

அம்மை ரோகத்தின் விதையை மாரியம்மன் என்னும் தேவதை விதைக்க, அது முளைத்து மனுஷரை மடிவிக்கிறதென்றும், வேறொரு அம்மன் சினத்தால் வாந்திபேதி உண்டாகிறதென்றும் சிலர் சொல்வார்கள். இப்படி எண்ணுவது சுத்த விபரீதம். வாந்திபேதி முதலிய பெருவாரி நோய்கள் துஷ்ட தேவதைகளால் உண்டாகின்றனவென்பது சுத்த அபத்தம்.

தெய்வமறியாமலும், அவர் உத்தரவில்லாமலும் அணுவும் அசையாதென்பது திண்ணம். கடவுள் தாம் செய்வது எதையும் எப்பொழுதும் அன்புடன் செய்துவருகிறார். ஒருநாளும் அவர் நம்மை நிர்நிமித்தமாகத் தண்டிக்கிறதில்லை. நமக்குப் பிணி உண்டாகும்பொழுது தீரத்தெளியச் சிந்தித்துப் பார்ப்போமானால், யாதாயினும் ஒரு விதத்தில் அதிக்கிரமித்து நடந்ததனாலேயே அது உற்பத்தியானதென்று பெரும்பாலும் காண்போம். ஆதலால், எல்லாரும் வியாதிவருமுன்னே அதை தவிர்த்துத் தேகசுகத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். 'வெள்ளம் வருவதற்கு முன்னே அணை கோலிக்கொள்ளவேண்டும்.'

25. அகந்தையால் வரும் அழிவு

ஒருநாள் ஒரு நதியின் அக்கரையில் ஒன்றும் இக்கரையில் ஒன்றுமாக வெள்ளாடுகள் இரண்டு நின்றன. அந்நதியில் மரவாராவதி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அது அகலமின்றி மிகவும் ஒடுங்கியிருந்ததனால், ஆடுகள் இரண்டும் தட்டாமல் தடாமல் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய்ச் சென்று ஆற்றைக் கடக்க முடியவில்லை.

வாராவதி இப்படி இடுக்காயிருந்ததனால், இக்கரையில் நின்ற ஆடு வாராவதி ஏறி ஆறு கடந்து அக்கரை சேர்ந்தபின், அங்குள்ள ஆடு தானும் சுகமே அவ்வழியால்



நதி தாண்டிப்போனுற் போகலாம். இதில் ஒரு சங்கடமு மில்லே. ஆனுல், கர்வமுள்ள அவ்வாடுகளிரண்டும் பொறுமையின்றி ஒன்றையொன்று முந்திப்போகப் பதைத்தன. 'இந்தப் பாலத்தின் வழியாய் நதி தாண்ட உனக்குள்ள உரிமை எனக்குமுண்டு. நீ ஆறு தாண்டு மளவும் நான் காத்திருந்து வீணிற் பொழுதுபோக்குவ தேன்?' என்று ஒரு ஆடு சொல்ல, மற்றது, 'இந்த வாரா வதி கட்டியது உனக்கும் எனக்குமொழிய உனக்கு மாத்திரம் அல்லவே!' என்று எதிர்வழக்குரைத்தது.

இந்தப்பிரகாரம் இரண்டொரு நாழிகைநேரம் ஆடு கள் இரண்டும் வாதிட்டு, கடைசியில் வந்தது வரட்டு மென்று ஒன்றுக்கும் அஞ்சாமல் மனம் துணிந்து இக் கரையில் நின்ற ஆடு வாராவதி ஏற, எதிர்கரையில் நின் றது மாற்ருனுக்குப் பின்னிடைந்து நிற்பது இழிவென்று தானும் ஏறியது. அவைகள் தீப்பொறி பறக்கக் கண் சிவந்து ஒன்றை ஒன்று முகம் கடுத்துச் சினந்து பார்த் தது, 'ஆண்மை குன்றி உனக்கு அஞ்சிப் பின்னிடைந்து நில்லாமல் நான் முந்திப் போவேன்!' என்று வாய்திறந்து சொல்லுவதுபோல் இருந்தது.

முகக்குறிப்பால் தோன்றியவண்ணம் அவை இரண்டும் முன்வைத்த காலைப் பின்வையாமற் சென்று வாராவதி மத்தியில் ஒன்றையொன்று நெருங்கி எதிர்ப்பட்டன. தட்டாமல் முட்டாமற் போகப் பாலம் அகன்றதல்லவே. ஆனதால், இரண்டும் முட்டி ஆற்றில் விழுந்து மூழ்கிப்போயின. இது நிற்க.

மிகவும் உயர்ந்த ஒரு செங்குத்து மலைச்சிகரத்தின் ஒரு பக்கம் சற்றுப்புடைத்து ஒடுங்கியிருந்தது. அவ்வழி தாண்டிப்போக இருபக்கமும் இரண்டு ஆடுகள் எதிர்ப்பட்டன. அவைகள் இரண்டும் ஒரேகாலத்தில் அவ்வொடுக்கமான வழியில் கடந்துபோக முடியாது. ஒன்று தான் போன வழியே திரும்பி மலைச்சிகரத்தைச் சுற்றி வருவதுமோ சாத்தியமல்ல, வெகுதூரம் சுற்றவேண்டும். இவ்வளவு இடுக்கண் நேர்ந்த சமயத்தில் அந்த ஆடுகள் ஓர் உபாயம் செய்தன. ஒன்று மலைப்பக்கத்தில் ஒடுங்கிப் புடைத்த இடத்தில் தன் உடலை ஒடுக்கிப் படுத்துக் கொள்ள, மற்றது பதறாமல் மெதுவாக அதைத் தாண்டிச் சென்றது. பின்பு படுத்திருந்த ஆடும் எழுந்து இரண்டும் அதனதன் வழியே கஷ்டமின்றிப் போயின.

26. உழவு

1

சுழன்றும்ஏர்ப் பின்ன(து) உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்(று) எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(திருவள்ளுவர்)

ஆவணக்காப்பக சென்னை-600 008. 149544

2

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச் [டால்
சென்றுவர அண்ணிதாய், செய்வாரும் சொற்கேட்
என்றும் உழவே இனிது.

(அவ்வையார்)

3

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்த, பார்வேந்தர் முடிதிருந்தும்!
பொங்(கு)ஓதைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்து
பெரும்
செங்கோலை நடத்தும்கோல் ஏர் அடிக்கும் சிறுகோலே!

வானமழை பொழிந்தாலும் வளம்படுவ(து) எவராலே?
ஞானமறையவர்வேள்வி நலம்பெறுவ(து) எவராலே?[மத
சேனைகொடுபொரும்மன்னர்செருக்களத்தில்செருக்கு(ம்)
யானைவலி எவராலே? இவர் எருத்தின் வலியாலே!

கார்நடக்கும்! படிநடக்கும்! காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில், புகழ்சால் இயல்இசைநா டகம்
நடக்கும்!
சீர்நடக்கும்! திறன்நடக்கும்! திருஅறத்தின் செயல்
நடக்கும்!
பார்நடக்கும்! படைநடக்கும்! பசிநடக்க மாட்டாதே!

(ஏரெழுபது)

27. 'செறுவொடு நிற்கும் சிறுமை'

கிருஷ்ணனும் இராமனும்

கிருஷ்ணன்—நீ கோபாலுடன் கைகலந்து சண்டை யிடப்போன காரணம் என்ன?

இராமன்—அவன் நிந்தை சொல்லி என்னைக் கோப மூட்டினன்.

கிருஷ்ணன்—அது இருக்கட்டும், நீ அவனுடன் சண்டை யிடுவானேன்?

இராமன்—அவன் வசை சொன்னல் எனக்கு வாய் இல்லையா? நானும் வைதேன்; வைதவுடன் உறைக்க ஒரு அறை அறைந்தான். அவன் கையால் அடி வாங்கிக் கொண்டு ஊமைபோல் ஒன்றும் பேசாமல் அவனுக்கு பயந்து போய்விட நான் மானம் கெட்ட மாடல்ல; அவ ரவர் அந்தஸ்திற்குத் தக்க மானம் உண்டென்று அறி யாயா! 'நீ ஒரு அறை அறைந்தால் நான் இரண்டு அறை அறைவேன்' என்று பதருமல் அவனுக்குச் சொன்னேன்.

கிருஷ்ணன்—அப்படியானல், நீங்கள் இருவரும் ஒரு வெற்றெலும்புக்காகச் சண்டையிடும் பருந்துகளுக்கு சமானராவீர்களே தவிர மனுஷர் அல்லவே!

இராமன்—என்ன சொல்லுகிருய்! நினைத்துப் பேசு! அவன் மாத்திரம் முன்பின் யோசியாமல் திடீரென்று என் முகத்தில் உதிரம் தெறிக்கக் கை ஓங்கி ஒரு அறை அறைய, நான் அதைச் சகித்துக்கொண்டு போய்விட மனம் ஒப்புமா?

கிருஷ்ணன்—ஒருவன் அறியாமற் செய்த அற்பப் பிழையை நீ பொறுத்துக்கொண்டால் உனக்கு அதனு லுண்டாகும் கெடுதி என்ன? தன்னுயிரைப்போல மன்

னுயிரிடம் அன்புகூர்வது நமது கடனென்று உனக்குத் தெரியாதா? அவன் உன்னை அடிக்க வரும்பொழுது நல் வார்த்தை சொல்லி நீ தடுத்தாலும் தடுக்கலாம். உன் சொல்லைக் கேளாமல் அவன் அடித்தால் உபாத்தியாய ரிடம் சொல்லலாமே!

இராமன்—ஆண்மையின்றி அப்படிச்செய்வது எனது சுபாவமல்ல. என்னை அடித்தவனை நானும் அடியாது விடுவேனே? இடம் கிடைத்தால் அவனை நொறுக்கிக் கொன்றுபோடுவேன்.

கிருஷ்ணன்—உன் பதைப்பையும் துடிப்பையும் கடுப் பையும் பார்க்கும்பொழுது, நீ அப்படித்தான் செய்வா யென்று தோன்றுகிறது. ஆனல், சற்றே ஆற அமர நினைத்துச் சொல்லு, உன்னை அடித்தவனை நீயும் திருப்பி அடிப்பது தர்மமா?

இராமன்—அவன் என்னை இல்லாத வசை சொல்லி தூஷிக்கலாகாதே!

கிருஷ்ணன்—வாஸ்தவந்தான். நாலாறு மாசத்திற்கு முந்தி அல்ல, நேற்றிராத்திரிதான் அந்த அறியாத பயல் பொன்னனை நீ வாய்பதறி அவதூறுசொல்லி வைதது செவியில் அறைந்தாற்போல எனக்குக் கேட்கவில்லையா? அவன் உன்னைக் கொல்லவா வந்தான்?

இராமன்—ஆகா! நல்லகேள்வி கேட்டாய்! அந்தச் சிறு பூச்சியா என்னைக் கொல்லுகிறது? ஒரு அறையில் நின்ற இடத்தில் அவனைக் கிறுகிறுத்துப் பிரேதமாக விழுத்த எனக்குத் திறமை இல்லையா?

கிருஷ்ணன்—சரிசரி, நீ பெரியவனயிருப்பதனல் உன் இஷ்டப்படி ஒருசிறுவனை நிந்தை சொல்லி தூஷிக்கலாம்! அந்தச் சிறுவனே உன்னை நிந்தை சொல்லலாகாது! நீ சொல்லும் நியாயம் இப்படித்தான் இருக்கிறது. நல்லது,

என்னை நீ நிந்தை சொல்ல, அதற்காக நான் உன்னை அடித்தேனென்று வைத்துக்கொள். நான் அடித்தது உனக்குச் சம்மதமாயிருக்குமா? உன்னிலும் திடகாத்திரனாகிய நான் உன்னை ஒரு அறை அறைந்தால், உடனே இரத்தங்கட்டி முகம் கறுத்துப்போகுமே!

இராமன்—உன்னிடத்தில் அடிபடுவது ஒருநாளும் எனக்குச் சம்மதமாகாது!

கிருஷ்ணன்—அப்படியானால், இனி ஒருபொழுதும் எவருடனும் சண்டையிடப் பதையாதே. கோபம் பாவம். தன்னை வெட்டுகிறவனையும் விழாமல் தாங்கிக் கொண்டிருக்கிற நிலத்தைப்போல, தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களையும் பொறுத்துக்கொள்ளுதல் தலைமையான தருமம் என்றும், தவசிகள்தாம் எல்லாரினும் பெரியவர் என்பார்கள், ஆனால் பிறர் கூறும் கொடிய மொழிகளைப் பொறுப்பவர்கள் அத்தவசிகளைப்பார்க்கினும் பெரியவர்கள் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

இராமன்—அது இன்றளவும் எனக்குத் தெரியாது; சண்டையிடுவது தைரியசாலியின் இயற்கையென்று எண்ணியிருந்தேன். இனி நான் இறக்குந்தனையும் எவருடனும் சண்டையிடுவதேயில்லை! இது எனது பிரதிக்கினை.

28. கெடுவான் கேடு நினைப்பான்

ஓர் குளத்திலுள்ள மீன்களையெல்லாம் தின்னவேண்டுமென்று ஆசைகொண்டிருந்த ஓர் கொக்கு ஒருநாள் அக்குளக்கரைக்குச் சென்று வாடிய முகத்தோடு அங்கு நின்றுகொண்டிருந்தது. அவ்வேளையில் அக்குளத்திலிருந்த மீன்களிலொன்று அக்கொக்கைப் பார்த்து, 'ஐயா! தாம் இவ்விடம் வந்து வாடிய முகத்தோடு நிற்பதற்குக் காரணமென்ன?'

என்று கேட்டது. உடனே வன்னெஞ்சமுடைய அக்கொக்கு பிரதியுத்தரமாக, 'மச்சேந்திரரே! எனக்குற்ற விசனத்தை யான் என்னென்று எடுத்துரைப்பேன்! நாளை ஓர் வலைஞன் இங்குவந்து வலைவீசி இங்குள்ள மச்சங்களையெல்லாம் பிடித்துக் கொண்டுபோகத் தீர்மானித்திருக்கிறான்; அதைக்கேட்டு என் மனம் மிகக் கலங்குகின்றது' என மொழிந்தது. கபடமற்ற அம்மீன் இதைச் செவியுற்று, 'ஐயா! அக்கொடிய செம்படவன் இவ்விடம் வந்து வலை வீசி எங்களை அகப்படுத்துமுன், தாங்களே எங்களை இரட்சிக்கவேண்டும்; ஆதலால் தாங்கள் தயை கூர்ந்து ஏதாவது உபாயம் சொல்லவேண்டும்' என்று மிகப் பணிவாய் வேண்டிக்கொண்டது. கொக்கு, 'அப்படியே ஆகட்டும், நான் சொல்லுகிற யோசனைப்படி சிறிதும் தவறாமல் நடக்கவேண்டும். அவ்வாறு நீரும் உமது பரிவாரத்தவர்களும் நடப்பீர்களானால், உங்களைச் செம்படவன் கையிலிருந்து தப்புவிப்பேன். ஜீவரட்சை செய்வதில் எனக்கு வெகு பிரீதி. ஆதலால் உங்களை ஒவ்வொருவராக என் கொடுக்கினால் தூக்கிக் கொண்டு போய்ச் செம்படவர் கண்ணுக்கெட்டாத தூரத்திலேயுள்ள ஓர் தாமரைத் தடாகத்திற் சேர்ப்பேன். அங்கு நீங்கள் சுகமாய் வாழ்ந்திருப்பதுமன்றி, என்னையும் ஜீவகாருண்யனென்று புகழ்ந்து போற்றுவீர்கள்' என்றது. இதற்கு அம்மீன்கள் உடன்பட, கொக்கு அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துச்சென்று தன் வயிறு கொண்டமட்டும் புசித்து, எஞ்சியவற்றை ஓர் பெரும் பாறையின்மீது உலரவைத்தது. இவ்வாறு ஒவ்வொன்றாய் அக்குளத்து மீன்களிற் சிலவற்றைத் தொலைத்தபின்னர், அம்மீன்களின் நண்பனாய் அங்குநெடுநாள் வாழ்ந்து கொண்டிருந்த ஓர் நண்டின் முறை வந்தது. கொக்கு ஆகாயமார்க்கமாய் நண்டைத் தூக்கிக்கொண்டு பறந்து போகையில், வழியில் மீன் முட்கள் சிந்திக் கிடப்

பதையும், கற்பாறைமீது மீன்கள் உலருவதையுங் கண்டு, தன்பாடும் இப்படித்தானாகும் என்றெண்ணி, கிலேசங்கொண்டது. இதற்குள் கொக்கு ஓர் தடாகத்திற்குச் சமீபமாய் வருவதைக்கண்டு, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, கொக்கின் கழுத்தைத் தன் கூரிய கொடுக்கினால் இரு துண்டாகத் துணித்துவிட்டுத் தடாகத்தில் வீழ்ந்து உயிர் பிழைத்தது. இவ்வாறு நண்டு தீர்க்காலோசனையோடு செய்த உபாயத்தால் தான் உயிர் தப்பிப் பிழைத்ததுமன்றி, அக்குளத்தில் மிகுந்திருந்த மீன்களும் உயிர் பிழைத்தன. 'கெடுவான் கேடு நினைப்பான்.'

29. மக்கள் கடமை

நம்மைப் பத்து மாதஞ்சுமந்து ஈன்றெடுத்து, கண்ணை இமை காப்பதேபோலப் பாதுகாத்து அருமையாய் வளர்த்தெடுத்த அன்னைக்கும், நம்மிடத்தே மிக்க அன்பு பாராட்டி நமக்கு வேண்டுவன யாவுமளித்து நமது சுகதுக்கமே தனது சுகதுக்கமாக மதித்து நடத்திய தந்தைக்கும் நாம் அதிகக் கடன்பட்டுள்ளோம். இது காரணமாகவே, சிறந்த கல்விச் செல்வராகிய அவ்வையார், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று கூறினர். புத்திரர் தம் பெற்றோர்க்கு எவ்வளவு கடன்பாடுடையராகின்றாரோ, புத்திரிகளும் அவர்களுக்கு அவ்வளவு கடன்பாடுடையவர்கள்தாம். ஆதலால், நாம் புத்திரர்க்கென்று கூறுபவை யாவும் புத்திரிகட்கும் அமையும். மிகச்சிறந்த தமிழ் நூலென்று உலகெல்லாம் புகழ்பெற்ற திருக்குறள் நூலாசிரியராகிய திருவள்ளுவர்,

"மகன் தந்தைக் (கு) ஆற்றும் உதவி 'இவன் தந்தை
என்னோற்றான் கொல்!' எனும் சொல்"

என்று கூறுகின்றார். அதாவது, புத்திரனொருவனுடைய நற்குண நற்செய்கை அறிவு ஒழுக்கமென்றிவற்றைப்

பிறர் கண்ணுற்று, 'இத்தகையவோர் புத்திர சிகாமணியைப் பெறுதற்கு இவன் தந்தை யாது மாதவம் புரிந்தனனோ! என்று அதிசயிக்குமாறு நடந்துகொள்வதே மைந்தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமை என்பதாம்.

ஆதலால், நம்முடைய தாய் தந்தையரை இவ்வுலகச் செல்வமனைத்தினும் மேலாய் மதித்தல்வேண்டும். பெற்றோர்மீது மிக்க அன்பு பாராட்டிய இரண்டு குமாரரைக் குறித்தது பின்வரும் சிறு சரித்திரம்.

அநேக வருடங்களுக்கு முன்னர் அக்கினிமலையொன்று திடீரென வெடித்து, எதிர்ப்பட்ட வீடுகள், தோட்டங்கள், மானிடர், விலங்குகள் முதலிய யாவற்றையும் ஒருங்கே அழிக்கத் தலைப்பட்டது. அச்சமயத்தில் அக்குன்றினடிவாரத்தேயுள்ள நகரத்திற் குடியிருந்த ஜனங்கள் தம்தம் பொருள்களில் விலையேறப்பெற்றவைகளை மாத்திரமெடுத்துக்கொண்டு உயிர் பிழைக்குமாறு விரைந்தோடினர். சிலர் தம் ஆபரணப்பெட்டிகளையும், சிலர் தம் பணப்பெட்டிகளையும், சிலர் மதித்தற்கரிய தம் பட்டாடைகளையும் எடுத்துக்கொண்டு அதிதீவிரமாய்ச் சென்றார். சிலர் யாதொன்றையு மெடுக்கக் கருதாது தம் இன்னுயிர் மாத்திரம் பிழைத்தாற் போதுமென்று கருதி அவ்விடம் விட்டு அகன்றனர். அங்ஙனம் அகன்றமாந்தருள் சகோதரரிருவரும், தப்பியோட சக்தியற்று நரைதிரைமேலிட்டு வயோதிக தசையையடைந்த அவர்கள் பெற்றோரு மிருந்தனர். நகரமாக்கள் விலையேறப் பெற்ற பொருள்களையெடுத்துக்கொண்டு ஓடிப்போவதை அவ்விரு குமாரருங் கண்ணுற்றனர். உடனே அவர்களிலொருவன் தன் தந்தையையும், மற்றவன் தன் தாயையும் முதுகின்மீது தூக்கிக்கொண்டு, விலையுயர்ந்த தமது பொருள்கள் யாவையும் நாசமாகும்படி விட்டுவிட்டு ஓடிப்போய் உயிர் பிழைத்தனர்.

மேற்கூறிய குமாரர் தம் பெற்றோரிடம் அன்புகூர்ந்ததுபோல, நாமும் நம்மைப் பெற்றவர்களை நேசித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய இஷ்டப் பிரகாரம் நடக்க முயலவேண்டும். அவர்கள் நமக்குக் காட்டிவரும் அன்பை நாம் ஒருபொழுதும் மறக்கக் கூடாது. அவர்களுக்கு நல்ல பெயருண்டாகும்படி நாம் நடந்துகொள்ளவேண்டும். கல்விக்கென்று செல விடுங்காலத்தில் நாம் கல்வியிலேயே கண்ணுங் கருத்து முடையவர்களாய் அதில் விர்த்தியடையவேண்டும். கல்வி முடிந்து உத்தியோகத்திலோ வேறு கடமைகளிலோ நாம் பிரவேசிக்கும்போது, உத்தமன், நீதிமான் என்னும் பெயர் நாம் வகிக்கவேண்டும்.

30. பூமியின் தின கதி

இராத்திரி காலத்தில் மந்தாரம் இல்லாதிருக்கும்பொழுது வீட்டினின்று வெளிப்பட்டு வானத்தை அண்ணாந்து பார்ப்போமாயின் எண்ணிறந்த தாரகைகள் நமது சிரசின்மேற் பளிச்சென்று பிரகாசிப்பதைக் காண்போம். உடனே நாம் வீட்டுக்குள் திரும்பிவந்து நாலைந்து நாழிகை சென்று மீளவும் வெளியே போய் நின்று பார்த்தால், அந்த நட்சத்திரங்கள் முன் நின்ற இடத்தைவிட்டு விலகி வேறிடத்தில் நிற்பதாகத் தோன்றும். பட்டை தீர்ந்த வயிரமணிகளை அணியணியாய் எங்கும் அடாப் பதித்திருக்கும் பாவனையைக் குறிப்பிக்கின்ற வெகு விஸ்தாரமான ஆகாயமண்டலம் கிழக்கினின்று நமது தலையைச் சுற்றி மேற்கே பெயர்ந்து போவதுபோல நமது திருஷ்டிக்குத் தோன்றும்.

எண்ணிறந்த தாரகா கணத்துடன் எங்கும் விரிந்து விதானம்போற் கவிந்திருக்கின்ற வானமும், விண்மணி

எனப்பெயர் வழங்கும் ஆதித்தனும் பூமியைச் சுற்றி ஓடுவதாக வெகு வருஷகாலம் மனுஷர் எண்ணிக்கொண்டிருந்தனர். பின்பு அறிவின்மிக்கோர் எண்ணித்தொலையாத தாரகைத்திரளையும், அத்தாரகைகளுக்கும் தமக்கும் உள்ள வெகு தூரத்தையும் தீர்க்க சிந்தனைசெய்து வரும்பொழுது, தமது கண்ணுக்குத் தோன்றும் காட்சிக்குமேற்குறித்த காரணத்திலும்மிக எளிதாக உணரத் தக்க வேறு காரணம் யாதாயினும் இருக்கவேண்டுமென்று சில நிபுணருடைய சிந்தனையிற்பட்டது.

நீங்கள் ஒரு வண்டியில்சவாரிபோகும்பொழுது சாலையின் இருமருங்குமுள்ள விருட்சங்கள், செடிகள் உங்களுக்கு எதிர்முகமாய் ஓடுவதாகத் தெரியும். நீங்கள் இருப்புப்பாதையின்மீது வண்டித்தொடரில் ஏறிச் செல்லும் தருணத்தில் மற்றொரு வண்டித்தொடர் ஒரு நிலையாக நின்றால், அவ்விரு தொடரில் ஓடும் தொடர் எதுவென்றும் நிற்கும் தொடர் எதுவென்றும் நிதானமாய்ப் பகுத்துணர்ந்து சொல்லத் தெரியாமல் மனந் தடுமாறுவீர்கள். நமது சிரசின்மேல் உயர்ந்த வானத்திற் பிரகாசிக்கும் ஆதித்தனும் நட்சத்திரங்களும் கீழ்த்திசையினின்று மேற்றிசை முகமாய்ச் செல்லுகின்றனவா, அல்லது நாம் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ச் செல்லுகின்றோமா என்னும் விவகாரத்தை இப்பொழுது எடுத்துக்காட்டிய திருட்டாந்தத்தால் நீங்கள் எளிதில் சந்தேகமறத் தீர்த்துக்கொள்ளக்கூடும்.

எரிகிற தீபத்தின் எதிரில் ஒரு கிச்சிலிப்பழத்தைக் கையிற் பிடித்துக்கொண்டிருந்தால் தீப முன்னிலையில் உள்ள அதன் பக்கம் வெளிச்சமாயிருக்கும். அந்தப் பழத்தை மெதுவாகத் திருப்பினால் முன் இருளாயிருந்த பக்கம் வர வர வெளிச்சமாக, வெளிச்சமாயிருந்த பக்கம் இருண்டுபோம். பூமி சுழன்று பகலும் இரவும் ஒன்றை ஒன்று அடுத்துத் தொடர்வது இவ்வண்ணமே. பூமி

சுழன்று வரும்பொழுது, அதில் நிற்கும் மனுஷர் கண்ணுக்கு பூமி நிலைபெயராது நிற்க, ஆதித்தன் தம்மைச் சுற்றி வருவதாகத் தோன்றும்.

பகலவனுகிய சூரியன் மத்தியஸ்தானத்தில் நிற்க, பூமியும், புதன், சுக்கிரன் முதலிய இதர கிரகங்களும் வட்டமாய் அதைச் சுற்றிவருகின்றன.

31. முயல் சிங்கத்தை வென்ற கதை

1. குறுமுயல் சிங்க மொன்றைக்
கொன்றதோர் கதைகூ றுகின்றேன்:
செறியுமோர் காட்டி லோராண்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடிஊன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி,

2. 'ஆணிளம் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்,
விதத்தினில் தினமொன் ருக
ஊணுனக் களிப்போம்!' என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்ருய்
அருந்தியங் கிருக்கும் நாளில்,

3. தனிமுய லொன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
'இனிஅது விடாது நம்மை,
எனினுமோர் எடுப்பெ டுத்து

வினையை இப் போது செய்து
வென்றுநாம் உயர்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்,
நமக்குநற் புகழுண்(டு)' என்றே

4. கருதிஅச் சிங்கத் தின்நற்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி,
'மன்னனெம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை, பிந்தி
வருவதென்? உரைநீ!' என்று
மனந்தனிற் சினந்து கூற,

5. 'ஐய! நின் பசித்த வேளைக்
கடியனேன் வந்தேன், ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவிஆங் கொளித்தி ருந்தேன்,
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன்,
சுவாமி!' என் றிறைஞ்சி நிற்க,

6. 'சிங்கநா மல்லால் வேறோர்
சிங்கநீ கண்டா யாகில்,
அங்கதைக் காட்டு வா!' என்
றழைத்தலு மழைத்துப் போயோர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை யெட்டிப் பார்த்த(து),
அதனிழ லுருவந் தோன்ற,

7. தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து,
துன்னுபங் கத்த மூழ்ந்தி,
துளங்கியே யுயிரி ழந்த(து)
என்னலால் உபாயத் தாலே
எதனையும் வெலலா மென்னும்
இன்னதோ ருண்மை யென்று
மெளிதினில் விளங்கு மன்றே.
(பஞ்சதந்திரப் பாடல்)

32. வாழ்நாள் மூட்டை

நீ தோளில் ஒரு மூட்டை வாதுமைப்பருப்பு எடுத்துக்கொண்டு போவதாக வைத்துக்கொள்வோம். போகும் வழியில் உன் கண்ணுக்கு எதிர்ப்படும் சிறுவர் சிறுமியர் யாவரும் உன்னைக் கெஞ்சிக் கேட்க, அவர்களுக்குத் தலைக்கொரு பருப்புக் கொடுத்துக்கொண்டு போவாயானால், அரை நாழிகைக்குள் பருப்பெல்லாம் செலவாய்ப்போகுமே.

இவ்வுலகில் நம்மெல்லாரையும் கடவுள் தலைக்கு ஒரு மூட்டையுடன் அனுப்பியிருக்கிறார். அது வாதுமைப் பருப்பு மூட்டை அல்ல, வாழ்நாள் மூட்டை. நாம் வாழ்நாள் மூட்டையைச் சுமந்துகொண்டு செல்லச் செல்ல, காலம் என்பது எப்பொழுதும் நம்மைத் தொடர்ந்து, நம் பைக்குள்ளிருந்து ஒவ்வொரு தினத்தை எடுத்துக்கொண்டு வருகின்றது. எடுக்க எடுக்க எவ்வளவு பெரிய மூட்டையும் விரைவில் வெறுமையாய்விடும்.

மனுஷர் சுமந்துகொண்டு வழிநடக்கும் மூட்டைகள் வாதுமைப்பருப்பு மூட்டைகளாயிருந்தால், தோளிற் பொறுத்த சுமை வரவரக் குறைந்து இலேசாவது கண்டு, பருப்பு எடுத்த திருடன் யாவனென்று ஆத்திரத்துடன்

கேட்பார்கள். ஆனால், தாம் சுமந்துகொண்டுபோகும் தின மூட்டை நித்தமும் கனம் குறைந்துவருகிறதென்று வெகு ஜனங்கள் சொப்பனத்திலும் எண்ணுகிறதில்லை. பின்னும் வெகு ஜனங்களுக்கு அதைக்குறித்து எள்ளள வாயினும் சிந்தனை உண்டாகுமுன்னரே, அவர்கள் மூட்டைகளில் வைத்துக் கட்டிய தினங்கள் முக்காலே மூன்று வீசம் செலவாய்ப் போயினவென்று காண்பார்கள்.

அன்றன்று இராத்திரி காலத்தில் நாம் படுத்துக் கொள்ளப்போகும்பொழுது, நமது மூட்டைகளிலிருந்து பின்னும் ஒரு தினத்தைக் காலம் என்னும் திருடன் கவர்ந்துகொண்டனனென்பதை ஒருபொழுதும் மறந்து விடலாகாது. காலம் என்பது நமக்குக் கட்டிப்பொன்னிலும் விலை உயர்ந்த திரவியம். அதை நாம் வியர்த்தமாய்ப் போக்கடிக்கக்கூடாது. ஆகவே, நாம் பிராணனோடிருக்கும்பொழுது, நமக்குப் பின்னுக்கு உதவும் நற்குண நற்செய்கைகளில் வர வரத் தேறவும், நமது பாவ அழுக்கு நீங்கி நமக்குச் சித்த சுத்தி உண்டாகவும் நாம் வருந்தி முயன்று வகை யறிந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்து நாம் விருத்ததசை அடையுமளவும் ஜீவனோடிருப்போமானால், நமது பையில் செலவாகாமல் இருக்கின்ற சில தினங்களைக் காணும்பொழுது நமக்கு விசனம் மிகுந்து பெருமூச்சு வராது. சென்றநாள் அனைத்தும் வீணிற் கழிந்தனவென்று மனம்நொந்து வருந்தவும் நமக்கு நிமித்தம் இராது.

பிரதிதினத்தையும் பெரும் பயன் உண்டாகும்படி பிரயோகித்து வருவதுமன்றி, நமது தினங்களை நாம் அலட்சியம் செய்து தகாத செய்கைகளிற் போக்காம லிருக்கும்படி, நமக்குத் தோன்றாத் துணையாய் இருந்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை நாம் பிரார்த்திக்கவும்வேண்டும்.

33. சீனர் பாடசாலை

சீனு என்பது இந்தியாவிற்குக் கீழ்த்திசையில் இருக்கின்ற ஒரு பெருந்தேசம். எத்தேசத்தினும் சீனுவில் ஜனம் அதிகம். மிகவும் பழமையான நாகரிகமுள்ள நாடுகளில் சீனமும் ஒன்று.

பரந்த முகமும் சிறுத்துச் சரிந்த கண்ணுமுள்ள சீனருடைய நிறம் மஞ்சள். அவர்கள் உச்சியில்மாத்திரம் சிறு குடுமிவிட்டுத் தலையைச் சிரைத்துக்கொள்வார்கள். அக்குடுமி காலக்கிரமத்தில் நீளமாய் வளரும். அதைத் தலையிற் சுருளாகச் சுற்றிக் கட்டிக்கொள்வார்கள். சீனருக்கு அவர்கள் குடுமி மிகவும் அருமையானது. அவர்கள் தங்கள் தலைபோனலும் குடுமியை அறுக்கவிடார்கள்.

சிறிய பாதம், பெண்பாலார்க்கு சிரேஷ்ட அலங்காரமென்று சீனர் பாராட்டுவர். உயர்குலத்திற் பிறந்த

சீனப்பெண்களுக்கு இளம்பருவத்திற் பாதத்தை அடக்கி, ஒடுக்கிக் கட்டிச் சிறுக்கும்படி செய்வதனுல், அவர்கள் எப்பொழுதும் கிந்திக் கிந்தி நடப்பார்கள்.

சீனருடைய புத்தகங்கள் வெகு நூதனமானவைகள் அவர்கள் நம்மைப்போல வாக்கியங்களை இடப்பக்கத்தினின்று வலப்பக்கத்திற்கு வரிவரியாக எழுதுகிறதில்லை. தலைப்பிலிருந்து அடுக்கிச் சொல்லின்கீழ் சொல் அடுத்து வரப் பந்தி பந்தியாக எழுதுவார்கள். அவர்கள் அந்தந்தப் பக்கத்தின் அடியில் உள்ள கடைசி மொழி தொடங்கி, தலைப்பில் உள்ள முதல் மொழிவரையும், மேல்நோக்கி, வாசித்துக்கொண்டுபோவார்கள். இத்தேசத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் எப்படியோ, அப்படியே சீனுவிலும் பிள்ளைகள் உட்கார்ந்திருந்து அவரவர் பாடத்தை ஆடி ஆடிக் குரலெடுத்துப் படிப்பார்கள். சொன்னதைச் சொன்னபடி திருப்பிச் சொல்லுங் கிளியைப்போல அவர்கள் குறித்த பாடத்தை நெட்டுருப் பண்ணுவதொழிய, அதன் அர்த்தத்தை அவர்கள் அறிவதில்லை.

இப்பாடத்தின் தலைப்பில் உள்ள படத்தில், உபாத்தியாயர் ஒரு பீடத்திற் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்க, சிறுவன் ஒருவன் பக்கத்தில் அவருக்கு முதுகு காட்டிக்கொண்டு நிற்பதைக் காண்கிறோம். படித்த பாடத்தை ஒப்பிக்கும்பொழுது, திறந்து வைத்திருக்கும் புத்தகத்தைச் சிறுவர் பாராதபடி, அத்தேசத்தில் இவ்வழக்கத்தை அனுசரித்து வருகிறார்கள். கல்வி கற்பிக்கும் ஆசானுக்கு மாணுக்கன் முதுகு காட்டிக்கொண்டு நிற்பது மரியாதைத் தாழ்வென்று அவர்கள் எண்ணுகிறதில்லை. ஆகவே, சீனர் பாஷையில், ‘புத்தகத்திற்குப் புறங்காட்டி நிற்றல்’ என்பதற்குப் படித்த பாடத்தை உபாத்தியாயர் முன்னிலையில் ஒப்பித்தல் என்று அர்த்தமாம்.

அதிபூர்வகாலத்திற் சீனர் சிறிது நாகரிகம் பயின்று சீர்திருத்தம் அடைந்திருந்தனர். ஐரோப்பியருக்கும் சீனருக்கும் பழக்கமுண்டாவதற்கு நெடுநாள் முந்தியே, சீனருக்கு அச்சிடு முறையும், காகிதம் செய்யும் வகையும், காந்தப் பெட்டியில் திசை பார்த்து மரக்கலம் செலுத்தும் இரகசியமும் தெரியும். பின்னர் அவர்கள் கல்வியிலும் நாகரிகத்திலும் மேலும் மேலும் அபிவிர்த்தியின்றி, அநேக சகாப்தம் செல்லுமளவும் நின்றநிலையில் நின்றார்கள். தொன்று தொட்டுள்ள தேசாசாரம், குலதர்மம், மதாசாரம் முதலிய சம்பிரதாயங்களைப் பகுத்தறிவின்றிக் குருட்டுப்பிடியாகக் கைவிடாது அனுசரித்து, இதர தேச மனுஷரை ஏளனஞ் செய்துகொண்டு வந்ததே அவர்கள் நாகரிக அபிவிர்த்தி சூனியத்திற்கு முக்கிய காரணமாம். சீனர் தங்கள் தேசத்தை 'மத்திய ராஜ்யம்' என்றும், 'புஷ்பதேசம்' என்றும், 'விண்ணுலகு' என்றும் வியந்து கூறுவார்கள். அன்னிய தேசத்தாரை 'மிலேச்சர்' என்றும், பரதேசிகளாகிய 'பைசாசர்' என்றும் அபவாதம் கூறி இகழ்வது அவர்கள் வழக்கம்.

34. விடாமுயற்சி

அறுநூறு வருடங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தை அரசாண்ட மன்னர் யுத்தஞ்செய்து ஜயித்து ஸ்காத்லாந்தைக் கட்டி ஆள எத்தனித்தார். பகைஞராகிய ஸ்காத்லாந்தர் பட்சத்திற் சேனாதிபதி ராபர்ட் புரூஸ் என்பவர். அங்கிலேய மன்னர் சேனை அதிக பலபராக்கிரமமுள்ளதா யிருந்தது. ஆனதுபற்றி, அடுத்தடுத்து நடந்தேறிய அநேக போர்களில் அந்த புரூஸ் என்னும் தளகர்த்தர் அபஜயப்பட்டுப் பலவாறு கஷ்ட நஷ்டமடைந்து மிக் வருந்தினர். என்றாலும், இறுதியில் அவர்

அங்கிலேய தளத்தை முறியடித்து வென்று, தம் தேசத்திற்கு சுவாதீனம் உண்டாக்கினர்.

போர் நிகழுங் காலத்தே, சில சமயங்களில் ஜீவனத்திற்கு வழியின்றி, அவர் வேட்டையாடி, அகப்படும் விலங்கினத்தைப் புசித்துக் காலங்கழிக்கும்படி சம்பவித்தது. அயர்லாந்தின் வடகரையை அடுத்துள்ள ஒரு சிறு தீவில் அவர் பல மாசகாலம் புகலடைந்திருந்தார்.

திரும்பத் திரும்ப உண்டான பலவித அவஸ்தைகளையும் ஆபத்துக்களையும் அவர் அனுபவித்துத் தேகம் இளைத்து மனம் சலித்துச் சத்துருவின் கண்ணுக்குத் தென்படாமல் ஒளிப்பிடம் தேடித்திரிகையில், ஒரு தருணத்தில், சிறிய குடிசை ஒன்றைக்கண்டு அதிற் புகுந்திருந்தார். அவர் அதுவரையில் தாம் பட்ட பாட்டை நினைத்து, இனித் தம் தேசத்தாரை அங்கிலேய அரசருடைய அதிகாரத்தினின்று விலக்கி சுவாதீனராகும்படி தொடங்கிய கருமத்தைச் சிதறாமற் சாதிக்கத் தம்மால் ஆற்றாதென்று, முயற்சிசெய்யாது விட்டுவிட எண்ணினர். இப்படி எண்ணியிருக்கையில், ஒருநாள் அதிகாலையில் அந்தக் குடிசைக்குள் வெறும் தரையிற் படுத்திருக்கும்பொழுது முகட்டில் ஒரு சிலந்திப்பூச்சியை அவர் கண்டனர். அது வலை நெய்யும்படி நூலின் ஒரு முனையை ஒரு உத்திரத்திற் கட்டி, மற்றொரு உத்திரத்தைத் தாவிப் பிடித்து மறுமுனையைத் தொடுக்க அந்த நூலில் ஊசலாடியது. அது ஒருமுறை அல்ல, பலமுறை அவ்வுத்திரத்தைத் தாவிப் பிடிக்க மிக்க அவாவுடன் முயற்சி செய்தும் பலிக்கவில்லை. புரூஸ் என்பவர் அவதானமாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, அவ்வெளிய பூச்சி நூலில் ஊசலாடி உத்திரத்தை எட்டிப்பிடிக்க ஆறு விசை எத்தனித்தும், அவ் வாறு விசையும் அவ்வெத்தனம் வியர்த்தமாய்ப் போனதை எண்ணிக் கணக்கிட்டார். பின்பு தாமும் அங்கிலேய சைநியத்துடன் ஆறு

தடவை சமர்க்களத்திற் பொருது, ஆறு தடவையும் அபஜயப்பட்ட நினைவு அப்பொழுது அவர் மனத்தில் வந்தது. கொண்ட முயற்சியைச் சிலந்திப்பூச்சி மனம் சலித்து விட்டுவிடவில்லை; ஏழாவது முறை அதிக வேகத்துடன் ஊசலாடி, நினைத்தபடி உத்திரத்திற் சேர்ந்தது. அதைக் கண்டவுடனே அவ்வரசர் படுத்த படுக்கையினின்று திடீரென்றெழுந்து, "இச்சிறு பூச்சி மனம் சலியாமற் செய்த முயற்சியைச் சிந்திக்குமளவில், எடுத்த கருமத்தைக் கைசோரவிடாது பலகால் திருப்பிச் செய்துகொண்டுவருவது புத்தியென்று எனக்குத் தோன்றுகிறது. இவ்வெளிய ஜந்துக்குள்ள புத்தி எனக்கில்லாமற்போனது மிகவும் ஆச்சரியம்! அதுசெய்தபடி நானும் விடாது உழைத்துக் கருதிய கருமத்தைச் சிதறாது முடிக்கப் பார்க்கவேண்டும். பராக்கிரமத்தில் மிஞ்சிய பகைவன் தளம் என்னை ஆறு போர்களில் அபஜயப்படுத்தியதல்லவா? இன்னும் இளைத்துப் பின்னிடைந்து நில்லாமல் யுத்தஞ்செய்துகொண்டுவருவேன். இறுதியில் எனக்குத் தவறாது ஜயம் உண்டாகும். வெற்றியும் தோற்பும் ஒருவன் பட்சமல்ல" என மொழிந்து, முன் தாம் பட்ட அவஸ்தைகளை முழுதும் மறந்து மீளவும் சமர்புரியத் தொடங்கினார்.

நடந்த யுத்தத்தில், தொகை பெருகிய தளத்துடன் நெருங்கிவந்து சண்டையிட்ட அங்கிலேய அரசரை அவர் முறியடித்து வெற்றி சிறந்து ஈற்றில் ஸ்காத்லாந்திற்கு சுவாதீனமுண்டாக்கினார்.

35. தவளையும் சுண்டெலியும்

சுண்டெலி ஒன்று ஒருநாள் ஒரு ஆற்றங்கரையில் உட்கார்ந்து, ஆறு கடந்து அக்கரைசேர வழி தெரியாமல், வெகுநேரம் யோசித்துக்கொண்டிருந்தது. அப்



பொழுது அண்டையில் வெயில் காய்ந்த வஞ்சனையுள்ள ஒரு கிழத்தவளை, முகக்குறியாற் சுண்டெலியின் கருத்தை உணர்ந்து, "இதற்கு ஏன் இத்தனை யோசனை பண்ணுகிறாய்? நான் உன்னை மிக்க சந்தோஷத்துடன் சிறிதாயினும் வருத்தமின்றி அக்கரையில் சுகமாய்க் கொண்டு போய் விடுவேன். என்னுடன் எழுந்துவா" என்று நயவஞ்சகம் சொல்லியது. அது கேட்டு, சூது வாது அறியாத சுண்டெலி மனமகிழ்ந்து அதனுடன் போக சம்மதித்தது.

தவளை தன் இடுப்பில் பலமான முறுக்குநூல் ஒன்றைச் சுற்றி, அதன் முனையைச் சுண்டெலியின் ஒரு முன்னங்காலில் தொடுத்து, அதைத் தன் முதுகிலேற்றிக் கொண்டு ஆற்றிற் பாய்ந்து சென்றது. நட்டாற்றிற் போகும்பொழுது, தவளை அசதியில் மூழ்க நினைத்துத் தலையை நீரில் ஆழ்த்தவும், சுண்டெலி நழுவி விழப்போகிற சமயத்திற் பதறி உதறி, "ஐயா, தவளையாரே! இது என்ன துரோகம்! இதஞ்சொல்லி ஆசைகாட்டி இந்த

நடு ஆற்றிற் கொண்டுவந்து, அநியாயமாக ஆழ்த்திக் கொல்லவா போகிறீர்கள்!" என்று பரிதபித்துக் கூவிற்று.

அந்தக் குணங்கெட்ட மண்டூகம், "சொல்வார் சொன்னலும் கேட்பாருக்கு புத்தியில்லையா? 'இந்த ஆறு தாண்டி அக்கரையில் உன்னே சுகமாய்க் கொண்டுபோய்ச் சேர்ப்பேன்' என்று நான் சூதாகச் சொன்ன சொல்லே நம்பி, என் முதுகில் ஏறிவரத் துணிந்த முழுமூடனுகிய உன்னே ஆழ்த்திக் கொல்வது நியாயந்தான்" என மொழிந்து மூழ்கியது.

அச்சமும் விசனமும் நிறைந்துள்ள சுண்டெலி தனக்கு நேர்ந்த அவகதியைக்குறித்து மனம் நொந்து, தன்னே துர்மரணத்திற்குத் தப்புவிக்கும்படி தவளேயை இரந்து கேட்பது வியர்த்தமென்றெண்ணி வாய் திறவாதிருக்க, கொடிய மனமுள்ள தவளே அதை நீருக்குள்ளே விரைந்து இழுத்துக்கொண்டு போயிற்று. அப்போது ஆகாயத்தில் உயரப் பறந்த பருந்தொன்று ஆற்றிற் சுண்டெலி தத்தளிப்பது கண்டு, விரைந்து விழுந்து அதைப் பற்றிக்கொண்டுபோய்த் தன் கூட்டிற்சேர்த்தது. அதன் காலிற்கட்டிய நூலின் ஒரு முனே தவளேயின் இடுப்பிற் சுற்றி இருந்ததனுல், தவளே அதனுடன் கிளர்ந்து பருந்தின் கூட்டிற் சேர்ந்தது.

அதைக் கண்டவுடன், பருந்து, 'ஐயா, தவளேயாரே! தாங்கள் இங்குவந்த காரணம் என்ன?' என்று ஆச்சரியத்துடன் வினவ, பதறி உதறிக் குலேகுலேந்த தவளே, 'நான் இங்கு இப்பொழுது வந்த காரணத்தை என்னென்று சொல்வேன்! எனது கெடுநினேவு என்னே இங்கே இழுத்துக்கொண்டு வந்துவிட்டது! சுண்டெலியை இதஞ் சொல்லி ஆற்றிற் கொண்டுபோய் ஆழ்த்திக் கொல்லப் பார்த்த எனக்கு இந்தக் கொடிய ஆபத்து சம்பவித்தது!' என்று சொல்லியது.

அதுகேட்டு, பருந்து, 'சொல்லக்கேள், தோழா! தஞ்சமென்று அடைந்தவனை அடுத்துக் கெடுக்க நினைந்து, மோசஞ்செய்த உனக்குத் தக்க தண்டனையை இந்தக்ஷணமே செய்யாது விடுவது தர்மமல்ல. உன் துரோகத்திற்குப் பிராண தண்டனை ஒன்றுதவிர வேறில்லை' என்றுரைத்து, வஞ்சக நெஞ்சுள்ள மண்டூகத்தைக் கொன்று தின்றது. இதற்கிடையில் சுண்டெலி மெல்ல நழுவி மாயமாய் மறைந்துபோய்விட்டது.

36. "முயற்சி திருவினை ஆக்கும்"

'ஒருவனுக்கு நல்விதி இருந்தாலன்றி அவனுக்குச் செல்வமும் சுகமும் கிடையா' என்ற குசேல முனிவரை அவர் மனைவியார் தொழுதெழுந்து கூறியது:—

1. கலைமுழு(து) ஓர்ந்து, கரி(சு)எலாம் அறுத்த
 காந்தனே! பருமணி அரவத்
 தலைகிடந்(து) இமைக்கும் தாத்திரி அதனில்,
 சாற்றரும் தக்கநல் முயற்சி
 உலை(வு) அறப் புரியா ஒருவனுக்(கு) எங்ஙன்
 உற்றிடும் செல்வ(ம்)?நல் நிலத்தை
 நிலைபெற உழுது வித்திலான் தனக்கு
 நீள்பயன் உற்றிடும் கொல்லோ?

2. மானிடன் ஒருவன் தனக்(கு)அரும் செல்வம்
 வாய்க்கஎன்(று) அனுதினம் முயற்சி
 தான்உஞற் றுவனேல், கடவுளும் அதனைத்
 தந்(து)அளிக் குறும்; அதால் அன்றோ
 ஆனபேர் அறிஞர், "திருவினை முயற்சி
 ஆக்கு(ம்); அம் முயற்சிஇல் லாமை
 ஈன(ம்)ஆர் இன்மை புகுத்திடும் ஆல்" என்(று)
 யாரு(ம்)நன்(கு) உணர்தர நவில்வார்.

3. கடவு(ள்)ஈ குவன்என்(று) எண்ணி,நித் தியமும்
கருதுறும் முயற்சிசெய் யானேல்,
அடல்உறு செல்வம் அடைகுவ னேகொல்?
அருங்கலத்(து) இட்டபால் அடிசில்
மிடல்உடைக் கரத்தால் எடுத்துண(்து) எங்ஙன்
வீங்குவெம் பசிப்பிணி ஒழிப்பன்?
உடல்பவந் தனக்(கு) ஓர் ஆகரம் ஆகும்
உடல்நனி வாட்டு(ம்)மெய்த் தவத்தோய்!

(குசேலோபாக்கியானம்)



37. சிலந்திப்பூச்சி

சிலந்திப்பூச்சிகள் எல்லாம் ஒரு இனம் அல்ல. பல இனம். அவற்றுள் அநேக ஜாதிகளுக்குக் கால் எட்டு, கண் எட்டு, கொடுக்கு இரண்டு. அன்றியும், வலை நெய்யும் உறுப்புக்களும் அவற்றிற்கு உண்டு.

சிலந்திப்பூச்சியைக் குறித்து மிகவும் அதிசயிக்கத் தக்க விசேஷம் அது நெய்யும் வலையே. செம்படவன் திரைகடலில் வலைவீசி மீன் பிடிப்பதுபோல, சிலந்திப் பூச்சி வலைவீசி இரை பிடிக்கும். இப்படத்தின் தலைப்பி லுள்ள படத்தில் சிலந்தி நூல்நூற்கும் விதத்தைக் காணலாம். சிலந்தி உடலின் பின்பாகத்தில் மிகவும் சிறிய துவாரங்கள் நானூறு ஐந்நூறுவரையும் இருக் கின்றன. அத்தனை துவாரங்களினின்றும் ஒவ்வொரு இழை வருகின்றது. ஆனதுபற்றி, சிலந்தி வலையின் மிக்க நுணுக்கமான பாகமும் இருநூறு முந்நூறு இழை கள் சேர்ந்து அமைந்திருக்கின்றது. ஆகவே, அது எளி தில் அறுவண்ணம் அதிக பலமாயிருக்கின்றது.

சிலந்திக் கொடுக்குகளில் விஷம் இருக்கின்றதனால், தீண்டினவுடன் அவ்விஷம் சிறு பூச்சி புழுக்களைக் கொல் லும். உருவிற் பருத்த சிலந்தி கொட்டுவதனால் உண் டாகும் வேதனை தாங்குவதற்கரிய கடுவேதனையா யிருக் கின்றதனால், மனுஷரும் அதற்கு அஞ்சுவார்கள்.

ஒருவகைச் சிலந்தி நூற்கும் இழை அதிகம் நீண்டு ஆகாயத்தில் யாதொரு ஆதாரமுமின்றி, நீரிற் கட்டை மிதப்பதுபோலத் தோன்றும். சிலந்தி நூற்கும் நூல் வேண்டுமளவிற்கு நீண்டிருக்கும்பொழுது, அதன் வழி யாய் உயர ஏறி அது சிறு பூச்சிகளைப் பிடிக்கும். நீர்ச் சிலந்தி நீரின்கீழே சிறு வீடுகட்டி வாழும். சிலந்திக ளிற் சில வலை நெய்கிறதில்லை. வனத்திற் சஞ்சரிக்கும் கொடும்புலி சிறு விலங்கினத்தைப் பதிவிருந்து அசதியிற் பாய்ந்து விழுந்து கொல்லுவதுபோல, சிலந்திகளும் சிறிய பூச்சிகளை ஒரு தாவில் வேகமாய்த் தாவி விழுந் தடித்துக் கொன்று பட்சிக்கும். உடல் மிகவும் பருத்த சிலஜாதிச் சிலந்திகள் நெய்யும் வலைகளில் பூச்சி புழுக்க ளன்றி, சிறு குருவிகளும் அகப்பட்டு அவைகளுக்கு இரையாவது உண்டு.

மனுஷருக்கு அற்பச் சிலந்திகளால் விளையும் பயன் என்ன? மனுஷரைப் பலவிதங்களிற் பீடிக்கும் ஈக்களை அளவிற்கு அதிகம் அபிவிர்த்தியாக விடாமற் சிலந்திகள் கொன்று தின்னும்.

38. பதவிக்கேற்ற கவலை

பெரியோர் சமுகத்திற்போய் முகஸ்துதிசொல்லி வயிறுவளர்த்து நாட்கழித்த ஒருவன் ஒருநாள் ராஜசமுகம் சேர்ந்து, 'மகாராஜாவே, மனுஷருக்கு இவ்வையகத்தில் அமையத்தக்க நற்பேறுகள் அனைத்தும் தங்களுக்குக் குறைவில்லாதிருக்கின்றன. தங்கள் செல்வப்பொருளுக்கு அளவில்லை. தாங்கள் குறையின்றி வாழ்ந்து ராஜ்யபாரம் தாங்கி இஷ்டப்படி அதிகாரம் செலுத்திக் கொண்டு வருகின்றீர்கள். தங்களிலும் மிக்க பாக்கியம் உள்ளவர்கள் இந்த ராஜ்யத்தில் எங்கும் இல்லை' என முகஸ்துதி சொன்னான். அதுகேட்டு, அரசன் அவனைத் திரும்பிப்பார்த்து, 'நீ இவ்வளவு வியந்து பாராட்டுகின்ற சுகத்தை அனுபவித்து அறிய விரும்புகின்றாயா?' என வினவினான். அந்த இச்சகன் அரசனுக்குத் தன் மீது மிக்க அருள் பிறந்திருப்பதாக நினைத்து மனமகிழ்ந்து, 'ஆமாம், அரசே, விரும்புகின்றேன்' என்று உத்தரம் சொன்னான்.

பின்னர் அரசன் பீதாம்பரத்தால் திரையிட்டு, பட்டுறையுள்ள பஞ்சணைமெத்தை போட்டு, பரிமளிக்கும் மலர்தூவிய மஞ்சத்தின்மீது அவனை வீற்றிருக்கக் கட்டளையிட்டான். உருவிற் சிறந்த இளைஞர்கள் அவனுக்குக் குற்றேவல்செய்ய மஞ்சத்தின் நான்கு பக்கமும் வணங்கிநின்றார்கள். விதம்விதமான வாசனைத் தைலமும் நறுமணங்கமழும் மலர்தொடுத்த மாலைகளும் ஆங்கு வைக்கப்பட்டிருந்தன. அகிற்கட்டை முதலிய வாச

ளைப் பொருள்கள் எரிந்து எழுந்த புகை எங்குமுலாவி யது. வெள்ளிக்கிண்ணங்களிலும் பொற்கிண்ணங்களி லும், பக்குவமாய்ச் சமைத்த அறுசுவை உண்டியும், தட் டுகளில் மதுரமான கனிவர்க்கங்களும், நாவிற்கிதமான பலகாரங்களும் வைத்திருந்தன. இத்தனை வைபவங்க ளெல்லாம் எளிதாகப்பெற்ற அதிர்ஷ்டத்தை எண்ணி இச்சகனுக்குச் சொல்லிலடங்காத ஆனந்தமுண்டா யிற்று.

அதன்பின் அம்மன்னன் பளிச்சென்று மின்னும் வாள் ஒன்றை ஒரே ஒரு குதிரைமயிரில் தொடுத்து முகட்டிற்கட்டி அவன் தலைக்கு நேராகத் தொங்கவிட உத்தரவு செய்தனன். பளபள என்று எரிக்கும் கூரிய வாள் தொங்குவதைக் கண்டவுடனே இன்பத்தில் மூழ்கி யிருந்த அந்த இச்சகனுக்கு அச்சமும் ஆறுத்துயரமும் உண்டாயின. தன்னைச் சூழ்ந்து உபசரிக்கக் காத்து நின்ற அழகில் மிக்க இளையோரைத் திரும்பிப் பார்க்க வும், அறுசுவை உண்டிகளை உண்ணவும் அவன் மனம் எழவில்லை. விறைத்து நடுநடுங்கி அவன், 'அரசே! இவ் வளவு இன்பத்தின் இடையில் இந்த அச்சமுண்டாயிருப் பது சிறிதும் பிடிக்கவில்லை! ராஜ பதவியில் உள்ள இன் பங்களோடு பெருந்துன்பங்களும் உண்டு என்பது இப் போது எனக்கு விளங்குகின்றது! என்னுடைய முந்திய வாழ்க்கையே எனக்குப் போதும்!' என்று சொல்லி அரச னிடம் விடைகொண்டு சென்றான்.

39. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

நெருப்புப்போல வெயில் எரித்த ஒருநாள் ஒரு ஓநா யும் ஆட்டுக்குட்டியும் தாகத்திற்குத் தெண்ணீர் குடிக்க மலையடிவாரத்தில் ஒரு சிறு நதிதீரத்திற்கு வெவ்வேறு திக்கினின்று ஏககாலத்திற் போய்ச் சேர்ந்தன. அவ்



வாற்றங்கரையில் ஓநாய் நின்று தெண்ணீர் குடித்த இடம் மேடு; அதற்குச் சற்று எட்ட ஆட்டுக்குட்டி நின்று குடித்த இடமோ பள்ளம். தானாய் வந்து கண்ணுக்கெதிர்ப்பட்ட அவ்வாட்டுக்குட்டியைப் பிடித்துப் பட்சிக்கச் சமயம் வாய்த்ததென்று ஓநாய் எண்ணி அதனுடன் சண்டை தொடுக்கத் தொடங்கியது.

ஓநாய்—வெகு தொலையினின்று தாகம் சகிக்க ஆற்றாமல் இந்தக் கடுவெயிலில் துடிக்கப்பதைக்க ஓடிவந்த என்னைத் தாகந்தீரத் தெண்ணீர் குடிக்கவிடாமல் நீ ஏன் நீரைக் கலக்கிச் சேறாக்கிவிடுகிறாய்?

ஆட்டுக்குட்டி—(மிகுந்த பணிவுடன்) 'ஐயா, தாங்கள் சொல்வது எனது புல்லறிவிற்குச் சற்றாவது புலப்படவில்லையே! நான் ஆற்றில் இறங்கி நீரைக் கலக்கவில்லை; ஆற்றங்கரையில் நின்று தாகசாந்தி பண்ணுகின்றேன். தங்கள் சொற்படி தெண்ணீரைக் கலக்கினேனென்றே வைத்துக்கொள்ளினும் அதனால் தங்களுக்குக் குறை ஒன்று மில்லையே. தாங்கள் நிற்கின்ற இடம் மேடு, நான் நிற்கும் இடமோ பள்ளம். "வெள்ளம் பள்ளத்தை நாடும்" என்பது ஊருலகம் அறிந்தது. தாங்கள் நிற்கும் இடத்தினின்று இவ்விடத்திற்கு ஆறு பெருகி வருவதொழிய, இவ்விடத்தினின்று தங்களிடத்திற்குப் பெருகி

வரவில்லையே. அப்படியிருக்க ஏன் என்மேற் பழி போட்டு என்னைக் கொல்லாமற் கொல்லுகின்றீர்கள்?'

இவ்வண்ணம் ஆட்டுக்குட்டி உரைத்த உண்மையை மறுத்து எதிர்வார்த்தை சொல்ல ஓநாய்க்கு நா எழவில்லை. ஆனதுபற்றி அது இந்த வழக்கை நிறுத்திவிட்டு,

'நல்லது, இது போகட்டும்; ஆறுமாசத்திற்குமுன் நீ என்மேல் நிந்தை சொல்லி என்னைத் தூற்றியதாக நம்பத் தக்க சத்தியவந்தர்களால் எனக்குக் கேள்வி. இது வரையில் நீ என் கண்ணுக்கு எதிர்ப்படவில்லை. இன்று தற்செயலாய் உன்னைக் கண்டதனால் உன் வாய்மதம் அடங்க உனக்குச் சிட்சைசெய்து புத்தி வருவிக்கத் தான் வேண்டும். இதற்கு என்ன சொல்லுகிறாய்?' என்றது.

முன் சுமத்திய பழியிலும் இந்தப் பழி அபத்தமும் அசாத்தியமுமாயிருந்ததனால், பாம்பின் வாயில் அகப்பட்ட தேரையைப்போல நடுநடுங்கிய ஆட்டுக்குட்டி,

'பிரபு! எனக்குத் தீரா ஆபத்து நேர்ந்திருக்கின்ற இத்தருணத்தில் என்னைச் சீறிச் சினந்து பேசாமல், நான் சொல்லும் எளிய வார்த்தையைப் பொறுமையாய்க் கேட்டு, என் சொல்லையும் தங்கள் சொல்லையும் மனத்தராசில் தூக்கிப்பார்த்து, தோஷியென்று கண்டால் எனக்குத் தகுந்த சிட்சை செய்யுங்கள். சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா? நான் பிறந்து இன்னும் ஆறுமாசம் ஆகவில்லையே! நான் தங்கள்மேல் அவதூறு சொல்லியது வாஸ்தவமானால் நான் பிறக்குமுன் சொல்லியிருக்கவேண்டும். அதைக் கேட்டவர்கள் யார், என்னைக் கண்டவர்கள் யார், கண்டது எங்கே? சீமானே, நாளையும் நன்றாய் யோசித்துப் பாருங்கள்!' என்று கூறியது.

என்னதான் நியாயம் எடுத்துக்காட்டினும், மெய்யைப் பொய் வெல்லாதென்று ஐயமற உள்ளந் தேறக் கண்டறிந்த ஓநாய்க்கு ஆட்டுக்குட்டியின்மேல் கோபத் தீப் பற்றி எரிய,

'ஆனாலும் என்ன, பேதம் ஒன்றும் இல்லை; என்னைப் புறங்கூறினவன் நீ அல்லாவிட்டால், உன் அப்பன், சிற்றப்பன், பெரியப்பன், உன் பந்துக்களில் எவனாவது என்னைத் தூற்றியிருப்பான். நீயானாலும் என்ன, உன் உற்றார் உறவினரில் ஒருவனானாலும் என்ன, இரண்டும் ஒன்றுதான்' என்று சொல்லி, பாவம் பழி அறியாத திக்கற்ற ஆட்டுக்குட்டியை ஒரு பாய்ச்சலிற் பாய்ந்து கிழித்துப் பட்சித்தது.

40. உண்மையின் உயர்வு

தன் பதி இழந்தும், பெருமை இழந்தும், பாலனை இழந்தும் பொய் உரையாத அரிச்சந்திரனை அழைத்து, அவன் மனைவியின் தலையை அநியாயமாய் வெட்டும்படி இட்ட கட்டளையை அவன் நிறைவேற்ற நிற்கையில், ஓடி வந்து, 'அரசே! இப்போதாவது நீ ஒரு பொய் உரைப்பாயாகில் உம் துன்பம் எல்லாம் திரும்ப இன்பமாக மாறும்!' என்று சொல்லிய விசுவாமித்திர முனிவரை நோக்கி அவ்விருவரும் ஒன்றாய் உரைத்த உறுதிமொழி:-

1. "சேய்மை அண்மையில் உயிர்க்(கு)ஒரு
துணைஎனச் சிறந்த
வாய்மை யால்அகம் தூய்மைஆம்;
மற்(று)இலை. புறத்தைத்
தூய்மை செய்வது நீர் அலால்
சொல்லின்வே(று) உளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே
நோன்(பு)எமக்கு! அறிதி!

2. "புலைய னும்விரும் பாதஇப்
புன்புலால் யாக்கை
நிலைஎ னுமருண்(டு), உயிரினும்
நெடி(து)உறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம்
பிறழ்வது தரியேம்!
கலைஉ ணர்ந்தநீ எமக்(கு)இது
கழறுவ(து) அழகோ?

3. "இம்மை, அம்மை, வீ(டு) எனமறை
புலம்கொள இயம்பும்
மும்மை யும்தரு முறைஉடைத்(து)
எனும்நிலை முரணி,
எம்மை ஆழ்வயிற்(று) அடக்கி,மீட்(டு)
உமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர(கு) உய்க்கினும்,
மெய்மையை விடேம்ஆல்!

4. "பதிஇ ழந்தனம்! பாலனை
இழந்தனம்! படைத்த
நிதிஇ ழந்தனம்! இனிஎமக்(கு)
உள(து)என நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை
இழக்கிலேம்!" என்றார்;
மதிஇ ழந்து,தன் வாய்இழந்(து),
அருந்தவன் மறைந்தான்.

(அரிச்சந்திரன் சரிதை)

41. சிங்கமும் வெள்ளாடும்

ஓர் வனத்திலே இருந்த பிராணிகளையெல்லாம் அந்த வன அரசனாகிய சிங்கமானது பட்சித்துக்கொண்டே வந்தது. அதைப் பார்த்திருந்த ஓர் கிழ வெள்ளாடு மற்ற மிருகங்களைப் பார்த்து, 'நாம் இதற்கு ஓர் உபாயம் செய்யவேண்டும். இவ்வாறு அச்சிங்கம் செய்ய நாம் இடங்கொடுத்தல் தகாது; அக்கொடியவனை இந்நாட்டைவிட்டு ஓடும்படி செய்ய எனக்கு ஓர் உபாயம் தெரியும்' என்றது. அப்பொழுது மற்ற மிருகங்கள்

அனைத்தும் மிகவு மானந்தமடைந்து, 'நீர் உடனே அப்படிச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்' என்றன.

தைரியசாலியாகிய அக்கிழ வெள்ளாடு, பாதை மருங்கிலிருந்த குகையொன்றில், வளர்ந்து தொங்கிய தாடியோடும் நீண்டு வளைந்த கொம்புகளோடும் படுத்துக்கொண்டது. அப்பொழுது அம்மார்க்கமாய்ச் சென்ற மிருகேந்திரன் இதைக் கண்டு அந்தக் குகையின் பக்கத்தே சென்றது. அதைக்கண்ட கிழ வெள்ளாடு, 'சரிதான், என் எண்ணம்போலவே நீயே இங்கு வந்துவிட்டாய், இதுவும் என் பாக்கியந்தான்' என்றது. இந்த வார்த்தையைக் கேட்ட வனவரசன், 'நீ யாது சொல்லுகின்றாய்?' என்று வினவியது. கிழ வெள்ளாடு பிரதியுத்தரமாக, 'என்ன, நீ அப்படிக் கேட்கின்றாய்? யான் இந்தக் குகையில்,நெடுநாளாகப்படுத்துக்கொண்டிருக்கின்றேன். மேலும் இதுநாள்வரையிலும் யான் நூறு யானைகளையும், நூறு கடுவாய்ப் புலிகளையும், ஆயிரம் ஓநாய்களையும், தொண்ணூற்றொன்பது சிங்கங்களையும் தின்று ஏப்பம் விட்டிருக்கின்றேன்! யான் பட்சிக்க இன்னும் ஓர் சிங்கந்தான் வேண்டியது! யான் அதற்கென்று வெகு பொறுமையுடன் வெகுநாளாய்க் காத்திருந்தேன். இன்று தேவாநுக்கிரகத்தினால் நீ வந்து எனக்குப் பலித்தாய்!' என்று சொல்லிக் கொம்புகள் ஆடவும் தொங்கிய தாடி அசையவும் தன் ஜடைபற்றிய தேகத்தைக் குலுக்கிச் சிலிர்த்து சிங்கத்தின்மீது பாய்வதுபோல நடித்தது.

இதெல்லாவற்றையும் கவனித்த சிங்கம், 'இதைப் பார்த்தாலோ வெள்ளாடுபோல் தோன்றுகின்றது! பேச்சோ வெள்ளாட்டின் பேச்சுப்போல் தோன்றவில்லை! ஏதோ ஓர் துஷ்டப்பேய் இந்த உருவங்கொண்டு வந்திருக்

கின்றது! இதை எதிர்த்துப் போர்புரிவதிற் பிரயோஜன மில்லை! பராக்கிரமத்தைவிட புத்தியே அதிக மேலான தாய்ப் பயன்படும்! ஆதலால், பராக்கிரமத்தைப் பாராட்டாமல் இக்கணமே காட்டுக்குத் திரும்பிவிடுவது யுக்தம்!' என்று எண்ணிக்கொண்டு பின்வாங்கிற்று. அப்பொழுது அந்த முழையிற் படுத்துக்கொண்டிருந்த வெள்ளாடானது சிங்கத்தைப் பின்னும் திகிலுறச் செய்யவெண்ணி, 'ஏ, சிங்கமே! எனக்கோ பசி அதிகமாயிருக்கின்றது! ஆயினும் நீ இவ்வனத்தில் இனிமேற் பிரவேசிப்பதில்லை என்று உறுதி செய்வாயாயின், உன்னைத் தீண்டாது விடுவேன்!' என்றது. கேசரி உயிர் பிழைத்தாற் போதுமென்றெண்ணி, 'ஐயனே! தம்மைப்போன்ற பெரியோர் வசிக்கும் இவ்வனத்திற் பரம துஷ்டனாகிய யான் சஞ்சாரஞ் செய்தல் தகாது! யான் இதைச் சிறிதும் சிந்தியாது செய்த அபசாரத்தை மன்னித்து என்னைத் தப்பியோட விடுவீராயின் யானாவது என்னைச்சேர்ந்த என் சுற்றத்தாராவது மீண்டும் இவ்வனத்தை நண்ணோம்!' என மொழிந்தது. பராக்கிரமசாலிபோற் பாசாங்கு செய்த வெள்ளாடு சிங்கம் தொலைந்தாற் போதுமென்றெண்ணி அதன் வேண்டுகோளுக் கிசையவே, சிங்கமும் தன் இனத்துடன் அவ்வனத்தை விட்டு முற்றிலும் நீங்கியது.

இனிய நாற்பது

1. ஏவது மாறா இளங்கிளை முன்இனிதே;
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே;
ஏர்உடையான்வேளாண்மை தான் இனி(து); ஆங்(கு)
தேரில்கோள் நட்புத் திசைக்கு. [இனிதே

2. கடம்உண்டு வாழாமை காண்டல் இனிதே;
நிறைமாண்(பு)இல் பெண்டிரை நீக்கல் இனிதே;
மனமாண்(பு) இலாதாரை அஞ்சி அகறல்
எனமாண்பு தான்இனிது நன்கு.

3. அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே;
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே;
உயிர்சென்று தான்படினும் உண்ணார்கைத்(து)உண்
பெருமைபோல் பீ(டு)உடைய(து) இல். [ணுப்

4. கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே;
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

5. நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே;
பட்டாங்குபேணிப்பணிந்(து)ஒழுகல்முன்னினிதே;
முட்(டு)இல் பெரும்பொருள் ஆக்கியக்கால், மற்(று)
தக்குழி ஈதலே நன்று. [அது

6. சலவரைச் சாராவிடுதல் இனிதே;
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே;
மலர்தலை ஞாலத்து மன்உயிர்க்(கு) எல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது.

7. வெல்வதுவேண்டிவெகுளாதான்நோன்(பு)இனிதே;
ஒல்லும் துணையும்ஒன்(று) உய்ப்பான் பொறை
இல்லது காமுற்(று) இரங்கி இடர்ப்படார் [இனிதே;
செய்வது செய்தல் இனிது.

8. ஐவாய வேட்கை அவா அடக்கல் முன்இனிதே;
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கண் தீர்(வு)
நில்லாத காட்சி நிறைஇல் மனிதரைப் [இனிதே;
புல்லா விடுதல் இனிது.

9. கயவரைக் கைஇகந்து வாழ்தல் இனிதே;
உயர்(வு)உள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
எளியவர் இவர்என்(று) இகழ்ந்து உரையார் ஆகி
ஒளிபட வாழ்தல் இனிது.

(பூதஞ்சேந்தனர்)

செய்யுள் நூல்களின் வரலாறு

அரிச்சந்திரன் சரிதை

இந்நூல் 'அரிச்சந்திரன் சரிதம்' அல்லது 'அரிச்சந்திர புராணம்' என்றும் சொல்லப்படும். 'புராணம்' என்பதற்கு இங்கே பழைய சரிதை என்பது பொருள். இந்நூல் 1215 விருத்தப்பாடல்கள் கொண்டது.

இதன் ஆசிரியர் வீரர் என்பவர். இவர் பாண்டிய நாட்டைச்சேர்ந்த நல்லூரில் 400 ஆண்டுகளுக்குமுன்னே இருந்தவர். அங்கு அக்காலத்தே விரைவாகக் கவிபாட வல்லவர் பலரிலும் இவர் சிறந்து விளங்கியதால் இவரை நல்லூர் வீரர் ஆசுகவிராசர் என்பர். இவர் சம்ஸ்கிருதமாகிய வடமொழியிலும் வல்லவர். அம்மொழியில் பலர் இயற்றிய அரிச்சந்திரன் கதைகளையும், அக்காலத்தில் தமிழில் இருந்த 'அரிச்சந்திர வெண்பா' என்னும் சிறந்த நூலையும் கண்டு இவர் இந்நூலைப் பாடியுள்ளார்.

இவர் சைவர். ஆயினும் இவர் விஷ்ணுவை வெறுப்பவர் அல்லர். ஆகையால், பாண்டியநாட்டுக் கடற்கரையில் இராமநாதபுரத்திற்குத் தெற்கே ஒன்பது மைல் தூரத்திலுள்ள திருப்புல்லாணி என்னும் பேர்பெற்ற விஷ்ணுஸ்தலத்திற்கு இவர் சென்று, அங்கே கலியாண ஜகநாதப்பெருமாள் சந்நிதிக்கு அருகிலிருக்கும் சக்கர தீர்த்த மண்டபத்தில் தமது நூலை அரங்கேற்றினர்.

அவ்வையார்

'உழவுத்தொழில் சிறந்ததோ?' என்று தம்மை வினவிய ஒருவர்க்கு அவ்வையார் என்னும் புலவர் பெருமாட்டியார் விடையாகக் கூறிய பாடல் இது என்பர்.

அவ்வையார் பாடியதாகச் சொல்லப்படும் வேறு சில தனிப்பாடல்களும் உண்டு. இவற்றைத் தவிர பழைய தமிழ்நூல்கள் நான்கில் இவருடைய அருமையான பாடல்கள் 59 காணப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, விநாயகர் அகவல், ஞானக்குறள் முதலிய பல நூல்களையும், அவ்வையார் தனிப்பாடல்கள் என்று இக்காலத்து வழங்கும் பாடல்களில் பலவற்றையும் பாடியவர் இவரல்லர் என்பது ஆராய்ச்சியினால் தெரிகின்றது.

இவர் உக்கிரப்பெருவழுதி என்னும்பாண்டியன் காலத்தில் இருந்தவர். அக்காலம் இன்னது என்பது இன்னும் உறுதியாக ஏற்படாததால், பலர் அதைப் பலவாறாகக் கூறுவர். ஆயினும் அக்காலம் 1800 ஆண்டுகளுக்குமுன் என்பது பலருடைய கொள்கை.

அவ்வையார் அதிகமான் என்னும் சிற்றரசனுடைய சபைப்புலவர். அவ்வரசன் சேரர் குலத்தைச் சேர்ந்தவன்; மைசூரிலுள்ள தகடூரை ஆண்டுவந்தவன். அவனையும் அவன் மகனையும் அவர் மிகவும் பாராட்டிப் பாடியுள்ளார்.

அரசாங்க முறையிலும் அவ்வையார் அவ்வரசனுக்கு மிக்க உதவிசெய்ததாகத் தெரிகின்றது. காஞ்சிபுரத்தை அக்காலத்தில் ஆண்ட தொண்டைமானிடம் அவர் அதிகமானுக்காக ஒருமுறை தூது சென்றார். தம் காலத்திலிருந்த பெரிய தமிழ் வேந்தராகிய சேர சோழ பாண்டியர் மூவரும் ஓரிடத்திற் கூடியிருந்தபோது, அவரை வாழ்த்திப்பாடும் அளவில்லாத பெருமையும் அவ்வையார் பெற்று விளங்கினார்.

இனிய நாற்பது

பாடல்களால் ஆகிய நூல்களை முற்காலத்தில் 'கணக்கு' என்பர். அது 'கீழ்க்கணக்கு' என்றும் 'மேற் கணக்கு' என்றும் இருவகைப்படும். மானிடர் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும்பற்றிச் சொல்லும் வெண்பாக்கள் 40-க்குக் குறையாமலும் 1330-க்கு மிகாமலும் உள்ள நூல்கள் கீழ்க் கணக்காகும். அவ்வகையைச் சேர்ந்த நூல்கள் பதினெட்டில் 'இனிய நாற்பது' ஒன்று. இதனை 'இனியவை நாற்பது' என்றும் சொல்வர். இவை இவை இனிய என்று கூறும் 40 பாடல்கள் இருப்பதால் இதற்கு இப் பெயர் ஆயிற்று. கீழ்க்கணக்கில் 'இன்னா நாற்பது' என்னும் மற்றொரு நூலும் உண்டு.

இனிய நாற்பது இயற்றியவர் பூதஞ்சேந்தனார். இவர் தந்தையார் மதுரையில் தமிழ் ஆசிரியராய் இருந்தவர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளையும் இந்நூலாசிரியர் ஒப்பக்கருதுகின்றவர்.

பூதஞ்சேந்தனார் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் காலத்தில் இருந்தவர். அக்காலம் இன்னும் உறுதியாக ஏற்படாததால், பலர் அதைப் பலவாறாகக் கூறுவர். ஆயினும் அது 1800 ஆண்டுகளுக்குமுன் என்பது பலருடைய கொள்கை.

ஏர் எழுபது

ஏர்த்தொழிலின் சிறப்பைப்பற்றிய 70 பாடல்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் இதைப் பாடினார் என்பர்.

இவரைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவர். இவர் சோழமண்டலத்தில் இருந்த கம்பநாட்டை ஆண்டுவந்த

சிற்றரசர் என்றும், சூரியகுல மன்னராகிய சோழர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், அதனாலேதான் இவர் தமது குலப்பெரியாராகிய இராமர் கதையைப் பாடியதும் அக்கதையை அங்கங்கே அபிமானத்தால் மாற்றியதும் என்றும் சிலர் கூறுவர். ஸ்ரீரங்கத்தில் மேட்டழகர் சந்நிதியில், கம்பர் மண்டபத்துத் தூண் ஒன்றில், கம்ப நாடுடைய இவ்வள்ளலுடைய கல்லுருவம் ஒன்று இந்நாளும் காட்டப்படுகின்றது. பெரிய குடுமியும், அஞ்சத்தக்க நோக்கும், பரந்த முகமும், எடுத்த கழுத்தும், பெருந்தோளும், அகன்ற மார்பும், நீண்ட கரமும், பல அணிகளும் பெற்று அவ்வுரு விளங்கும்.

'கம்ப சூத்திரம்,' 'கல்வியிற் பெரியர் கம்பர்,' 'கம்பனிடைப் பெருமை உளது,' 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிசொல்லும்' முதலிய சொல் வழக்குகளும் இவர் பெருமையைக் காட்டும். இவர் வைஷ்ணவர், ஆயினும் சிவனை வெறுப்பவர் ஆகார்.

'சடகோபர் அந்தாதி,' 'சரஸ்வதி அந்தாதி' முதலிய வேறு சில சிறு நூல்களும் இவர் பாடினர் என்பர். ஆனாலும், 'கம்பராமாயணம்' என்று வழங்கும் இவருடைய பெரிய நூலாகிய இராம கதையே எல்லாராலும் பெரிதும் பாராட்டப்படுகின்றது. கம்பர் விருத்தம் பாடுவதில் வல்லவர்.

சோழமண்டலத்துக்கு வடக்கே இருந்த ஓரங்கல் நாட்டு அரசனாகிய முதலாம் பிரதாபருத்திரன் காலமே இவர் காலம் என்பர். அது ஏறக்குறைய 750 ஆண்டுகளுக்கு முன்னே ஆகும். கம்பர் சமாதி நாட்டரசன் கோட்டை என்னும் இடத்தில் இருப்பதாகக் கேள்வி.

கபிலர் அகவல்

பகவன் என்னும் பிராமணனுக்கும் ஆதி என்னும் புலைச்சிக்கும் கபிலர், உப்பை, உறுவை, அவ்வை, வள்ளி, வள்ளுவர், அதிகமான் என்னும் ஏழு குழந்தைகள் பிறந்தன என்றும், பெற்றோர் அவற்றை அங்கங்கே விட்டுப் போய்விட்டதால் அருள் உடைய சிலர் அவற்றைக் கண்டெடுத்துவளர்த்துவந்தனர் என்றும், கபிலரை வளர்த்த பிராமணர் ஏற்ற காலத்தில் அவருக்குப் பூணுநூற் சடங்கு செய்ய நினைத்துத் தம் இனத்தாரை அழைக்க, அவர் எல்லாரும் கூடிவந்து, 'உம்முடைய வளர்ப்புப் பிள்ளை எக்குலத்திற் பிறந்ததோ தெரியவில்லை, ஆகையால் அதற்கு இச்சடங்கு செய்ய உம்மை விடமாட்டோம்' என்று தடுத்ததைக் கண்ட கபிலராகிய சிறுவர் அந்த பிராமணர்களுக்கு புத்திமதியாக ஒரு நெடும் பாட்டுப்பாடி அவர்கள் வாயை அடக்கித் தமது உபநயனத்தை முடித்துக்கொண்டனர் என்றும் ஒரு கட்டுக் கதை உண்டு.

அக்கதையைத் தழுவி எவரோ ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்னே இச்சிறு நூலைப் பாடியிருக்கின்றார். என்றாலும் பல அழகான அடிகளும் பல நல்ல கருத்துக்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இது 135 அடிகள் கொண்ட ஒரே அகவல் உடைய சிறு நூல்.

குசேலோபாக்கியானம்

இந்நூலின் பெயர் குசேல உப ஆக்கியானம் என்னும் வடமொழிகளால் ஆயது; குசேலர் கிளைக்கதை என்னும் பொருள் உடையது. குசேலர் என்பவர் கிருஷ்ண பகவானுடன் கற்றவர். பகவான் சரிதத்தைச் சொல்வதால் 'பாகவதம்' எனப்படும் பெருநூலில் குசேலர்

சரிதம் ஒரு பிரிவு ஆனதால் இது இப்பெயர் பெற்றது. இந்நூல் 773 பாடல்கள் கொண்டது.

இதைச் செய்தவர் தேவராஜபிள்ளை என்னும் பெரும் புலவர். இவர் தொண்டை நாட்டு வல்லூரில் 80 ஆண்டுகளுக்கு முன்னே கணக்கர் குலத்தில் தோன்றி, திரிசிரபுரம் மகா•வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்று பெரிதும் கல்விகற்று விளங்கியவர். தமது குலத்துப் பெரியார் சிலர் வேண்ட இவர் இந்நூலைப் பாடியருளினார். இவர் வைஷ்ணவர்.

திருவள்ளுவர்

இப்பெயர் இந்நூலுக்கு இதனை ஆக்கியோர் பெயரால் உண்டாயது. இரண்டு அடிகளை யுடைய 'குறள்' என்னும் வெண்பாக்களால் இந்நூல் முற்றும் ஆகியதால், இதனை இக்காலத்தில் 'திருக்குறள்' என்றே பெரும்பாலும் சொல்வர். இந்நூலுக்கும் இவ்வாசிரியருக்கும் வேறு பல பெயர்களும் உண்டு. இதில் 133 அதிகாரங்களும், அதிகாரம் ஒவ்வொன்றுக்குப் பத்துப்பத்துக் குறள்களும் இருக்கின்றன.

பாடல்களால் ஆகிய நூல்களை முற்காலத்தில் 'கணக்கு' என்பர். அது 'கீழ்க்கணக்கு' என்றும் 'மேற்கணக்கு' என்றும் இருவகைப்படும். மானிடர் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பற்றிச்சொல்லும் வெண்பாக்கள் 40-க்குக் குறையாமலும் 1330-க்கு மிகாமலும் உள்ள நூல்கள் கீழ்க்கணக்காகும். அவ்வகையைச் சேர்ந்த நூல்கள் பதினெட்டில் திருக்குறள் ஒன்று.

பெரும்பாலும் அரசர்க்கென்று பாடிய இந்நூல் அனைவர்க்கும் உதவுகின்றது. இதன் சிறப்பை நோக்கி

இதைப் பல ஐரோப்பிய பாஷைகளிலும் மொழிபெயர்த்திருக்கின்றனர். 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி,' 'காண்மின் பழகு தமிழ்ச்சொல் அருமை நால் இரண்டில்' என்னும் சொல்வழக்குகளும் இந்நூலின் பெருமையை ஒருவாறு காட்டும். இங்கு 'நால்' என்பது நான்கடிப் பாடல்களால் ஆகிய நாலடி நானூற்றையும், 'இரண்டு' என்பது இரண்டடிப் பாடல்களால் ஆகிய திருக்குறளையும் குறிக்கும்.

இதனைப் பாடிய திருவள்ளுவதேவர் சென்னையைச் சேர்ந்த மயிலாப்பூரிலும் பின்பு மதுரையிலும் வாழ்ந்திருந்தவர் என்பர்.

சேரர்களுக்கு நண்பன் ஆன ஒருவன் முற்காலத்தில் நாஞ்சில் என்னும் மலையிற் சிற்றரசனு யிருந்தான். அவன் பெரிய கொடையாளி யாகையால் அவனுக்கு 'வள்ளுவன்' என்பது பெயர். அன்னதானம், சுவர்ண தானம், பூதானம், கோதானம், கன்னிகாதானம் முதலிய எல்லா தானங்களிலும் வித்தியாதானம் சிறந்தது; அந்த வித்தியாதானத்திலும் தருமவித்தியாதானம் சிறந்தது. ஆகையால், உலகத்திற்கு என்றும் பயன் படும்படி இந்த அருமையான அறநூலை அளித்தருளிய பெரிய கொடையாளியாகிய இவ்வாசிரியர்க்கும் 'திருவள்ளுவர்' என்பது பெயராயிற்று.

இவரை பௌத்தர், வைஷ்ணவர், சைவர், கிறிஸ்தவர் என்று பலர் பலவாறாகக் கூறுவராயினும், இவரைச் சமணர் என்று சொல்லுவதற்கே பல பெருங்காரணங்கள் உள்ளன என்று ஆராய்ச்சிப் பெரியார் கூறுகின்றனர்.

திருவள்ளுவர் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் காலத்தில் இருந்தவர் என்பர். அக்காலம் இன்னும் உறுதியாக ஏற்படாததால், பலர் அதைப் பலவாறாகச் சொல்லுவர். ஆயினும் அது 1800 ஆண்டுகளுக்கு

முன் என்பது பலர் கொள்கை. திருவள்ளுவர் சமாதி மதுரைக் குப்பைமேட்டில் இருப்பதாகச் சிலர் சொல்லுகின்றனர்.

நாலடி நானூறு

'நாலடி' என்பதும், உயர்வைக் காட்டும் 'நாலடியார்' என்பதும் இந்நூலின் மறுபெயர்களாக வழங்குகின்றன.

பாட்டுக்களால் ஆகிய நூல்களை முற்காலத்தில் 'கணக்கு' என்பர். அது 'கீழ்க்கணக்கு' என்றும் 'மேற்கணக்கு' என்றும் இருவகைப்படும். மானிடர் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பற்றிச் சொல்லும் வெண்பாக்கள் 40-க்குக் குறையாமலும் 1330-க்கு மிகாமலும் உள்ள நூல்கள் கீழ்க்கணக்காகும். அவ்வினத்தைச் சேர்ந்த நூல்கள் பதினெட்டில் நாலடி நானூறும் ஒன்று.

பஞ்சம் பிழைக்கப் பாண்டியனிடம் மதுரைக்குச் சென்றிருந்த சமண முனிவர் பலர் பஞ்சம் தீர்ந்து திரும்பிப் போகும்போது, தாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டை எழுதித் தாம் இருந்த மண்டபத்தில் வைத்துவிட்டுப் போக, அரசன் அவர்கள் ஏடுகளை எல்லாம் வாரி வைகை ஆற்றில் எறிந்ததாகவும், அவற்றில் 400 பாடலுள்ள ஏடுகள் நீருக்கு எதிர் நாலடி ஏறிச்சென்றதாகவும், அவற்றை எடுத்துச் சேர்த்து ஒரு நூலாக்கி நாலடி நானூறு என்று பெயரிட்டதாகவும் ஒரு கதை வழங்கி வருகின்றது. இந்நூலைப் பாடியவர் பலர் என்று ஏறக்குறைய எல்லோரும் இக்காலத்தில் நம்புவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துப்பத்துப் பாடல் விழுக்காடு இட்டுப் பாடப்பட்ட திருக்குறளைப் பார்த்து, அவ்வாறு பாடப்படாத இந்த 400 பாட்டையும் பத்துப்பத்துள்ள 40 அதிகாரங்க

ளாகப் பல ஆண்டுகளுக்கு முன்னே எவரோ வகுத்து விட்டனர். அதனுல் அந்தந்த அதிகாரத்திற்குப் பல பாடல்கள் சிறிதும் பொருந்தாமையைக் கண்டு, இப் பாடல்களைப் பாடியவர் பலராதல்வேண்டும் என்று பலரும் எண்ணிவிட்டனர். இந்த சமண நூலைப் பாடியவர் ஒருவரேயென்று எழுதியுள்ள பெரியோர் கொள்கையே ஆராய்ச்சியில் உறுதிப்படுகின்றது. அக்காலத்திலுள்ள நாலடிப் பாக்களில் மிகவும் சிறந்த நானூறு கொண்டதால் இதற்கு இப்பெயர் வந்தது.

'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி,' 'காண்மின் பழகு தமிழ்ச் சொல் அருமை நால் இரண்டில்' என்னும் சொல்வழக்குகளும் இந்நூலின் பெருமையை ஒருவாறு காட்டும். இங்கு 'நால்' என்பது நான்கடிப் பாடல்களால் ஆகிய நாலடி நானூற்றையும், 'இரண்டு' என்பது இரண்டடிப் பாடல்களால் ஆகிய திருக்குறளையும் குறிக்கும்.

இந்நூல் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் காலத்தில் தோன்றியதாகச் சொல்வர். அக்காலம் இதுவென்று இன்னும் ஏற்படாததால், பலர் பலவாருகக் கூறுவர். அக்காலம் 1800 ஆண்டுகளுக்குமுன் என்பதே பலருடைய கொள்கை.

நான்மணிக்கடிகை

நான்கு இரத்தினத் துண்டுகள்போல அருமையான நான்கு விஷயங்களை இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் கூறுவதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இதில் 101 வெண்பாக்கள் உண்டு.

பாட்டால் ஆகிய நூல்களை நம் முன்னோர் 'கணக்கு' என்பர். 'கீழ்க்கணக்கு', 'மேற்கணக்கு' என்று அது இரு வகைப்படும். நாம் அடையவேண்டிய அறம், பொருள்,

இன்பம், வீடு என்னும் நான்கையும்பற்றிக் கூறும் வெண்பாக்கள் 40-க்குக் குறையாமலும் 1330-க்கு மிகாமலும் உள்ள நூல்கள் கீழ்க்கணக்காகும். அவ்வகை நூல்கள் பதினெட்டு. அவற்றில் நான்மணிக்கடிகை ஒன்று.

இதைப் பாடியவர் விளம்பி நாகனார் என்பவர். இவர் விஷ்ணு பக்தி மிக்கவர். உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னர் காலத்தில் இவர் இருந்தவர் என்றும் அக்காலம் 1800 ஆண்டுகளுக்கு முன்னேயாகும் என்றும் பலர் கூறுகின்றனர்.

பஞ்சதந்திரப் பாடல்

ஓர் அரசனுடைய குமாரர்களுக்குக் கதைகள் மூலமாய் ராஜதந்திரங்களை போதிப்பதற்கு ஆதியில் வடமொழியில் உண்டான 'பஞ்சதந்திரம்' என்னும் நூலை வீரமார்த்தாண்ட தேவர் என்பவர் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னே 545 தமிழ்ப் பாடல்களாற் செய்தார். அதுவே பஞ்சதந்திரப் பாடலாகும். பஞ்சதந்திர வசனமும் தமிழில் உண்டு.

தந்திரம் என்பது நூல். இது ஐந்து சிறு நூல்களைக் கொண்டதொன்று, ஆகையால் பஞ்சதந்திரம் எனப் பெயர் பெற்றது. பல கிளைக்கதைகள் உள்ள ஐந்து தொகுதிகள் இதில் இருப்பதால், 'பஞ்சோபாக்கியானம்' என்பதும் இதற்குப் பெயர். ஐந்து தந்திரங்கள் ஆவன: மித்திரபேதம் அல்லது சிநேகத்தைக் கெடுத்தல், சுகிர்ல்லாபம் அல்லது நற்சிநேகம் பெறுதல், சந்திவிக்கிரகம் அல்லது பகைவரை உறவாடிக் கெடுத்தல், அர்த்தநாசம் அல்லது தன் பொருளை அழித்தல், அசம்பிரேக்ஷிய காரித்துவம் அல்லது ஆராயாமல் ஒரு காரியத்தைச் செய்தல்.

செய்யுள் அரும்பத அகராதி

அஃகும்—குறையும்
அகம்—மனம்
அகறல்—அகலுதல்
அடல்—வலிமை
அடவி—காடு
அடிசில்—உணவு
அடைகுவனே கொல்—அடைவானே
அண்ணிது—சமீபமானது
அண்மை—தற்காலம்
அதர்—காட்டுவழி
அம்மை—பிற்கால நன்மைகள்
அமைவு உடைய—தகுதி உள்ள நூல்கள்
அருந்தி—தின்று
அளிக்குறும்—அருள் செய்யும்
அறிதி—அறிந்துகொள்
ஆகரம்—இருப்பிடம்
ஆல்: அர்த்தம் இல்லை
ஆற்ற—மிகவும்
ஆற்றும்—செய்யும்
ஆறு—வழி
இசை—புகழ்
இடர்—துன்பம்
இப்பால்—இப்போது
இம்மை—தற்கால நன்மைகள்
இமைக்கும்—விளங்கும்
இயம்பும்—சொல்லும்
இயல் இசை நாடகம்—3 வகைத் தமிழ்
இரப்பவர்—யாசிப்போர்
இலை—இல்லை
இறைஞ்சி—வணங்கி
ஈட்டி—சம்பாதித்து
உஞற்றுவனேல்—செய்வானாகில்
உடல்—வருத்தும்
உண்டால்—உண்டு
உணர்தர—அறியும்படி
உப்பால்—பிறகு
உய்க்கினும்—விழச்செய்தாலும்
உய்த்தல்—முற்றும் நடத்தல்
உய்யும்—பிழைக்கும்
உயிர்த்தல்—குளிரால் வாய்விடல்
உலைவு—வருத்தம்
உழந்தும்—கஷ்டப்பட்டாலும்
உள்ளி—நினைத்து
உற்றிடும் கொல்லோ—உண்டாகுமோ
உறு—பெரிய
உறுதுயர்—மிக்க துன்பம்
உறும்—அடையும்
ஊதியம்—வரும்படி
ஊன்—மாமிசம்
எடுப்பெடுத்து—பொய் சொல்லி
எரிவாய்—நெருப்பால் உண்டான
என் கொல்—என்ன
எனை மாண்பு—எவ்வகைப் பெருமை
ஐவாய்—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளிலுள்ள
ஒல்லும் துணை—கூடியவரை
ஒளி—புகழ்
ஓர்ந்து—அறிந்து
கசடு—குற்றம்
கட்டுரை—உண்மை

கடம்—கடன்
கதிரோன்—சூரியன்
கயவர்—அற்பர்
கரி—சாட்சி
கரிசு—குற்றம்
கலிகடந்த—வறுமையை அகற்றிய
கலை—கல்வி
கழறுவது—சொல்வது
கழிமடம்—மிக்க அறியாமை
கனைகுரல்—உரத்த குரல்
காட்சி—அறிவு; ஞானம்
காந்தன்—கணவன்
காமுறல்—விரும்பல்
கார்—அழகு
காராளர்—வேளாளர்
கிளை—சுற்றத்தார்
கீழ் நாலு சாதி—வாழ் நான்கு சாதிக்கலப்பால் உண்டான அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர்.
குதர்—கோணல் வழி
குமரி—கன்னியாகுமரித் தீர்த்தம்
குருகின்—பறவையைப்போல
கூடல்—மதுரை
கையிகந்து—விட்டு நீங்கி
கொடு—கொண்டு
கோமான்—அரசன்
கோள்—தன்மை
கோள் நட்பு—பெருஞ்சிநேகம்
சலவர்—வஞ்சனையுடையவர்
சாற்றரும்—சொல்லமுடியாத
சீலம்—நல்லொழுக்கம்
சுழன்றும்—வேறு வேலைகள் செய்து திரிந்தாலும்
செருக்களம்—போர்க்களம்
செருக்கும்—மதம் கொண்டு அடிக்கும்
செறியும்—நெருங்கிய
செறு—கோபம்
சேய்மை—பிற்காலம்
ஞாலம்—உலகம்
தக்குழி—தகுந்த இடம்
தகவு—தகுதி
தத்துவம்—உண்மை
தரணி—பூமி
தரியேம்—சகியோம்
தலை—தலைமையான தொழில்
தலைமை சேர்தரு—தலைமைபெற்ற
தாத்திரி—பூமி
தாள்—பாதங்கள்
தானை—சேனை
திரு—செல்வம்
திருவினை—செல்வத்தை
திறன்—நற்குணங்கள்
துகள்—குற்றம்
துணை—அளவு
துய்யன்—பரிசுத்தன்
துரவு – கிணறு
துலங்கும்—விளங்கும்
துளங்கி—நடுங்கி
தூய்மை—பரிசுத்தம்
தென்னவன்—பாண்டியன்
நவில்வார்—சொல்வார்
நவை—குற்றம்; வீண்
நன்கு—மிகுதி
நனி—மிகவும்
நிலைமுரணி — தன் இயல்புக்கு விரோதமாய்
நிற்க—நடக்க
நிறீஇ—நிலை நிறுத்தி
நிறை—கற்பு; மன அடக்கம்
நெடிதுஉற—மிக்க அதிகமாக
நோய்மை—துன்பம்
நோற்றான்கொல்—நோன்பு செய்தானோ
பங்கம்—சேறு

பட்டாங்கு—உண்மை
படரும்—செல்லும்
படி—நாழி
படை—சேனை
பதி—நகரம்
பவம்—பாவம்
பாடு—ஒளி
பார்—உலகம்
பீடு—பெருமை
புகலாய்—சொல்லு
புல்லுதல்—சேர்தல்
புலம்கொள—அறிந்துகொள்ள
புலால்—மாமிசம்
புலை—பொல்லாங்கு
புறம்விடல்—தள்ளிவிடல்
புனல்—நீர்
பேழை—பெட்டி
பைங்கோலம்—பசுமையான அழகிய
பொங்கு ஓதை—மிக்க ஓசை
பொரும்—போர் செய்யும்
பொற்பு—மேன்மை
பொறை—பொறுமை
மருண்டு—மயங்கி
மறுவுறு—அடையும்
மலர்தலை—அகன்ற இடம்
மறை—வேதங்கள்
மறையவர்—பார்ப்பார்
மன்—பொருந்து
மன்றம்—ஊர்க்கு நடுவே பரதேசிகள் தங்குமிடம்
மாண்பு—பெருமை
மாணு—மேன்மையில்லாத
மானே—பெரியோனே
மிடல்—பலம்
முட்டு—குறைவு
முடி—நாற்று
மும்மையும்—மூன்றையும்
முழை—குகை
முறைஉடைத்து—தன்மைஉடையது
யாக்கை—உடம்பு
வரைந்து—நீக்கி
வழிபடு—வணங்கு
வழுதி—பாண்டியன்
வாய்மை—உண்மை
வால் அறிவு—மெய்யான அறிவு
வாவி—குளம்
வாழ் நான்கு சாதி—பார்ப்பார், அரசர், வைசியர், வேளாளர்
விலங்கு—மிருகங்கள்
வீடு—மோட்சம்
வெகுளல்—கோபம் கொள்ளல்
வெம்மை கூர்—உஷ்ணம் மிக்க
வெருவி—பயந்து
வேட்கை—ஆசை
வேழம்—யானை
வேள்வி—யாகங்கள்

சென்னை-600 008
149544.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1932. B 5513.

Approved by the Director of Public Instruction

சென்வண வித்தியா அதிகாரி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவை

கிறிஸ்தவக் கல்வி அபிவிருத்தி சங்கத்தார் (C. L. S.) அச்சிட்டு வெளியிட்டிருக்கும் மூவகை **தமிழ் வாசகப் புத்தகங்கள்** பள்ளிக்கூட முகாமைக்காரர், ஆசிரியர் என்னும் இருதிறத்தவரானும் விசேஷமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. அடியிற்கண்ட முத்தொடர்ப் புத்தகங்களும் அரிதும் புதிதுமான அநேக விஷயங்களைத் தம்முள் அடக்கியிருப்பதுமன்றி, பள்ளிக்கூடங்களில் பற்பல வகுப்புகளுக்கேற்பச் சிறந்த தெள்ளிய நடையில் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகட்குப் பொருந்துமாறு எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அநேக அழகான படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை இவ்விராஜதானியில் மாத்திரமல்ல, தமிழ் வழங்கும் எந்நாட்டிலும் பயன்படவேண்டுமென்பதே எமது கோரிக்கை

(A) வித்தியா மாலிகை வாசக புத்தகங்கள்
VIDYA MALIKA SERIES

	அ.	பை.		அ.	பை.
பால பாடம் (1-ம் வகுப்பு)	1	6	மூன்றும் புத்தகம் (4-ம் வ.)	4	6
முதற் புத்தகம் (2-ம் வ.)	3	0	நான்காம் புத்தகம் (5-ம் வ.)	5	0
இரண்டாம் புத்தகம் (3-ம் வ.)	4	0	ஐந்தாம் புத்தகம் (5-ம் வ.)	7	0

(B) ஸி. எல். எஸ். தமிழ் வாசக புத்தகங்கள்
C. L. S. TAMIL STANDARD READERS

	அ.	பை.
முதற் பாடம் (முதல் வகுப்பு)	1	6
முதலாம் வாசக புத்தகம் (இரண்டாம் வகுப்பு)	3	0
இரண்டாம் வாசக புத்தகம் (மூன்றும் வகுப்பு)	4	0
மூன்றும் வாசக புத்தகம் (நான்காம் வகுப்பு)	4	0
நான்காம் வாசக புத்தகம் (ஐந்தாம் வகுப்பு) ...	4	6
ஐந்தாம் வாசக புத்தகம் (ஆறும் வகுப்பு—1-ம் பாரம்) ...	5	0
ஆறும் வாசக புத்தகம் (ஏழாம் வகுப்பு-2-ம் பாரம்) ...	5	0
ஏழாம் வாசக புத்தகம் (எட்டாம் வகுப்பு-3-ம் பாரம்) ...	7	0

(C) TAMIL READERS by S. G. DANIEL

முதற் புத்தகம்	2	6
மேற்படி இரண்டாம் பாகம் மாத்திரம்	1	6
இரண்டாம் புத்தகம்	3	0
மூன்றும் புத்தகம்	4	0
நானகாம் புத்தகம்	4	6
ஐந்தாம் புத்தகம்	5	0
முதற் புத்தக அனுபந்தம்	3	0

	ரு.	அ.	பை.
பாலர் பாடப் போதகன்: (The Tamil Alphabet Teacher) தகரப்பெட்டியுடன் ...	3	0	0
வார்த்தை அமைக்கும் விளையாட்டு	0	12	0
தமிழ் நெடுங்கணக்கு, படங்களுடன்	0	2	0

17 E. 5 M. T. 81½ M.